மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

மார்ச். 12 - 18, 2009


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 805



## பயங்கரவாதிகள் விளையாடிய லாகூர் டெஸ்ட்!

அம்பலமாகாத அதிர்ச்சிகள்



## "கந்தன் கருணை படுகொலை" யில் 'சுடர்ஒளி' வித்தியாதரனுக்குச் சம்பந்தமா?



## மத்திய கிழக்கில் இலங்கைப் பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள்!

## பசறை மக்களின் அவலம்; ஊதியம் கொடுக்காத ஊதாரி நிர்வாகங்கள்

## பாழ்பட்ட உறவுகளை இணைக்கிறது யாழ்தேவி



கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்



## "நிம்மதி கிடைக்கும் வழி"

**இந்து** சமயத்தில் மிக விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது மனிதன் புனிதனாக வாழ வேண்டும். மனித நேயத்தை இனிமையாகப் பேண வேண்டும். பாவ காரியங்களில் ஈடுபடக்கூடாது என்று மேலும் சைவப் புண்ணியங்களாகக் கொல்லாமை, கொன்றதைத் தின்னாமை, புலால் உண்ணாமை, தென் புலத்தார் கடன் செய்தல், பிதிர்க்கடன், விரதம் காத்தல், சிவபூசை செய்தல், மகேசுர குருபூசைகள் செய்தல், செய்வித்தல், புண்ணிய தல தீர்த்த யாத்திரை செய்தல் அத்தகையானோருக்கு உதவுதல், சைவ, சித்தாந்த, தேவார, திருவாசக, திருக்குறள் முதலான அறிவியல் நூல்களைப் படித்தல், அதன்படி ஒழுகுதல் ஆகியன சைவசமய சித்தாந்தமணியில் சொல்லப்பட்டுள்ளது. மகத்துவம், புனிதம் நிறைந்த சமயம் சைவம். மனிதனை மாண்புறு மனிதனாக வாழ வழிகாட்டும் அர்த்தமுள்ள சமயம் சைவம். இந்துமதத்தில் பிறந்து வளர்பவர்கள் சந்தோஷமாக வாழ சைவசமய வழிகளைப் பின்பற்றி வாழப் பழகுங்கள். நிச்சயமாக நிம்மதி கிடைக்கும்!

**சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்-06.**

## ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறு பெற்றோர்

**தமக்கு** அஞ்சி நடப்போரையும் தம் பேரன்புக்காகக் காத்திருப்போரையும் ஆண்டவர் கண்ணோக்குகின்றார். அவர்கள் உயிரைச் சாவினின்று காக்கின்றார். அவர்களைப் பஞ்சத்திலும் வாழ்விக்கின்றார்.
(திருப்பாடல்33-18-19)

தூய உள்ளங்களே எமது பரம தந்தையின் ஆசையை, விருப்பத்தைப் பாருங்கள். ஆண்டவரின் அன்புக்காகக் காத்திருப்போர் மேல் அவரின் ஒளி பிரகாசித்துக் கொண்டேயிருப்பது மட்டுமல்ல, எம் உயிரையும் பயங்கரச் சாவில் நாம் வீழ்ந்துவிடாது அவரது கரங்கள் அணைத்துக் கொள்ளும். பட்டினியில் எம்மை விழவிடமாட்டார். நாம் இவ்வுலகில் வாழ்வதோ குறுகிய காலம். இக்காலத்தில் நாம் இறைவனை தினசரி நினைவு கூர்ந்து பணிந்து எமது துயரங்களை அவர் பாதம் சமர்ப்பித்துக் கண்ணீர் விடும்போது, எமது துன்பங்கள் அனைத்தும் கண்களுக்குத் தெரியாமல் பறந்தோடிவிடும். அதைவிட்டு கடவுள் எனக்கு என்ன செய்தார், கடவுளில்லை, எல்லாம் பொய்யென்று கூறிக் கொண்டிருப்போமானால் எதுவும் நடக்காது. வாழ்க்கையில் மகிழ்ச்சி என்ற வார்த்தைக்கே இடமிருக்காது. எம்மைப் படைத்த இறைவன் ஒருவர் இருக்கிறார் என நம்பி விசுவாசியுங்கள் நடப்பவை அனைத்தும் நல்லவையென்பதை அறிவீர்கள்.

***ஜோசப் அருள்சாமி, திகனை.***

## அண்ணல் நபி அவதரித்த "ரபியுல் அவ்வல்"

**உலகம்** போற்றும் உத்தமர் அகிலத்துக்கோர் அருட்கொடை அண்ணல் நபி அவதரித்த "ரபியுல் அவ்வல்" மாதம் இப்போது வந்துவிட்டது. இதனால் உத்தம நபியின் உபதேசங்கள் உலகெங்கும் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது.

அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகின்றான்.


அல்லாஹ்வின் திருத்தூதர் நிச்சயமாக உங்களிடையே வந்திருக்கிறார். அவர் உங்களில் உள்ளவர்தான். நீங்கள் கஷ்டத்திற்குள்ளானால் அது அவருக்கு வருத்தத்தைக் கொடுக்கும். இன்னும் நீங்கள் நன்மையடைவதில் மிக ஆர்வமுள்ளவராகவும், நம்பிக்கையுடையோர் மீது மிக்க அன்பும், கருணையும் கொண்டோராகவும் அவர் இருக்கின்றார்.

அல்குர்ஆன் 9:128

ஆம் அண்ணல் நபி அவர்கள் சிறுவயதிலேயே சிறந்த குணம் கொண்டவராகத் திகழ்ந்தார். இதனால்தான் இவர்களை அஸ்ஸாதிக் (உண்மையாளர்) அல் அமீன் (நம்பிக்கையாளர்) என்ற சிறப்புப் பட்டங்களைக் கொண்டு அழைக்கப்பட்டது. சிந்திப்பதற்கும், தியானிப்பதற்கும் ஹிறாகுகைக்கு அண்ணல் நபி அவர்கள் அடிக்கடி போய் வருவார்கள். இவ்வாறு இவர்கள் ஹிறாகுகையில் தனிமையில் தியானித்துக் கொண்டிருக்கும் போது தான் அல்லாஹ் அண்ணல் நபிக்குத் தனது வஹியை (வேத வெளிப்படை) அருளினான். அன்று முதல் அல்குர் ஆனின் ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ஆயத்தங்களும் இறை தூதருக்கு இறங்கத் துலங்கின.

***-எம்.சீ.கலீல், கல்முனை -05.***

## கவிதைப் போட்டி இல.802



### பாராட்டுக்குரியது

## பலி புலி படுகுழி

பொருட்களைச் சுரண்டி வாழ்ந்த எலி
மக்களைச் சுரண்டி வாழ்ந்தது புலி
பொறியின் எல்லைக்கு வந்தது எலி
படையின் பொறியில் வீழ்ந்தது புலி.
எலி தோண்டியது ஒழிந்திடக் குழி
புலி தோண்டியது பதுங்கிடக் குழி
அதுதானே அதற்குப் புதை குழி
இனி ஏது கிலி எதிர்காலம் ஒளி.

கார்மேகம்
காத்தான்குடி-02.

## கவிதைப் போட்டி இல.805



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி. 17.03.2009

**கவிதைப் போட்டி இல. 805**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல. 1772, கொழும்பு.**

### முரண்பாடு

பொறிக்குள் சிக்கி
உயிரை விடுவது
பகுத்தறிவற்ற
எலியின் அறிவீனம்!
பொதுமக்களை
போர்ப் பொறிக்குள்
சிக்க வைத்து
உயிர்ப்பலியெடுப்பது
பகுத்தறிவற்ற
பயங்கரவாதிகளின்
அநியாயம்.

அபூசஊத்,
கொச்சிக்கடை.

### இறுதி முடிவு!

சந்து பொந்தெல்லாம்
புகுந்து சந்தோஷ
உவகை பூண்டு
வேட்கையில்லா
உணர்வுடன்
வேட்டையாட மானிடம்
மனை நாடும் உனக்கு
இதுதான் இறுதி முடிவோ?!

சாலீஹ் எம்.ரியாழ்,
சுங்காவில்.

### அணுகும் காலமும்

வீட்டில் தொல்லை கொடுக்கும்
எலிகளைப் பொறி வைத்துப்
பிடிப்பது போல்
நாட்டில் தொல்லை
கொடுக்கும்
புலிகளை அழித்தொழிக்கும்
காலமும் தொலைவில்
இல்லை.

க.கமால்தீன், ஏறாவூர்-03

### எலிமொழி

"நம்ப வைத்துக்
கொலை செய்யும் கலை
இந்த மனிதனைத் தவிர
வேறு எந்த ஜீவனுக்குமே
இல்லை."

அ.சந்தியாகோ,
கண்டி.

### அறிவுடைமை

நண்பர்களே வாரீர்
பொறியின் வில்லை முடக்கி
இரையை நாமும் பகிர்ந்திடலாம்-
அன்று
பகிர்ந்துகொள்ள மறுத்தவர்தான்-
இன்று
பொறியில் சிக்கித் தவிக்கிறார்
புரிந்துகொண்டு செயற்பட்டால்
பொறியும் நமக்குத்
துணைபுரியும்.

உயிர்ப்பித்தன்,
கொழும்பு.

### கொள்ளை

வங்கியில் கொள்ளையடித்தவன்
வசதியாய் வாழ்கிறான்.
கடையில் கொள்ளையடித்தவன்
கவனமாய் வாழ்கிறான்.
தேங்காய்த் துண்டைக்
கொள்ளையடித்த
எலி மட்டும் பொறியில் மாட்டிக்
கொள்கின்றது.

M.L.M.ஆசிக்,
மிச்நகர், ஏறாவூர்.

### பொறி

இரண்டெழுத்து அற்ப பிராணி- நீ
அழிவுகள் பல செய்தாய் அதற்காய்
மனிதன் வைத்தான் பொறி
மக்களைக் கொன்று
குவித்து அழிவுகள் பல செய்த
அற்பர்களுக்கு மனித நேயத்தினர்
வைத்தது மரணப்பொறி.

செ.ஜெயசோதி,
வெள்ளவத்தை.

### சிறு து(வெடி கு)ண்டு

அற்ப துண்டு உணவுக்காக
உயிரை விடப்போகும்....!
எலியாரின் நிலையும்..
பாகப்பிரிவினை கேட்டு
அப்பாவி உயிர்களை
காவு கொடுத்த
புலித் தலைவரின்...,
நிலைதான்!!

பாறூக்- முஹம்மது பாஸில்
ஏறாவூர்-03




# உங்கள் பக்கம்

## கொடிகாமப் பகுதி காளிகோவில் ஒழுங்கை திருத்தப்படும் காலம் எப்போது?

**கொடிகாமப்** பிரதேச காளி-கோவில் வீதி ஒழுங்கை நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் உள்ளது. இந்த ஒழுங்கையினூடாகவே மழை காலத்தில் இப்பிரதேசத்தின் தண்ணீர் வழிந்தோடுகின்றது. இவ்வாறு தண்ணீர் பாய்வதனால் இதனூடாகப் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தண்ணீருக்குள்ளாலேயே மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்குப் போக வேண்டிய நிலை உள்ளது. அத்துடன் பாடசாலை மாணவர்களும் சப்பாத்துக்களைக் கழற்றிக்கொண்டு போக வேண்டிய துர்ப்பாக்கிய நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது.

இப்பிரதேச மக்களுக்குப் இப்பிரச்சினை காலம் காலமாகவே இருந்து வருகின்றது. எனினும் இச்சம்பவம் தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்குப் பலமுறை கொண்டு வந்தும் எது வித நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. எனவே தினமுரசு "உங்கள் பக்கம்" மூலமாகக் கொடிகாமப் பிரதேச மக்கள் சார்பாக இந்தக் கோரிக்கையை மீண்டும் ஒருமுறை உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

**பாதிக்கப்பட்ட**
**கொடிகாமப் பிரதேச,**
**மக்கள்..**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772,கொழும்பு.
தொலைபேசி: -011 --2360903
தொலை நகல் (Fax):-011 - 2360920
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk
murasu@live.com


# வாசகர் சாலை

## வரலாற்று நாயகர்கள்!

**வரலாற்று** நாயகர்களின் வாழ்க்கை வரலாற்றினை வாரி வழங்குவதில் முதன்மை வகிக்கும் வார மலர்களில் தினமுரசுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் வரலாற்றினை 113 வாரங்களாகத் தந்த தா.பாண்டியன் அவர்களுக்கு எனது நன்றிகள். அந்த வரிசையில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த மனித நேயர் மார்டின் லூதர் கிங் அவர்களின் வரலாற்றினை ஆரம்பித்துள்ளீர்கள். முரசின் 802இல் முதலாம் அங்கம் படித்தேன். தொடர்ந்து படிக்க ஆவலாய் உள்ளேன்.

முஹம்மது ஹஸனி, கல்முனை-07

## உந்தனுக்காக....!

**மக்களின்** விடியலுக்காய் வியாழன் தோறும் விழித்தெழும் முரசுக்கு முன்மொழிகின்றேன். உன் ஆக்கங்கள் அனைத்தும் அளப்பரியன. உன் விடயங்கள் அனைத்தும் வியப்புக்குரியன. ஓரிடமும் இல்லாத ஒலி உன்னில் தொடர்கிறது. உன் பணி உலகெங்கும் பரந்து உன்னதம் பெற உவகை கலந்த வாழ்த்துகள்.

வீ.கீர்த்தனா, மல்லாகம் மத்தி.

## முத்தமிழ் பொழியும் முரசுக்கு! முரசே முதல் வணக்கம்!

**எப்பொழுது** நீ வருவாய் என்று எதிர்பார்ப்பேன். தினமுரசே எம் உள்ளத்தைக் கவர வைக்கும் இனிமையான சொற்களினால் இனிமையான வார்த்தைகளால் சுவையூட்டும் முரசே ஆன்மீகம், தேன்கிண்ணம், பாப்பா முரசு, சிறுகதை, சிறுவர்கள் எம்மையும் வழிகாட்டும் முரசே உம் பணி என்றும் தொடர வாழ்த்துகின்றேன்.

செ.நிஷாந்தினி, ஊர்காவற்றுறை.

## அன்பு முரசே!

**தவறாது** கிழக்கு தினமும் வெளுப்பது போன்று மறவாது உன்னை வாரா வாரம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நெஞ்சங்கள்தான் எத்தனை! அத்தனையுள் நானும் ஒருத்தி. எனது கவி வரிகளையும் உன் முரசில் சேர்ப்பாயாக!

எம்.வசிந்தி
மானிப்பாய்.

# தமிழ் மக்களுக்கான உணவுக் கப்பல் மீதும் புலிகள் தாக்குதல்

முல்லைத்தீவுக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பல் மீது புலிகள் ஆட்லறித் தாக்குதல் நடத்தியதை அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. அரிசி, மா, சீனி, பருப்பு, மண்ணெண்ணெய் உட்பட அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக் கொண்டு திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட கப்பல் முல்லைத்தீவின் புதுமாத்தளன் பகுதியில் பொருட்களை இறக்கிக் கொண்டிருந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டது. புலிகளால் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு வழங்குவதற்காகவே இப்பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டன. தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் தமிழ் மக்களைப் பட்டினி போட புலிகள் முனைவதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

# தேசிய மீலாதுன் நபி விழா மீதான புலிகளின் தற்கொலைத் தாக்குதல்
# குழப்பத்தைத் தூண்டும் முயற்சி!

இறைதூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை நினைவு கூருமுகமாக மாத்தறை, அக்குரஸ்ஸையில் நடைபெற்ற தேசிய மீலாதுன் நபி விழாவில் புலிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அப்பாவிகள் பத்துப் பேர் கொல்லப்பட்டனர். சுமார் 20 பேர் காயமுற்றனர். அக்குரஸ்ஸை, கொடப்பிட்டிய ஜும்மா பள்ளிவாசலுக்கு அண்மித்ததாகப் பத்தாம் திகதி காலை பத்தரை மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இஸ்லாமிய மக்கள் பெருமளவில் கலந்து கொண்ட இந்த விழாவில் சாதாரண ஒரு குடிமகனைப் போல் வந்த தற்கொலைக் குண்டுதாரியே தாக்குதலை நடத்தியுள்ளார். இத்தாக்குதலையடுத்து, தமிழ் மக்கள் பரந்து வாழும் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன. தீய சக்திகள் இச்சம்பவத்தை இனக்குரோதத்துக்குப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக முன்னோடிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் புலிகளால் வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பி, முன்னரைப் போன்று சமாதானமாகவும் சௌஜன்யமாகவும் வாழக்கூடிய சூழ்நிலையை விரைவில் ஏற்படுத்துவோமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துச் செய்தியொன்றினை வெளியிட்டிருந்தார். தேசிய மீலாதுன் நபி விழாவையொட்டி ஜனாதிபதி வெளியிட்ட இந்தச் செய்தி ஊடகங்களில் வெளியாகிச் சில மணித்தியாலங்களின் பின்னர் இத்தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.



காயமுற்ற ஒருவர் தூக்கி செல்லப்படுகிறார்

1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் முப்பதாம் திகதி சுமார் எண்பதாயிரத்துக்கு

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# யாழ். குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை ஒரு சொர்க்க வாசல் திறக்கிறது

## ஏ- 9 பாதையூடாக உணவுப் பொருட்களை அனுப்பி வைக்கும் ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் உரை



வெலிசறையில் நடைபெற்ற நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்



வவுனியாவிலிருந்து லொறிகள் புறப்பட்டபோது.....

" ஏ-9 பாதைத் திறப்பானது, யாழ். குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை ஒரு சொர்க்க வாசல் திறப்பதற்குச் சமமானது" என்று யாழ். மாவட்ட எம்.பி.யும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கம்பஹா, வெலிசறை களஞ்சியசாலையிலிருந்து லொறிகள் மூலம் ஏ-9 பாதை வழியாக உணவுப் பொருட்களை அனுப்பி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த ஒன்பதாம் திகதி இந்த நிகழ்வு நடைபெற்றது. நாற்பது லொறிகள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் யாழ். குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அங்கு அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

யாழ். குடாநாட்டு மக்களின் வரலாற்றிலேயே இன்றைய தினத்தை முக்கியத்துவமிக்க ஒரு நாளாகக் குறிப்பிட முடியும். புலித் தலைமையின் வலிந்து கட்டிய யுத்தத்தின் விளைவாக யாழ். குடாநாட்டு மக்கள் நீண்டகாலமாக இன்னல்களை அனுபவித்து வந்தனர். இதனை விளங்கிக் கொண்ட ஜனாதிபதி அவர்கள் எடுத்த முயற்சியின் விளைவாக ஏ-9 பாதை மூலம் உணவுப் பொருட்கள் இன்று கொண்டு செல்லப்படுகின்றன. ஏ-9 பாதைத் திறப்பானது, குடா நாட்டு மக்களைப் பொறுத்தவரை ஒரு சொர்க்க வாசல் திறப்பதற்குச் சமமானது.

புலித் தலைமையின் வலிந்து கட்டிய யுத்தத்தின் காரணமாக அரசு கடந்த காலங்களில் உணவுப் பொருட்களைக் கடல் மார்க்கமாகவே அனுப்பி வந்தது. அரசாங்கம் முழு முயற்சி எடுத்துப் பொருட்களை இயலுமான அளவு அனுப்பி வந்தது. இருந்த போதிலும், மக்களுக்குத் தேவையான பொருட்களைப் பெற முடியாமலிருந்தது. நியாயமான விலையில் மக்கள் பொருட்களைப் பெற முடியாத நிலையும் நிலவியது. இருந்தும் ஓரளவுக்கேனும் மக்களின் தேவைகளை அரசாங்கம் ஈடு செய்து வந்தது.

இன்றைய ஜனாதிபதி எடுத்த முயற்சியின் காரணமாக ஏ-9 பாதை ஊடாக மக்களுக்குப் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதனால் இதனை ஒரு சொர்க்க வாசல் திறப்பாகவே நான் கருதுகிறேன். படையினரின் பல தியாகங்களுக்கு மத்தியிலேயே ஏ-9 பாதை இன்று திறக்கப்படுகிறது. இந்தப் பாதையைத் தொடர்ந்தும் படையினர் பாதுகாப்பார்கள் என நான் நம்புகின்றேன். பயங்கரவாத புலித் தலைமையிடமிருந்து ஏ-9 தரைப்பாதையை மீட்பதில் பாதுகாப்புப் படையினர் பாரிய முயற்சிகளை மேற்கொண்டமைக்காகக் குடாநாட்டு மக்கள் சார்பாகப் படையினருக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

வாரமொன்றுக்கு நூறு லொறிகளில் உணவுப் பொருட்கள் ஏ-9 பாதையூடாக அனுப்பி வைக்கப்படவுள்ளன.

வெலிசறை மத்திய பொருளாதார நிலையத்திலிருந்து கடந்த ஒன்பதாம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பத்தாம் திகதி மாலை யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தன. ஏ-9 பாதை வழியாகப் பயணத்தைத் தொடர்ந்த லொறிகள் வவுனியாவில் தரித்து நின்று மீண்டும் பத்தாம் திகதி வவுனியாவிலிருந்து யாழ். நோக்கிப் புறப்பட்டன. வவுனியாவிலிருந்து லொறிகள் புறப்பட்ட நிகழ்வில் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, ரிசாத் பதியுதீன், எம்.பி. யும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி.எம்.கே.சார்ள்ஸ், வன்னிப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத்ஜயசூரிய உட்பட மதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் தானாகவே யுத்த நிறுத்தம் ஏற்பட்டு விடும்

## -பி.பி.ஸி பேட்டியில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

"புலிகள் இயக்கம் நாளையே ஆயுதங்களைக் கீழே வைக்குமானால் நாம் யுத்தம் நடத்த வேண்டிய காரணங்கள் எதுவுமே இருக்காது. தானாகவே யுத்த நிறுத்தமொன்று ஏற்பட்டு விடும்" என்று அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார். கடந்த இரண்டாம் திகதி பி.பி.ஸி. ஆங்கில சேவையின் நிருபர் ஸ்டீபன் சக்கூர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"யுத்தம் தொடர்கிறது. நீங்கள் சர்வதேச சமூகம் பற்றியெல்லாம் குறிப்பிடுகிறீர்கள். இரு தரப்புமே யுத்த நிறுத்தமொன்றினை ஏற்று நடக்க வேண்டுமென்று சர்வதேச சமூகம் கோரியுள்ளது. நீங்கள் யுத்த நிறுத்தமொன்றுக்குத் தயாரா?" என்று பி.பி.ஸி. நிருபர் கேள்வி எழுப்பியிருந்தார். ஆம், உதாரணத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையில்- ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைச்சர்கள் சபை, யுத்த நிறுத்தத்தை மட்டும் கோரவில்லை. புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே போட வேண்டுமென்றும் கோரியிருந்தனர். புலிகள் நாளையே ஆயுதங்களைக் கீழே போட்டால், நாம் யுத்தம் நடத்த வேண்டிய தேவை எதுவும் இருக்காது. தானாகவே யுத்த நிறுத்தம் ஏற்பட்டு விடும். புலிகள் ஆயுதங்களைத் தொடர்ந்து பாவிக்கும் வரை, புலிகள் குடிமக்களை வெளியேறாமல் தடுத்து வைத்திருக்கும் வரை, அப்பாவி மக்களுக்கெதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் வரை இந்த விதமான பயங்கரவாதத்தை ஒரேயடியாக இல்லாதொழிப்பதே எமது பணியாகும். இவ்வாறு அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறினார்.

# புலிகள் வன்செயல்களைக் கைவிட வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தல்

புலிகள் இயக்கத்தோடு இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று அமெரிக்க அரசாங்கம் வற்புறுத்தாது என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் பிளேக் தெரிவித்தார். ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களினதும் ஏனைய சிறுபான்மை இனங்களினதும் அபிலாஷைகளைப் பாதுகாக்கக் கூடிய அதிகாரப் பகிர்வை வழங்கும் அரசியல் தீர்வே இலங்கையில் நீடித்த சமாதானத்தை ஏற்படுத்தும் என்பதே அமெரிக்காவின் கொள்கையாகும் என்றும் கூறினார் "வடக்கில் எழுந்துள்ள மனிதாபி மான நெருக்கடி குறித்து அமெரிக்க அரசாங்கம் கவலையுடன் நோக்குகிறது. சர்வதேச மனிதாபிமானச் சட்டதிட்டங்களுக்கேற்ப, யுத்த வலயப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறுவதற்குப் புலிகள் அனுமதிப்பதே மிகவும் முன்னுரிமைக்குரிய விடயம்" என்றும் அவர் கூறினார்.

ஏனைய இணைத்தலைமை நாடுகளுடன் சேர்ந்து நாமும், இந்தியாவும் புலிகள் வன்செயல்களைக் கைவிட்டு, ஆயுதங்களைக் கீழே போட வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம் என்றும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

# அமெரிக்காவில் தமிழே தெரியாத தமிழ் யுவதி தமிழர்களுக்காக உண்ணாவிரதம்

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறி அமெரிக்காவின் பொஸ்ரன் நகரில் கடந்த மாதம் அடையாள உண்ணாவிரதமிருந்த பிரியா சுந்தரலிங்கம் என்ற இளம் பெண் அமெரிக்காவில் பிறந்தவர். இவரின் பெற்றோர் 1989 ஆம் ஆண்டு அமெரிக்காவில் குடியேறியவர்கள். பிரியாவுக்கு அறவே தமிழ் பேச வராது. தந்தை சுந்தரலிங்கம் பொஸ்ரன் தமிழ்ச் சங்கத்தில் முக்கிய உறுப்பினர்.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டியும், புலிகளுக்கு எதிரான யுத்தத்தை இலங்கை அரசு உடனடியாக நிறுத்த வேண்டுமென வலியுறுத்தியும் பிரியா உண்ணாவிரதம் இருந்தார். அமெரிக்காவில் பிறந்த பிரியா ஒரேயொரு தடவை திருமண நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு வந்திருந்தார். அப்போது இவருக்கு வயது 14. இப்போது இவருக்கு வயது 18. உண்ணாவிரதத்தின் போது நீரை மட்டும் அருந்தினார். விற்றமின் வில்லைகளையும் பாவித்தார். இவரின் உண்ணாவிரதம் பற்றி 'பொஸ்ரன் குளோப்' என்ற பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 2-360903
தொலை நகல் (Fax):-011 2-360920
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk
murasu@live.com

## முரசம்

### முக்கோண அரசியல் அணுகுமுறை இன நல்லுறவைச் சீர்குலைக்கும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**மார்ச்** - 08 ஆம் திகதி மகளிர் தினம். பெண்களின் உரிமைகள், சுதந்திரம் எனப் பலதரப்பட்ட விவாதங்கள் நடத்தப்பட்டாலும், தீர்வொன்றும் காணப்படவில்லை. பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி, பேசுகின்ற போதெல்லாம், ஆண்களை விமர்சிப்பதிலும், ஆண்களைக் கொடுமைக்காரர்களாக வர்ணித்து விட்டு திருப்தி காண்பதுமாக முடிகிறது. ஆண்களையும் தாண்டி, சமூகமும், மதங்களும், மூட நம்பிக்கைகளும் பெண்களுக்கெதிரான அடக்குமுறையில் பிரதான பங்கு வகிக்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனும், பெண்ணும் சம அந்தஸ்தோடும், கௌரவத்தோடும் வாழ்ந்து இந்த லௌகீக வாழ்க்கையை அர்த்தப்படுத்தும் போதே பிறப்பும் அர்த்தப்படுகிறது. பூமிக்கு ஒப்பாகப் பார்க்கப்படும் பெண்களுக்குக் கௌரவம் சேர்க்கும் நாளில் நமது வாழ்த்துக்களும் சேரட்டும்.

கிழக்கு மாகாணத்தில் நடந்தேறுகின்ற பல சம்பவங்கள் அதிர்ச்சியளிக்கின்றன. மாகாண சபை, நிர்வாகம் செயற்படுகின்ற போதும், சில அமைச்சர்களின் அதீத தலையீடு சமூகங்கள் மட்டத்தில் ஏமாற்றத்தைத் தருவதாக அறிய முடிகிறது. மூவின மக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு தரப்பு தலைமை தாங்குவதுபோலும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவது போலும் ஒரு வீதமான நடைமுறை இருப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான போக்கு இனங்களுக்கிடையிலான உறவை நெருக்கமடைவதற்குப் பதிலாக விரிசலடையவே வழியேற்படுத்தியிருக்கிறது. மாகாண சபைக்கான அதிகாரங்கள் தொடர்பில் ஒரு திருப்தியின்மை நிலவுகின்ற நிலையில் சில மத்திய அமைச்சர்களின் தலையீடுகள், அந்த இடைவெளியை வீரிவாக்குவதாகவே அமையும்.

இவ்வாறான அரசியல் முக்கோணப் போட்டியில் பொதுமக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பிலும், தம்மைச் சுற்றி நடந்தேறுகின்ற அரசியல் சூழ்ச்சிகள் தொடர்பிலும் வாய் திறந்து பேச முடியாமல் மௌனித்துப் போய் உள்ளனர். எதையாவது பேசினால், அந்த நாள் இரவே, மிரட்டப்படவோ, அல்லது கொலை செய்யப்படவோ கூடும் என்ற ஒரு வகைப் பயங்கரம் நிலவுவதாக மக்கள் கூறுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் மூன்று வீதமான அனுகுமுறையைக் காணக்கூடியதாக இருப்பதாக சமூக அக்கறையாளர்கள் கூறுகின்றனர். அரசியல் போட்டா போட்டியும், ஆளுமைக்காரணிகளும் தனிமனித திருப்திப்படுத்தல்களும் மலிந்ததொரு அரசியலையே கிழக்கு மக்கள் அனுபவிப்பதாகக் கூறுகின்றனர்.

கிழக்கு மக்கள் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, அதையிட்டு கருத்துச் சொல்லத் தகுதியற்றவர்களாகப் பார்க்கப்படும் சூழல் மோசமான விளைவுகளையே தோற்றுவிக்கும். இத்தகைய போக்கு நீடிக்குமாக இருந்தால், மூவின மக்களும் வாழும் மாகாணத்தில் இனங்களுக்கிடையில் உறவு பலப்படத் தடைகளே நிறைந்திருக்கும். அத்தகையதொரு நிலையை ஆரம்பத்திலேயே தடுத்து இனங்களுக்கிடையே நல்லுறவைக் கட்டியெழுப்ப வேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# பயங்கரவாதிகள் விளையாடிய லாகூர் டெஸ்ட்!

**இரண்டு** வாரங்களுக்குள் புலிகள் நடாத்திய இரண்டாவது தாக்குதல் முயற்சியும் தோல்வியில் முடிந்திருக்கிறது. கடந்த மாதம் இருபதாம் திகதி கொழும்பிலும் கட்டுநாயக்காவிலும் இலகுரக விமானங்கள் இரண்டினைப் பயன்படுத்திப் புலிகள் நடத்த முயன்ற தற்கொலைத் தாக்குதல் முயற்சிகள் படுதோல்வியில் முடிந்தன. தற்கொலைத் தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு மூன்று நாட்களுக்குள் புலிகள் யுத்த நிறுத்தக் கோரிக்கையை விடுத்தனர். புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் தட்டிக் கழித்துவிட்டது. யுத்த நிறுத்தக் கோரிக்கை விடுக்கப்பட்டு ஒரு வாரத்துக்குப் பின்னர் இலங்கைக் கிரிக்கெட் அணியை இலக்கு வைத்து லாகூர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. கடந்த மூன்றாம் திகதி நடாத்தப்பட்ட இந்தத் தாக்குதல் முயற்சியும் தோல்வியாகவே முடிந்திருக்கிறது. ஆறு பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்கள் சிலர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.



லாகூர் தாக்குதலின்போது எடுக்கப்பட்ட படம்.

சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப் பட்டாலும் உண்மையிலேயே தாக்குதல் நடத்திய வர்கள் யார்? தாக்குதல் நடத்தியவர்களின் நோக்கம் என்ன? என்பது பற்றிய திட்டவட்டமான தகவல்களை விசாரணையாளர்களால் இதுவரை வெளியிட முடியவில்லை. இலங்கை அணி வீரர்களே இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதால், பாகிஸ்தானில் இயங்கும் வேறு ஏதாவது பயங்கரவாதக் குழுவின் உதவியுடன் புலிகள் இந்த முயற்சியை மேற் கொண்டிருக்கலாம் என்ற சந்தேகமே பெரும்பாலும் நிலவுகிறது. முக்கியமாகக் கடந்த வருட இறுதியில் மும்பைத் தாக்குதலை நடத்திய லக்ஷர்-இ-ராய்பா குழுவின் உதவியுடன் புலிகள் தாக்குதலை நடத்தியிருக்கலாமென குற்றஞ்சாட்டப்படுகிறது. இந்தியாவே இந்தத் தாக்குதலுக்குத் திட்ட மிட்டிருக்கலாமென்றும் பாகிஸ்தானிலுள்ள இந்திய விரோத சக்திகள் சில குற்றச்சாட்டுக்களைச் சுமத்து கின்றன. ஆனால் இது வேண்டுமென்றே தெரிவிக்கப் படும் குற்றச்சாட்டு என்பதில் சந்தேகமில்லை.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் இயங்கும் தலிபான் அல்லது அல்-குவைதா இயக்கங்கள் மீதும் சந்தேகங்கள் தெரிவிக்கப் படுகின்றன. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட போதைவஸ்து முக்கோணப் பகுதியில் புலிகள் இயக்கம் உட்பட மேலே கூறப்பட்ட பயங்கரவாத அமைப்புக்கள் போதைவஸ்துக் கடத்தல் முயற்சிகளில் ஈடுபட்டு வந்ததாக முன்னர் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன. 1990களின் ஆரம்ப வருடங்களில் லஷ்கர்-இ-ராய்பா அமைப்புக்கும் புலிகள் இயக்கத்துக்குமிடையில் தொடர்புகள் நிலவி வந்ததாகவும் தெரிவிக்கப் படுகின்றன. 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புலிகளின் முக்கிய தளபதியாக விளங்கிய கிட்டு என்றழைக்கப்பட்ட சதாசிவம் கிருஷ்ணகுமார் பாகிஸ் தானின் பேஷாவர் பகுதியில் ஆயுதக் கொள்வனவு குறித்து லஷ்கர்-இ-ராய்பா குழுவினருடன் தொடர்பு களை ஏற்படுத்தியிருந்தாரெனக் கூறப்படுகிறது. 1993 ஆம் ஆண்டு கிட்டு ஆயுதங்கள் ஏற்றிவந்த கப்பலொன்றினை இந்தியாவின் உளவு நிறுவனம் கண்டுபிடித்துத் தாக்கியழித்தது. நடுக் கடலில் வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் கப்பல் சேதமாக்கப்பட்டதோடு கிட்டுவும் கொல்லப்பட்டார்.

இக்காலப் பகுதியிலேயே புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஐந்து இலங்கைத் தமிழர்கள் பேஷாவரில் கைது செய்யப்பட்டிருந்தனர். ஆயுதக் கொள்வனவு முயற்சிகளில் ஈடுபட்டார்களென்று இவர்கள் மீது குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டன. பேஷாவரில் அல்லது ஆப்கானிஸ்தானில் புலிகள் ஏவுகணைத் தாக்குதல் பயிற்சிகளை இக்காலப் பகுதியிலேயே பெற்றிருக்கலாமென்றும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன. அத்துடன் லஷ்கர்-இ-ராய்பா குழுவும் புலிகள் இயக்கமும் கூட்டாக ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றிருக்கலா மென்றும் ஆயுதக் கொள்வனவு முயற்சிகளில் ஈடு பட்டிருக்கலாமென்றும் புலனாய்வுத் தகவல்கள் தெரி விக்கின்றன. இந்தப் பின்புலத்தில் தான் லாகூர் தாக்குதலில் இரண்டு அமைப்புக்களுமே சம்பந்தப் பட்டிருக்கலாமெனப் பரவலாகச் சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே புலிகள் விடுத்த யுத்த நிறுத்தக் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்து விட்டது. இதனால் இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்களைப் பணயமாகப் பிடித்து வைத்து யுத்த நிறுத்தப் பேரப் பேச்சில் ஈடுபடுவது புலிகளின் நோக்க மாக இருந்திருக்கலாமெனச் சில அரசியல் நோக்கர் கள் கூறுகின்றனர். இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்களைப் பணயமாகப் பிடித்திருந்தால், யுத்தத்தை நிறுத்தி வைப்பதற்கு அது ஓர் சர்வதேச அழுத் தத்தை ஏற்படுத்தலாமெனப் புலிகள் நினைத் திருக்கலாம். அப்படியொரு நிலை ஏற்பட்டிருந்தால் கிரிக்கெட் வீரர்களை விடுவிப்பதற்காகப் பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகள் இராஜதந்திர முயற்சிகளில் இறங்கியிருக்கும்.

புலிகளின் விமானத் தாக்குதல் முயற்சியும், லாகூர் தாக்குதல் முயற்சியும் எதிர்பார்த்த வெற்றிகளைக் கொடுக்கவில்லை என்பது உண்மையே. இருந்தாலும் சர்வதேச ரீதியாகப் புலிகள் சார்பு சக்திகள் மேற்கொண்டு வரும் பிரசாரங்களுக்கு இது உந்துதலாக அமையும் என்பது மறுக்க முடியாதது. ஆயுதக் கடத்தல், போதைவஸ்துக் கடத்தல், ஆட்கடத்தல் போன்ற விடயங்களில் சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக ஈடுபட்டுவந்த ஓர் அமைப்பு. புலிகள் இயக்கம். சர்வதேச ரீதியாக ஏனைய பயங்கரவாத அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்புகளையும் அது கொண்டிருந்தது. இன்னமும் புலிகளின் சார்பு நிலைச் சக்திகள் இந்தியா, தாய்லாந்து, மலேசியா உட்படப் பல நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

## அம்பலமாகாத அதிர்ச்சிகள்

லாகூர் தாக்குதலில் புலிகள் இயக்கத்துக்குச் சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ, இனிமேல் இலங்கையில் இடம்பெறும் டெஸ்ட் ஆட்டங்களிலோ அல்லது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டங்களிலோ கலந்துகொள்ள வருவதற்கு வேறு நாட்டு அணிகள் தயங்கும். அத்துடன் இலங்கை அணியை வேறு நாடுகளில் விளையாட அழைப்பதிலும் தயக்கங்கள் காட்டப்படும்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலம், பல்வேறு பயங்கரவாத, அடிப்படைவாதக் குழுக்களின் களபூமியாக இருந்து வருகிறது. லாகூர் தாக்குதல் இடம்பெறுவதற்குச் சில நாட்கள் முன்னதாகக் கூட தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. லஷ்கர்-இ-ராய்பா பயங்கரவாதக் குழுவும் ஜய்ஸ்-இ-முஹம்மத் போன்ற பயங்கரவாதக் குழுக்களும் அண்மைக் காலங்களில் பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட பையன்களைத் திரட்டியுள்ளன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. பல்வேறு ஆயுதக் குழுக்கள் பஞ்சாப் நகரங்களிலும், கிராமங்களிலும் இயங்குவதாகவும் பாகிஸ்தானிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. தங்களைச் சீர்திருத்த அமைப்பைச் சேர்ந்தவர்களென்று கூறிக்கொள்ளும் இந்த ஆயுததாரிகள் உடைகள் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள் குறித்து

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

மக்களை எச்சரிக்கை செய்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரீப்பின் சகோதரரான சபாஷ் ஷெரீப்பே பஞ்சாப் மாகாணத்தின் முதலமைச்சராகப் பணியாற்றி வந்தார். *(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)*

## ஊறிலிருந்து....



*எந்த மக்களைப் பணயமாய் வைச்சுக் கொண்டு மக்களைக் காப்பாத்துங்கோ எண்டு தங்கட பினாமிகள் ஊடாகப் புலிகள் போராட்டம் நடாத்துகினமோ அது நல்லா எடுபட்டிருக்கு. அமெரிக்கா, இந்தியா எல்லாம் சேர்ந்து மக்களைக் காப்பாற்ற முயற்சி எடுக்கினம் எண்டு தகவல்கள் கசியுது. வடிவாய் கவனியுங்கோ மக்களை மட்டும் தான் காப்பாத்துவினம். மறுவளத்தாலை சர்வதேசப் பயங்கரவாதிகளைப் பிடிக்கிற வேலையும் நடக்குமாம். தான் விரித்த வலையிலதானே விழும் கதைக்குப் பொருத்தமான காலம் புலிகளுக்கு நெருங்கி வந்துவிட்டுது எண்டு ஊரில சொல்லினம்.*

# பாழ்பட்ட உறவுகளை இணைக்கிறது யாழ்தேவி

**தமிழர்களின்** அரசியல் உரிமைப் போராட்டங்கள் அகிம்சை வழியில் ஆரம்பித்து ஆயுதங்களை ஏந்த வேண்டிய நிலையை அடைந்ததற்கு தென்னிலங்கை அரசியல் தலைமைகளின் தவறான அணுகு முறையே காரணம் எனலாம். அரசியல் உரிமைப் பிரச்சினையானது கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் அடிப்படை விடயங்கள் சம அந்தஸ்து ஆகிய கோரிக்கைகளை முன் நிறுத்தியதாகவே அமைந்தது. போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சீரான புகையிரதப் போக்குவரத்து, பயணிகள் போக்குவரத்து, மின்சாரப் பாவனை, பொருளா-தார சமூக நிலை என்பன அக்காலத்துக்கு ஏற்ற வகையில் தமிழர் பகுதிகளில் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. ஆகவே, போராட்டமானது அதனிலும் மேலான மேம்பட்ட வாழ்க்கை முறையைப் பெற்றுக் கொள்வதற்காகவே முன்னெடுக்கப்பட்டது. எப்போதும் ஒரு போராட்டம் இருப்பதைப் பாதுகாத்தபடி மேலும் பெற்றுக் கொள்ளல் என்கின்ற அடிப்படையைக் கொண்டதாகவே அமையும். துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் தமிழர்கள் நடத்திய விடுதலைப் போராட்டமானது இருப்பதை அழித்து மேலதிகமாக எதையும் பெறாத அழிவு யுத்தமாக மாறிப் போயிற்று. போராட்டம் திசைவழி மாறிப்போனதான பல நிகழ்வுகள் உள்ளன. அதில் குறிப்பிடக்கூடிய ஒன்றானது வடக்கிற்கும் தெற்கிற்கும் உறவுப்பாலயாகத் திகழ்ந்த புகையிரதச் சேவையைப் புலிகள் தீ வைத்த சம்பவத்தைக் கூறலாம். கொழும்பில் வேலை செய்யும் ஒருவர் காலையில் புகையிரதம் ஏறி மாலையில் வீடு சேர்ந்ததையும் அதே போல் யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒருவர் தனது தேவை நிமித்தம் மறுநாளே தலைநகரத்திற்கு வந்து போனதும் இன்னும் ஞாபகமிருக்கும் பசுமை நினைவுகள். அப்போதைய போராட்ட களத்தில் உருவாகியிருந்த ஒவ்வொரு தமிழ் இயக்கங்களும் அரச படையினருக்கு எதிரான தாக்குதல்களை நடத்தி தமது பலத்தை வெளிப்படுத்தின. அதனூடாக தமிழ் மக்களிடம் தமக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டனர். சிங்களப் பொதுமக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் யுத்தம் புகுந்து கொள்வதை ஒரு போராட்ட வடிவமாகத் தமிழ் இயக்கங்கள் கொண்டிருக்கவில்லை. ஆகையால்தான் போராட்ட இயக்கங்களுக்குத் தமிழ் மக்களிடம் ஆதரவு பெருகியது. இந்த நிலையிலேயே புலிகளின் போராட்ட வடிவம் வேறொரு பாதையில் பயணிக்கத் தொடங்கியது. புலிகளைப் பொறுத்தவரை தமிழர்களுக்கு இழப்புக்களும், துன்பங்களும் ஏற்படுகின்ற போதே அவர்கள் போராட்டத்தில் பங்காளிகளாவார்கள். ஆகவே மக்கள் இயல்புச் சூழலில் வாழ்க்கை நடத்துவதை சீர் குலைப்பதே புலிகளின் திட்டமாக இருந்தது. இத்திட்டத்திற்கமைய சன நெருசலான இடங்களில் மறைந்து கொண்டு படையினரைத் தாக்குவதும் எதிர்த்தாக்குதலைப் படையினர் நடத்தும் போது மக்கள் பாதிக்கப்படுவதும் மக்களைத் தூண்டி விட்டுப் படையினருக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தச் செய்வதும் புலிகளின் நடைமுறையுமாக இருந்துள்ளன. இதையும் தாண்டி புலிகள் சிந்தித்த மற்றுமொரு போர் முறைதான் பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளைச் சீர்குலைப்பது, போக்குவரத்து, மின்சாரம் ஆகிய தேவைகளை அழிப்பது பின்னர் அதை போராட்டத்தின் ஒரு அங்கமாகக் குறிப்பிடுவதும் அதனூடாக அரசு மீதான வெறுப்புணர்வை ஏற்படுத்த முயல்வதுமாகும். அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் மக்களுக்கான தேவை-களைச் சீர்குலைத்து விட்டால் சீர்குலைத்தவர்களை மக்கள் போர்வீரர்களாகவும் அரசாங்கத்தை எதிரிகளா-கவும் கருதுவார்களெனப் புலிகளுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்களோ தெரியவில்லை. ஆயுதங்களைக் காட்டி மக்களை மிரட்டி அடிமைப்படுத்த முடியுமென புலிகள் நம்பியிருக்கக்கூடும். புலிகளின் இந்தப் போக்கு விடுதலைப் போராட்டத்திலிருந்து பாசிச வன்முறைக்குள் போராட்டத்தை இழுத்துச் செல்வதாகவே அமைந்தது.





ஆகையால் போராட்டத்தை ஆதரித்த மக்கள் தம்மைத் தூரப்படுத்தத் தொடங்கினர். தடியெடுத்தவன் தண்டல்காரனான கதைபோல் ஆயுதம் தூக்கிய இயக்கங்களெல்லாம் தமிழர்களின் எஜமானர்களாகத் தம்மைக் கருதிக் கொண்டனர். இந்தப் போக்கு நாளுக்கு நாள் வளர்ச்சி கண்டதால் மக்கள் மௌனிகளானார்கள். ஏனைய இயக்கங்களை அழித்தொழித்த புலிகள் தமது வன்முறைச் செயற்பாட்டைத் தொடர்ந்தனர். 1985 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி முறிகண்டியில் தடுத்து நிறுத்தப்பட்ட யாழ்தேவிப் புகையிரதத்திற்குப் புலிகள் தீ வைத்தனர். இயந்திரத்தோடு மேலும் நான்கு பெட்டிகள் எரிந்து நாசமாகின. அதில் பயணம் செய்த 600இற்கும் அதி-கமான மக்கள் என்ன நடக்கின்றது என்பது தெரியா-மலே திசைக்கொரு பக்கமாக ஓடினார்கள். முழுக்கத் தமிழ் மக்களுக்குப் பிரயோசனமாக இருந்த யாழ்தேவிப் புகையிரதத்திற்குத் தீவைத்த புலிகள் தமது செயற்பாட்டை அரசுக்கு எதிரான ஒரு போராட்ட வடிவமாக அப்போது கூறினர். தமிழ் மக்களைப் பொறுத்தவரை புகையிரதத்திற்கு வைக்கப்பட்ட தீயானது தமிழ் மக்களின் போக்குவரத்து வசதிக்கும் தென்னிலங்கையுடனான உறவுக்கும் வைக்கப்பட்ட தீயாகவே அமைந்தது.

இந்த நிகழ்வோடு தெற்கே இருந்து வடக்கிற்கான புகையிரதச் சேவை நிறுத்தப்பட்டது. இதனால் அரசை விடவும் தமிழ் மக்களுக்கே பெரும் பாதிப்பு என்றால் அது மிகையாகாது.

1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது. எனினும் யாழ்தேவி என்ற பெயர் சூட்டப்பட்டு புகையிரதச் சேவை ஆரம்பிக்கப்பட்டது 1956 ஏப்ரல் 23 ஆம் திகதியாகும். இலங்கையில் புகையிரத பாதைகளிலேயே மிக நீளமான பாதை தெற்குக்கும் வடக்கிற்குமான புகையிரதப் பாதையாகும். இப்போது புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கான சுதந்திரமான புகையிரதப் பயணத்தையும், வீதிப்போக்குவரத்தையும் சாத்தியமாக்கியிருக்கிறது. சுமார் 24 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கான புகையிரதப் பயணம் பற்றிய செய்திகள் மீண்டும் வெளிவரத் தொடங்கியிருக்கிறது. இம்மாதம் 15 ஆம் திகதி ரயில் நிலையங்கள் மற்றும் தண்டவாளப் புனரமைப்புப் பணிகள் தொடர்பான பணிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. முதல் கட்டமான மார்ச் 23 ஆம் திகதி தாண்டிக்குளம் வரையான சேவையை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. புகையிரதப் பாதைகள் புனரமைப்பு, புகையிரத நிலையங்கள் புனரமைப்பு அல்லது மீள் கட்டமைப்பு ஆகிய பணிகள் 'வடக்கு நட்பு' (உத்துரு மித்துரு) எனும் வேலைத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்குக் காரணம் இலங்கையின் ஏனைய மாகாண மக்களுக்கும் வடக்கு மாகாண மக்களுக்கும் இடையே சிதைந்து போன அல்லது சிதைக்கப்பட்ட உறவுகளைக் கட்டியெழுப்புவதாகும். அதற்கமைய இவ்வேலைத் திட்டத்தின் பங்காளிகளாக முழு நாட்டு மக்களின் பங்களிப்பும் பெறப்படவுள்ளது.

புகையிரதப் பயணத்தைச் சாத்தியமாக்கும் பிரதான பணிகளுக்கான செலவினத்தை ஈரான் அரசு பொறுப்பேற்றுள்ளது. சிலிப்பர் கட்டைகள் தண்டவாளங்கள் கொள்வனவு செய்வதற்கான 50 மில்லியன் ரூபாய்களை அது வழங்கவுள்ளது.

ஓமந்தைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே 9 பிரதான ரயில் நிலையங்களும் 34 உப நிலையங்களும் உள்ளன. 9 பிரதான ரயில் நிலையங்களையும் 9 மாகாணங்களின் பொறுப்பில் நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதே போல் 34 உப நிலையங்களும் ஒவ்வொரு மாவட்டங்களையும் பொறுப்பேற்றுள்ளன. குறிப்பாக யாழ். ரயில் நிலையத்தைப் புனரமைக்கும் பணியை அம்பாந்தோட்டை மாவட்டம் பொறுப்பேற்றுள்ளது. கிளிநொச்சி நிலையத்தைப் புனரமைக்கும் பொறுப்பை மாத்தளை மாவட்டம் பொறுப்பேற்றுள்ளது. இவ்வேலைத் திட்டத்தின்படி ஒருவர் ஒரு சிலிப்பர் கட்டையைத் தனது பங்களிப்பாகச் செலுத்த முடியும். ஒரு சிலிப்பர்க் கட்டையின் பெறுமதி 12500 ரூபாவாகும். இது முடியாதவர்கள் 19 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படும் வடக்கிற்கான புகையிரதப் போக்குவரத்து பணிகள் ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து யாழ்தேவி பயணத்துக்கான பயணச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதனூடாகவும் உதவ முடியும்.

அலசுவது
**மதியூகி**

பின்னர் புகையிரதப் பயணம் ஆரம்பிக்கப்பட்டதும் இவ்வாறு பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்பவர்கள் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும். இத்தகைய பங்களிப்பு வடிவத்தை ஏற்படுத்தியதற்கான நோக்கம் குறிப்பாகச் சிங்கள மக்களின் பங்களிப்பை வடக்கிற்காகப் பெற்றுக் கொள்வதேயாகும். இதனூடாக நாட்டு மக்கள் அனைவருக்குள்ளும் சகோதரத்துவத்தையும் அந்நியோந்நியத்தையும் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கைகள் வெளிப்படுகின்றன. கால் நூற்றாண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை ஆரம்பிக்கவிருக்கும் யாழ்தேவிப் பயணம் ஒரு புதிய வரலாற்றின் ஆரம்பமாக அமையட்டும்.

## அதிரடி அய்யாத்துரை



**தமிழ்** நாட்டில கொட்டிலமைச்சுப் பொலிற்றிக்ஸ் பண்ணிக் கொண்டிருக்கிற சிவாஜிலிங்கத்தார் போன வாரம் ஒரு கண்டுபிடிப்பைக் கண்டு பிடிச்சிருக்கிறாராமுங்கோ. என்ன கண்டுபிடிப்புத் தெரியுமோ, நண்பர் ஒருவர் சிவாஜியாரிட்டக் கேட்டாராம், என்னங்கோ, உங்கபோய் நிக்கிறியள் நாட்டுக்குவர மாட்டியளோ, எத்தனை நாளைக்கு சுகயீன லீவு எடுக்கப் போறியள். உப்பிடி இருந்துபோட்டு நாளைக்கு மக்களிட்ட போக முடியுமோ, எண்டு கேட்டவராம்.

அதுக்கு சிவாஜிலிங்கத்தார் சொன்னவராம், உதுக்கேன் காணும் நீர் தடம் அடிக்கிறீர். இயக்கம் நாளைக்கு சனங்களின்ர ஆதரவு தேவையெண்டே நடக்குது, அடியும், உதையும் குடுக்கினம் தானே, இண்டைக்கு ஓடிற சனத்தை நாளைக்குக் கருவியைக் காட்டி வரச்சொன்னால் வந்திடும், எண்டு இயக்கம் நம்புது. அது போல நமக்கும் வாக்குப் போடச்சொல்லி தம்பியவை கருவியை நீட்டிச்சினமெண்டால் எல்லாம் சரியாகிடும் புரியுதோ எண்டாராம்.

பார்த்தியளோ தமிழ் மக்களை எப்பிடி ரீட் பண்ண வேணும் எண்டு நம்மட சிவாஜியார் கண்டு புடிச்சிருக்கார். போனால் அப்பிடியே போய் தொலையட்டும் திரும்பி வந்தாரெண்டால் அவருக்கொரு ரீட்மெண்ட் இருக்குதுங்கோ எண்டு நான் சொல்லயில்லையுங்கோ. அவை சொல்லினமுங்கோ.

**பார்லிமெண்ட்** எலக்ஷன் நடக்க இருக்குது. அதில தமிழகத்துக் கட்சிகள் எல்லாம் ரொம்ப பிஸியாகிட்டினமுங்கோ. ஈழ ஆதரவு அலையை பிஜேபிக்காரர் தங்கட பக்கம் இழுக்கப் பாக்கினமுங்கோ. அதாவது தாங்கள் ஆட்சிக்கு வந்தால் நூறு நாளைக்குள்ள இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பினமாம்.

உப்பிடிச் சொல்லியும் ஒரு கட்சியும் பிஜே.பிக்காரரைக் கண்டு கொள்ளயில்லையுங்கோ. ஏன், தாங்கள் இவ்வளவு கத்தியும், தீக்குளிச்சும், யாரும் கண்டு கொள்ளினமில்லையே, எண்டு கூப்பாடு போடுற தமிழகக் கட்சிகள், கண்டு கொள்ளுறன் எண்டு சொல்லுற பிஜே. பீயை ஏன் கண்டுகொள்ள இல்லை எண்டு கேட்டதுக்கு, ஈழப்பிரச்சினை தீர பிஜே.பி தேவையா இல்லையா எண்டது ஒருபக்கம் இருக்கட்டுமுங்கோ. தமிழ் நாட்டில தங்கட வண்டி ஓட காங்கிரசோடையோ, தி.மு.க.வோடோ, அ.தி.மு.க.வோடையோ தானுங்கோ. கூட்டுச் சேர வேணும். இல்லாட்டில் பொலிற்றிக்ஸில அடிவிழுந்துபோகும், முதலில நம்மட பிரச்சினைக்குத் தானுங்கோ, முதலிடம் பிறகுதான் எந்தப்பிரச்சினைக்கும் இடம், அது ஈழப்பிரச்சினையாக இருந்தாலும் கூட எண்டு தமிழக பொலிற்றிக்ஸ் நண்பர் ஒருவர் பொளந்து கட்டுறாருங்கோ.

இப்ப தெரியுதோ ஈழ ஆதரவு, இன உணர்வு எண்டதெல்லாம், தங்கட சொந்தப் பிரச்சினைக்கு முன்னால எடுபடாதெண்டது. கலை வளர்ந்த மண்ணில எல்லாம் நாடகம் தானோ எண்டும் எண்ணத் தோணுதுங்கோ.

**இரண்டெழுத்தாரின்ர** தமிழீழ நிலப்பரப்பின்ர அளவு நாற்பது சதுர கிலோ மீற்றருக்குள்ள சுருங்கிப் போட்டுதுங்கோ. அந்தப் பகுதியையும் பிடிக்க ரொம்ப நாள் எடுக்காது எண்டு படைத்தரப்பு இப்பவே கவுண்டிக் ஸ்டார்ட் பண்ணிட்டினமுங்கோ.

இண்டைக்கு நாளைக்கெண்டு நடக்குதுங்கோ வோர் கவுண்டிங், ரெண்டெழுத்தாரின்ர ஆதரவு அலை தீவிரமடையிறதப் பாக்கேக்கதானுங்கோ, களத்தில ரெண்டெழுத்தாரின்ர நிலைமை அவ்வளவு தீவிரமாக மோசமாகிக் கொண்டிருக்குது எண்டு, அதிகாரத்தரப்பு நம்புதாமுங்கோ.

மூச்சு எடுக்கவிடாமல் ரெண்டெழுத்தாரின்ர முதுகை உடைக்கிறதுதான் தங்கட பைனல் டிசிசன் எண்டு அவை சொல்லினமுங்கோ. உந்தச் சண்டை மட்டும் நடத்தாமல் இன்னொரு ரெண்டு வருஷத்துக்கு ரெண்டெழுத்தாரை விட்டுப் புடிச்சிருந்தால் நாடு ரெண்டாகியிருக்கும். நாட்டு மக்களின்ர வாழ்க்கையே சிக்கிச் சின்னாபின்னமாகி இருக்கும். அப்பிடியான தயாரிப்புகளிலதான் ரெண்டெழுத்தார் இருந்திருக்கினம் எண்டது இப்பதான் தெரியவருதாமுங்கோ

நல்லவேளையாக இந்த நாட்டு மக்களையும், நாட்டையும் கடவுள் காப்பாற்றிப்போட்டான் எண்டினமுங்கோ.

பங்கர் தலைவர் நல்லூர் முருகனுக்குச் சமமாகத் தன்னை வணங்கும்படி பிரசாரம் செய்யேக்கயே அவரின்ர தலைவிதியில் சனியன் கச்சா பண்ணிப் போட்டுதுங்கோ எண்டு வாத்தி சொல்லுறாருங்கோ.

**ரெண்டெழுத்தாருக்கு** ஒப்பந்த காலத்தில பணம் கொடுத்ததும் ஆயுதம் கொண்டுவர உதவினதும் இப்பதான் தெரிய வருகுது. விசாரணைகள் முடியேக்க சிலபேரின்ர முகத்திரை கிழியும் எண்டு அமைச்சர் ஒருவர் சொன்னாப் பிறகு பச்சைக் கட்சிக்குள்ள எரிஞ்ச நெருப்புச் சுவாலை விட்டு எரியுதாமுங்கோ.

பச்சைக் கட்சியின்ர கூடாரத்துக்குள்ள எரியிற நெருப்பு நாளைக்கு ஆர் ஆரின்ர தலையில பிடிச்சு எரியப் போகுது எண்டது தானுங்கோ கூட்டுச்சேர்ந்த தலைகளின்ர குழப்பமாம்.

பொலிற்றிக்ஸ்காரர் மட்டுமில்லையுங்கோ, அண்டர்வேல்ட் தொடக்கம் குண்டர் வேல்ட்கள் வரைக்கும் லிங் போகுதாமுங்கோ. உப்பிடி எல்லாத் தரப்பையும் சரிசெய்ய ரெண்டெழுத்தார் அப்பிடி என்ன சொக்குப்பொடி போட்டிச்சினமோ தெரியல்லையுங்கோ. எத்தினை பேரை பேங்கொக், சிங்கப்பூர், தாய்லாந்துக்கு கூட்டிக்கொண்டு போய் சொப்பிங் செய்ய விட்டிச்சினமோ எண்டு வினாத் தொடுக்கினமுங்கோ. வினாத் தொடுக்கிறவை தொடுக்கலாமுங்கோ, பங்கர் மஜிக் மேன் வந்து விடையளிக்கவே போறார். எல்லாம் நாலு சுவருக்குள்ள நடந்த இரகசியமாகத்தான் இருக்குதுங்கோ

# காதல் மாத்திரை!

✻ **ராதா** காதல் வராதா என்று யாரும் இனி பாட்டுப் பாடிக்கொண்டிருக்கத் தேவையில்லை. காதலில் விழ விரும்புவோருக்காகவே ஒரு ஸ்பெஷல் காதல் மாத்திரை தயாராகி வருகிறது. அதைச் சாப்பிட்டால் போதுமாம், "சப்ஜாடாக" காதல் வயப்பட்டு விடலாமாம்.

✻ **கேட்கவே** காமடியாக இருக்கிறதா? ஆனால் உண்மைதான். ஆண்டுக்கு ஆண்டு காதலர் தினத்தன்று பல புதுப்புது "ஐட்டங்களையும் ஐடியா"க்களையும் இறக்கி விடுவோர், இந்த முறை காதல் மாத்திரையைக் களத்தில் இறக்கி விட்டுள்ளனர்.



✻ **அதேபோலக்** காதலில் தோல்வியுற்றவர்களுக்கு அந்த உணர்வுகளை மறைக்கவும் ஒரு மாத்திரை வரப்போகிறதாம்.

✻ **இதுகுறித்து** அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறுகையில், விரைவில் காதலில் விழவும், விழுந்து அடிபட்டுக் காதல் தோல்வியால் அவதிப்படுபவர்களுக்கு அதை மறைக்கவும் மாத்திரைகள் தயாராகிவிடும்.

✻ **காதல்** என்பது இனிமேல் பஸ் பயணம் மாதிரிதான் இருக்கும். ஒரு ஸ்டாப்பில் ஏறி, அடுத்த ஸ்டாப்பில் இறங்கிக்கொள்வது போன்ற நிலை வந்துவிடும். அதற்கு இந்த மாத்திரை கை கொடுக்கும் என்கிறார்கள் அவர்கள்.

✻ **காதல்** என்பது மனித மூளையில் ஏற்படும் ஒரு இரசாயன மாற்றம்தான். இந்த மாற்றத்தைத் தூண்டுவிக்கும் வகையில் மாத்திரைகளைப் பயன்படுத்தினால் கண்டிப்பாகக் காதல் உணர்வு தோன்றும். அதேபோல அந்த உணர்வை மரத்துப் போக வைக்க இன்னொரு மாத்திரையும் சாத்தியம்தான் என்கிறார்கள் இந்த விஞ்ஞானிகள்.

✻ **அமெரிக்க** நரம்பியல் விஞ்ஞானிகள் இதுகுறித்துக் கூறுகையில், சரியான கலவையில் உருவாக்கப்படும் இந்த வேதியியல் மாத்திரைகள் நிச்சயம் காதலில் விழவும், காதலிலிருந்து மீளவும் உதவும் என்கிறார்கள்.

✻ **அட்லாண்டாவில்** உள்ள எமோரி மருத்துவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லேரி யங் கூறுகையில், மனித மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றத்தால்தான் காதல் உணர்வுகள் தோன்றுகின்றன என்பதை நேரடியாக டிவி மூலம் விளக்கும் காலம் வந்து விட்டது.

✻ **இது** தொடர்பாக அமெரிக்கா மற்றும் கனடாவில் காணப்படும் எலியைப் போன்ற தோற்றமுடைய பிரெய்ரி வோல்ஸ் விலங்குகளிடம் நாங்கள் சோதனை மேற்கொண்டுள்ளோம். அதில் மூளையில் ஏற்படும் வேதியியல் மாற்றமே காதல் உணர்வுகளுக்குக் காரணம் என்பது தெரிய வந்தது.

✻ **அந்த** உணர்வுகளின் பின்னணி குறித்து தற்போது ஆய்வு செய்து வருகிறோம்.

✻ **ஒரு** பெண் பிரெய்ரி வோல் மீது ஹார்மோனைச் செலுத்தியபோது அது இன்னொரு ஆண் விலங்கின் துணையை நாடியதை நாங்கள் கண்டோம்.

✻ **பின்னர்** அந்த ஹார்மோன் மூளைக்குப் போவதைத் தடுத்தபோது, ஆண் துணையின் உதவியை அது நாடவில்லை. மாறாக அது இருக்கும் பக்கம் கூட அது போகவில்லை.

✻ **மனித** மூளையும் இதேபோலத்தான் செயல்படுகிறது. மூளையைத் தூண்டுவிக்கும் இந்த வகை ஹார்மோன்கள் உண்மையில் மனிதனின் பழக்க வழக்கங்களையும் கூடக் கட்டுப்படுத்துகிறது, மாற்றுகிறது.



✻ **இந்த** ஹார்மோன் அதீதமாகச் செயல்பட்டால் கண்ணோடு கண் பார்த்து அணுகும் தைரியம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஏற்படும். காதலில் இது முக்கியமாச்சே.. இதுதான் காதல் உணர்வாக நமக்குத் தெரிகிறது என்கிறார் அவர்.

✻ **இப்படி** மூளையைத் தூண்ட உதவும் இரு வகையான இரசாயன ஹார்மோன்களை (ஆக்சிடாக்சின் மற்றும் டோபமைன்) தற்போது மாத்திரை வடிவில் மாற்றி புழக்கத்தில் விட்டால், காதல் பழக்கத்திற்கு இது உதவக் கூடிய தோழனாக இருக்கும் என்கிறார்கள் இந்த விஞ்ஞானிகள்.

✻ **இனிமேல்** பழக வேண்டும் என யாராவது ஆசைப்பட்டால் கையில் பேப்பரும், பேனாவுமாக உட்கார்ந்து, கடலையும், வானத்தையும் பார்த்துக் கவிதை பாட வேண்டாம்.

✻ **பையில்** ஒரு மாத்திரையை எடுத்துப் போட்டுக் கொண்டால் போதும். எந்தப் பெண்ணைப் பிடிக்கிறதோ, டக்கென்று ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டால் போதும்....




என்னால் நிருபித்துகாட்டும்
மலையாள மாந்திரிக சக்தியால்!

(1)தொழில் வெற்றியின்மை, (2)வியாபாரத்தில் விருத்தியின்மை, (3)கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு (4)தாம்பத்தியவாழ்க்கையிலுள்ள பிரச்சனைகளுக்கு (5)திருமணம் தடைப்பட்டுக்கொண்டு இருத்தல், ஸ்திரீ புருஷ வசியம் (6)குழந்தை பாக்கியமின்மை, (7)வெளிநாடு செல்லத்தடை (8)மனக்குழப்பம், (9)பணமிருந்தும் மன நிம்மதியின்மை, (10)கடின உழைப்பிருந்தும் கையில் பணம் தங்காமை, (11)படிப்பு பட்டம் இருந்தும் புகழ்பெற முடியாமை, (12)முயற்சியிருந்தும் முன்னேற்றத்தில் தடை, (13)சூனியக்கோளாறு தீயசெய்வினைகள், (14)அதிஷ்ட வாழ்வு சொத்து சேர, இன்னும் உங்கள் சகல நிறைகுறைகளுக்கும் என்னை சந்திக்கலாம், (15) காண்ட அடிப்படையில் அக்குவேறு ஆணிவேறாக 331 பக்கம் கொண்ட அவரவர் ஜனனஜாதகத்தை வாழ்க்கை சித்திரமாக அறிந்து தெரிந்து செயற்பட, ஜாதக கணிப்புக்கும் மட்டும் கட்டணம் ரூபா 2700/- தபால் கட்டணம் 350/-

P.K.SAMY(J.D.G.A.N) JP

No.162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO - 13
011 2470615, 011 2342463, 011 2342464, Fax.0094-11-2344831
நுவரெலியாவில் என் நிறுவனம் துர்க்காதேவி ஆலயம்,
இல 33,கண்டி வீதி,நுவரெலியா 052 2222508.


## நெத்தியடி

வன்னியில் உள்ள மக்களை வெளியேற்றுவதற்கு இரண்டு பாதைகளைத் திறப்பதற்கு முடிவு?

- செய்தி -

**புலிகள் போட்டிருக்கும் கடினமான பாதையைக் கடப்பதற்கு எமக்கு யார் தைரியம் தருவது?**

**மக்கள். -**

**இன்று** விளையாட்டிலும் கூட பயங்கரவாதம் உள் நுழைந்துவிட்டது. இத்தகைய சம்பவங்களிலிருந்து ஒன்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அது தான் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்பது. -

- ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா.

**பயங்கரவாதத்தை வளர்த்தது அரசியல், எனவே அங்கிருந்துதான் பயங்கரவாத ஒழிப்பை ஆரம்பிக்க வேண்டும்!.**

**-மக்கள்.**

**சிவிலியன்கள்** பாதுகாப்புத் தொடர்பில் தமிழக அரசியல் தலைவர்கள் அவர்களைப் பாதுகாக்கும்படி வலியுறுத்தாது, புலிகளுக்கு ஆதரவாகவே கோஷம் எழுப்புகிறார்கள்.

- இலங்கை அமைச்சர் -

**சொந்த அரசியலுக்காக தங்கட நாட்டு அப்பாவிகளை எரிந்து சாக வைப்பவர்களுக்கு நாம் ஒரு பொருட்டா?**

**- மக்கள்.**

**துணிகரமான** தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்ற 12 ஆயுததாரிகள் தொடர்பான விபரங்களை இன்னும் பாகிஸ்தானால் திரட்டிக்கொள்ள முடியவில்லை.

- தமிழ் பத்திரிகைச் செய்தி -

**இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல்களைக் கொண்டாடியதுபோல, பாகிஸ்தான் தாக்குதலையும் இரசிக்கிறதோ எமது தமிழ் ஊடக தர்மம்?**

**- மக்கள்.**

**இலங்கை** கிரிக்கெட் அணி மீதான தாக்குதலுக்காக முழு இலங்கையிடமும் மன்னிப்புக் கோருவதாக உலகெங்கிலுமுள்ள பாகிஸ்தானியர்கள் இணைந்துள்ளனர்

- ஹவார்ட் பல்கலைக்கழக பாகிஸ்தான் மாணவன்.

**இந்தப் பண்பு, ராஜீவ் கொலையின்போது தமிழனிடம் இல்லாமல் போனதுதான் இன்றுவரை இலங்கைத் தமிழன் படும் துன்பத்திற்கு காரணமோ?**

**- மக்கள்.**

**உலகத்** தமிழர்கள் தமது உணர்ச்சிகளை வெளிக்காட்டி வருகிறார்கள். மலையகத் தமிழர்களின் உணர்வுகளை அரசுடன் ஒட்டி உறவாடுவோர் தடுத்து வருகின்றனர்

- கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன.

**மலையகத் தமிழர்களும் தீக்குளிக்க வேண்டும் என்கிறீர்களோ?**


**- மக்கள்.**

**வன்னியிலிருந்து** இடம்பெயர்ந்து, வவுனியாவில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை உடனடியாக அவர்களின் பூர்வீக இடங்களில் மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- கிஷோர் எம். பி. கூட்டமைப்பு -

**தமது பூர்வீக இடங்களிலிருந்து மக்கள் ஏன் தப்பி வந்தவர்கள் என்று வன்னி எம். பி.க்குத் தெரியாது போலிருக்கிறதே??**

**- மக்கள்.**



# 'கந்தன் கருணை படுகொலை'யில் 'சுடரொளி' வித்தியாதரனுக்குச் சம்பந்தமா?

**கொழும்பிலிருந்து** வெளிவருவது சுடரொளி என்ற தினசரி. யாழ்ப்பாணத்திலிருந்து உதயன் என்ற தினசரி வெளிவருகிறது. இந்த இரண்டினதும் பிரதம ஆசிரியர் நடேசபிள்ளை வித்தியாதரன் என்பவர். இந்தப் பத்திரிகை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஈ.சரவணபவன் என்பவர். வித்தியாதரனின் சகோதரியையே சரவணபவன் திருமணம் செய்துள்ளார். அண்மையில் கல்கிசையிலுள்ள மலர்ச்சாலையொன்றுக்கு முன்னால் வைத்து வித்தியாதரன் இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். கொழும்பிலும் கட்டுநாயக்காவிலும் புலிகள் இயக்கத்தினர் அண்மையில் நடத்திய கரும்புலி விமானத்தாக்குதல் முயற்சி தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டாரென்று தெரிவிக்கப்படுகிறது. இவர் சட்ட விதிகளுக்குப் புறம்பான முறையில் கைது செய்யப்பட்டாரென்று மைத்துனர் சரவணபவன் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். அதாவது கைது செய்யும் அதிகாரி தன்னை யாரென கைது செய்யப்படுபவரிடம் தெரிவிக்க வேண்டும். அத்துடன் கைது செய்வதற்கான காரணத்தையும் விளக்க வேண்டும். அத்துடன் கைது செய்யப்படுவர் எதிர்ப்பாரென்றால் குறைந்தபட்ச பலாத்காரத்தை அதிகாரிகள் பயன்படுத்த முடியுமென்றும் சட்ட விதிகள் கூறுகின்றன. இவையொன்றும் பின்பற்றப்படவில்லை என்பது மைத்துனர் சரவணபவன் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள். இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் பொலிஸ் அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

வித்தியாதரன் கைதான முறை குறித்தும், அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்தும் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று ஊடக அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. ஊடகங்கள் எல்லாமே ஊடக தர்மம், ஊடக சுதந்திரமென்று எவ்வளவுதான் கூறினாலும் பெரும்பாலும் பக்கச்சார்பாகவே நடந்துகொள்கின்றன என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அரச சார்பு ஊடகங்கள் அரசுக்குச் சார்பான செய்திகளையும் விடயங்களையுமே வெளியிடுகின்றன. இதைப்போன்று அரச விரோத ஊடகங்கள் அரசுக்கு விரோதமானவற்றுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றன. இன்னும் சில ஊடகங்கள் பணம் பண்ணும் நோக்கோடு இளசுகளைச் சீரழிக்கும் வகையில் செயற்படுகின்றன.

சுடரொளி, உதயன் போன்ற பத்திரிகைகளை வாசித்து வருபவர்களுக்கு ஓர் உண்மை புலப்படும். என்றுமே புலிகளுக்குச் சார்பான முறையிலேயே பெரும்பாலும் செய்திகளையும், விடயங்களையும் அவை வெளியிட்டு வந்திருக்கின்றன. 'அடைமொழிகள்' இட்டுச் செய்திகளை வழங்குவதில் இந்தப் பத்திரிகைகள் முன்நிற்கின்றன. புலிகளுக்குச் சார்பாக எழுதக் கூடாதென்று யாரும் எந்தப் பத்திரிகைக்கும் அறிவுறுத்தலோ உத்தரவிடவோ முடியாது. ஊடக முதலாளிகளின் அல்லது எஜமானர்களின் விருப்பு, வெறுப்புக்கு ஏற்ப பத்திரிகைகளும் பெரும்பாலும் பக்கஞ் சார்ந்து எழுதுகின்றன.

புலிகளின் துப்பாக்கிக்குப் பயந்து யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களும், பத்திரிகைகளும் செயற்பட்ட காலமொன்றிருக்கிறது. யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பத்திரிகை நிறுவனங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. வன்னி போன்ற பகுதிகளுக்குச் சில பத்திரிகைகளை அனுப்பக் கூடாதெனத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. புலிகளுக்கு ஆதரவாகவே எழுதிவந்ததால், சுடரொளியும் உதயனும் புலிச்சார்ப் பத்திரிகைகளாகவே பலராலும் பார்க்கப்பட்டு வந்திருக்கின்றன.

ஆயுதத் தர்பார் மலிந்த இடங்களாக இலங்கையின் வடக்கும், கிழக்கும் இருந்து வந்திருக்கின்றன. நீதிக்குப் புறம்பான கைதுகள், கொலைகள், ஆட்கடத்தல்கள், கொள்ளைகள், என்றெல்லாம் இடம்பெற்றிருக்கின்றன. 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி "கந்தன் கருணைப் படு-கொலைகள்" இடம்பெற்றன. புலிகள் இயக்கம் ஏனைய இயக்கங்களான ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கங்களை 1986 ஆம் ஆண்டு தடை செய்தது. இந்த இயக்கங்களைச் சேர்ந்த பலர் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார்கள். பலர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பலர் யாழ்ப்பாணம், நல்லூரிலுள்ள 'கந்தன் கருணை' என்ற பெயர் கொண்ட இல்லத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்த இரண்டு மாடி வீடு அரசரட்ணம் என்றழைக்கப்பட்ட கொரில்லாவின் ஒருவருக்குச் சொந்தமானது. இந்த கந்தன் கருணை இல்லத்தைத் தவிர, யாழ்ப்பாணம் பிரௌன் வீதியிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் நாவலர் வீதியிலும், புலிகளால் கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். நல்லூர் கந்தன் கருணை இல்லத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல கைதிகள் நாவலர் வீதி வீட்டுக்கு ஏற்கனவே மாற்றப்பட்டிருந்தனர். நாவலர் வீதி வீட்டில் நடந்த படுகொலைகளையே கந்தன் கருணைப் படுகொலைகள் என்று வர்ணிக்கின்றனர். சுமார் அரை மணித்தியாலத்துக்குள் 63 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். தப்பிச் சென்ற இரண்டொருவருவரைத் தவிர, தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய அனைவருமே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அப்போது யாழ்ப்பாணத்தில் புலிகளின் தலைவராக இருந்தவர் கிட்டு. இரண்டாம் குறுக்குத் தெருவில் கிட்டுவின் காதலியான சிந்தியாவின் வீடு இருந்தது. சிந்தியாவின் தந்தை, யாழ்ப்பாணம் கடல் நிலையத்தில் கடமையாற்றி வந்தார். சிந்தியா, யாழ். பல்கலைக்கழக மாணவி. ஒவ்வொரு நாள் மாலையிலும் தனது காதலியைப் பார்ப்பதற்காக இரண்டாம் குறுக்குத் தெரு வீட்டுக்குச் செல்லும் கிட்டு அன்று 29 ஆம் திகதியும் வீட்டுக்குச் சென்றார். பாதுகாப்புக்காகச் சக புலி உறுப்பினரொருவரையும் அழைத்துக்கொண்டு கிட்டு காரில் சென்றிருந்தார். காரை நிறுத்தி விட்டுக் கிட்டு இறங்குவதற்கு முன்னதாகவே கிட்டுவை நோக்கி கிரனைட் வீசப்பட்டது. இந்த தாக்குதலில் கிட்டு ஒரு காலை இழந்தார். மயக்கமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட கிட்டுவை டாக்டர்கள் பாதுகாத்தனர். கிட்டு மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு புலிகள் இயக்க உள் முரண்பாடுகளே காரணம் எனப் பின்னர் தெரிய வந்தது. மாத்தையாவின் ஆட்களே தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்பட்டது.

அப்போது அருணா என்றொருவன் யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தான். இவன், படையினரும் புலிகளும் நடத்திய கைதிகள் பரிமாற்றத்தின் போது விடுவிக்கப்பட்டவன். கிட்டுவே முன்னின்று இவனை விடுவித்ததாகவும் கூறப்படுகிறது. கிட்டு தாக்கப்பட்ட செய்தியை அறிந்ததும் அருணா நாவலர் வீதியில் ஏனைய இயக்கத்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த வீட்டுக்குச் சென்றான். அவன் கையில் எஸ். எம். ஜி. ரைபிள் மின்னிக் கொண்டிருந்தது. ரெலோ அல்லது ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் கிட்டு மீது தாக்குதல் நடத்தியிருக்க வேண்டுமென்று அவன் நினைத்துக்கொண்டான்.

இரவு 7.50 மணியவில் அங்கு சென்றவன், இரவு 8.20 வரை ஒவ்வொரு அறைக் கதவுகளாகத் திறந்து சரமாரியாகச் சுட்டான். அவனுக்கு உதவியாக இன்னும் இரண்டொரு பேரும் சுட்டார்கள். நாவலர் வீதி வீடு இரத்த வெள்ளமாகக் காட்சியளித்தது. இரவோடிரவாகச் சடலங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. காலையில் யாழ். மாநகர சபை ஊழியர்கள் பவுசரில் நீர் கொண்டு வந்து அந்த இடத்தைக் கழுவிச் சுத்தம் செய்தார்கள். அந்த இடம் இரத்தக் காடாகக் காட்சியளித்தது.

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலையை விடக் கந்தன் கருணைப் படு கொலைகள் மிக மோசமானவையென ஏனைய இயக்கங்கள் விமர்சனம் செய்தன. கந்தன் கருணைப் படுகொலைகள் தொடர்பாக முதலில் புலிகள் மௌனம் சாதித்தனர். மெல்ல மெல்ல விடயம் அம்பலமாகியதால் அதனைத் "தேசத் துரோகிகளின் சதி!" எனப் புலிகள் வர்ணித்தனர். இது தொடர்பாக ஒரு வாரம் கழித்துப் புலிகள் ஒரு அறிக்கையை வெளியிட்டனர். ஏப்ரல் ஆறாம் திகதி வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

" விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள், இவர்களுக்குக் காவலுக்காக நின்றவர்களின் துப்பாக்கிகளைப் பறித்துக் கொண்டு தப்பிச் செல்ல முற்பட்டனர். அப்போது நடைபெற்ற மோதலில் 18 கைதிகளும், புலிகள் இயக்க உறுப்பினர்கள் இரண்டு பேரும் பலியானார்கள்" இவ்வாறு புலிகளின் அறிக்கை தெரிவித்தது.

சம்பவம் நடைபெற்ற வீடு முன்னர் நடராஜா என்பவருக்குச் சொந்தமானது. இவர் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து விட்டார். 1998 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டுவரை வித்தியாதரன் இந்த வீட்டில் தான் குடியிருந்தார். கந்தன் கருணைப் படுகொலைகள் பற்றி வித்தியாதரனுக்கு தெரியுமா? விசாரிக்கப்பட வேண்டிய விடயம் இது.



கிட்டு



# ஈழப்போராட்டத்தின் இரத்த சாட்சியங்கள் 105

அடுத்த நிகழ்விற்குச் செல்வதற்கு முன்பாக இதில் இன்னொரு விடயத்தையும் குறித்துக்காட்ட வேண்டும். வல்லை வெளியில் அரச படையினர் தரையிறங்க முற்பட்ட நடவடிக்கையானது வடமராட்சிப் பகுதியைப் படையினர் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வரும் படை நடவடிக்கையைத் தொடர்வதற்காகவே. ஆனாலும் அந்த நடவடிக்கை ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகளின் கடும் முயற்சியினால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தத் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். போராளிகளின் பெயர் விபரங்களை வெளியிட மறந்துவிட்டதாகக் கூறி அந்தப் பெயர் விபரங்களையும் ஒருவர் ஞாபகப்படுத்தி அனுப்பியிருக்கின்றார்.

வல்லை வெளியில் அப்போது நடந்த தாக்குதலில் ஈடுபட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகளை நேரடியாக நின்று வழி நடத்திக்கொண்டிருந்தவர் ஜெறோம். அந்த இயக்கத்தின் சார்பாக அப்போது வடமராட்சிப் பகுதிக்கு இவர் விஷேடமாக நியமிக்கப்பட்டிருந்த ஒருவர். இவரோடு தனேஸ், பகீரதன், விந்தன், பத்தன் போன்ற வடமராட்சி பிராந்திய ஈ.பி.ஆர்.எல்.எவ் முக்கியஸ்தர்களும் அந்தக் களமுனையில் நின்று வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பினர் ஆரம்பங்களில் சுய பொருளாதாரத் திட்டங்களைத் தொடங்கியிருந்தனர். உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து அதில் இருந்து பெறும் வருமானங்களை வைத்துப் போராட்டத்தை கொண்டு நடத்துவதற்கான நிதியைத் தேடிக்கொள்வதற்கான பல ஆரம்ப முயற்சிகளைத் தொடங்கியிருந்தனர்.

அதில் ஒன்றுதான் ஜனசக்தி சவர்க்கார உற்பத்தி. ஜனசக்தி சோப் நிறுவனம் ஆரம்பங்களில் யாழ். சிறுப்பிட்டிப் பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பினரால்தான் நடத்தப்படுகின்றது என்று அப்போது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

84 இல் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர்களில் ஒருவரான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பணத்திற்கு வந்திருந்தார். அதன் பின்னர் ஜனசக்தி சோப் நிறுவனம் இனுவில் பகுதிக்கு மாற்றப்பட்டு அந்த உற்பத்தி மேலும் விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

இனுவில் பகுதியில் இருந்தது ஒரு பீடிக்கம்பனி. அந்தப் பீடிக்கம்பனி இருந்த வீட்டில்தான் ஜனசக்தி சோப் நிறுவனம் செயற்பட்டுக் கொண்டிருந்தது. இந்த நிறுவனத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தவர்தான் ஜெறோம்.

அப்போது இன்னொரு உற்பத்தி முயற்சியினையும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பினர் தொடங்கியிருந்தனர். அது ஒரு தேயிலை உற்பத்தி. அதற்குப் பெயர் வீக்கோ தேயிலை.

இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. தேகத்திற்கு ஆரோக்கியமானது. ஆனாலும் உண்மையில் அதில் சுவை அதிகமில்லை. ஆனாலும் இது எங்கடை பெடியள் தயாரித்த தேயிலை என்று கூறிக்கொண்டு சுவையான தேயிலை என்று அதையே அதிகமான மக்கள் பாவித்து வந்தனர். இது அந்த அமைப்பின் மீது

மக்களுக்கு அப்போது இருந்த ஆதரவை வெளிப்படுத்தியிருந்தது.

1986 இல் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு புலிகள் இயக்கத்தால் தடை செய்யப்பட்ட பின்னர் அந்தத் தேயிலையை எவரும் பாவிக்கக் கூடாது என்று புலிகள் மக்களை அச்சுறுத்தியிருந்தனர்.

> ஈழ விடுதலைப் போராட்டத்தில் பாரிய பங்களிப்பையும், தியாகங்களையும் அனைத்து இயக்கப் போராளிகளும் செய்து முடித்திருக்கிறார்கள். ஆனாலும் புலிகள் அமைப்பினர் தாம் மட்டும்தான் அனைத்துத் தியாகங்களுக்கும் சொந்தமானவர்கள் என இன்று தம்மை இனங்காட்ட முற்படுகின்றனர்.

ஆனாலும் அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பை மிகவும் நேசித்த மக்கள் புலிகளின் அச்சுறுத்தலையும் மீறி வீக்கோ தேநீரையே அருந்தி வந்தனர். வீட்டுக்கு யாரும் விருந்தினர்கள் வந்தால் வீக்கோ தேநீர் போடவா என்று அன்போடு கேட்டு விருந்தினர்களை வரவேற்றிருந்தது இப்போதும் பலருக்கும் ஞாபகமிருக்கும்.



ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் தோழர் பத்மநாபாவுடன் தோழர் டக்ளஸ் தேவானந்தா அமர்ந்திருப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.

இந்த வீக்கோ தேயிலை உற்பத்தியும் ஜனசக்தி சோப் நிறுவனம் இருந்த அதே இனுவில் வீட்டில்தான் இருந்தது. இதற்கும் ஜெறோம்தான் பொறுப்பாக இருந்து வந்தவர். இவரே வல்லை வெளித் தாக்குதலை நேரடியாக நின்று வழி நடத்தி வந்தவர். இந்த வரலாற்றை உண்மையை குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் பாரிய பங்களிப்பையும், தியாகங்களையும் அனைத்து இயக்கப் போராளிகளும் செய்து முடித்திருக்கிறார்கள். ஆனாலும் புலிகள் அமைப்பினர் தாம் மட்டும்தான் அனைத்துத் தியாகங்களுக்கும் சொந்தமானவர்கள் என இன்று தம்மை இனங்காட்ட முற்படுகின்றனர்.

ரெலோ அமைப்பை புலிகள் இயக்கத்தினர் தடை செய்தபோது ரெலோ போராளிகளை அவர்கள் தெருத்தெருவாகச் சுட்டும், நெருப்பில் தீயிட்டும் கொன்றொழித்திருந்தனர். இதனால் புலிகள் அமைப்பு என்றால் பலருக்கும் ஒரு அச்சம் ஏற்பட்டிருந்தது.

இதை அடுத்து புளொட் அமைப்பைப் புலிகள் தடை செய்வதாக அறிவித்திருந்தனர். அப்போது வடமராட்சிப் பகுதியில் ஜெறோம் ஆற்றிய விடயங்கள் உண்மையில் துணிச்சல் மிக்கவை. அப்போது புளொட் அமைப்பின் வடமராட்சிப் பொறுப்பாளராக இருந்தவர் சங்கர். அரசியல் பொறுப்பு சன்.

புளொட் சங்கர் வடமராட்சியில் உள்ள வதிரி என்ற கிராமத்தில் முகாம் அமைத்து தங்கியிருந்தவர். தம்மை புலிகள் அமைப்பினர் தடை செய்வதாக அறிவித்திருந்த கையோடு புளொட் அமைப்பினர் தமது இயக்கத்தை தாமே கலைத்து விடுவதாக அறிவித்திருந்தனர்.

புளொட் சங்கர் ஜெறோமிற்குத் தகவல் அனுப்பினார். நாங்கள் எமது அமைப்பைக் கலைத்து விட்டோம். ஆகவே நீங்கள் வந்து எமது வாகனங்களையும், மற்றும் ஆயுதங்களையும் பொறுப்பெடுத்து

**தேடனார்**

நீங்களே அதைப் பாவித்துக் கொள்ளுங்கள் என்றார் புளொட் சங்கர்.

தகவல் கிடைத்ததும் ஜெறோம் புளொட் அமைப்பின் வதிரி முகாமிற்குச் சென்றிருந்தார்.

அவர்களிடம் இருந்த வாகனங்களையும், தளபாடங்களையும் பொறுப்பொடுத்து வந்திருந்தார் ஜெறோம். ஆனால் புளொட் அமைப்பு அப்போது ஆயுதங்களை அதிகளவில் வைத்திருந்தவர்கள் அல்ல.

புளொட் அமைப்பினரின் தளபாடங்களைப் பொறுப்பேற்ற ஈ.பி.ஆர்.எல் அமைப்பினர் மீது எரிந்து விழுந்தனர் புலிகள்.

(சாட்சிகள் தொடரும்)

# மனித நேயர் மார்டின் லூதர் கிங்



அங்கம் -04

"அரசாங்கத்தின் அநீதியான சட்டங்களையும், நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்துவதற்கு குடிமக்களுக்கு உரிமையுண்டு"-என்று வாதாடியவர் ஹென்றி தோரே. இவரது சட்ட மறுப்புக் கருத்தோடு மிகவும் உடன்பட்டவர் மகாத்மா காந்தி. இந்தக் கருத்து குடியரசுக் கட்சியின் அடிமை ஒழிப்புக் கருத்துக்கு மேலும் வலுவூட்டின.

குடியரசுக் கட்சியின் தவைலவராக விளங்கி, உலகப் புகழ்பெற்றவர் ஆபிரகாம் லிங்கன். இவர் ஓர் வழக்கறிஞர். இவர் கெண்டகி என்ற ஊரில் ஒரு ஏழைக் குடும்பத்தில் 1809 ஆம் ஆண்டில் பிறந்தார். மனிதாபிமானமும் பரந்த உள்ளமும் கொண்டவர் லிங்கனின் தந்தை. அவர் கல்வி கற்கவில்லை. கறுப்பு இன மக்கள் மீது மிகுந்த பரிவு கொண்டவர். அவரைப் போலவே லிங்கனும் பரிவுடன் விளங்கினார். அடிமை முறையை முற்றிலும் வெறுத்தார். மனித நேயத்தோடு அடிமைகளையும் தங்கள் சொந்த சகோதரர்களாக நினைக்கும் லிங்கன், குடும்பத்தின் உயரிய பாங்கு, அவர்களின் வீட்டருகில் இருந்த தோட்ட முதலாளிக்குக் கடும் எரிச்சலை ஏற்படுத்தியது. ஏனெனில் அந்தச் செல்வந்தர் அடிமைகளை வைத்து வேலை வாங்குபவர். அவர் லிங்கன் குடும்பத்திற்குப் பல தொல்லைகள் கொடுக்க ஆரம்பித்தார்.

சூழ்நிலை காரணமாக லிங்கன் குடும்பம் மேற்குப் பகுதிக்குக் குடிபெயர்ந்தது. ஆபிரகாம் லிங்கன் கடுமையான உழைப்பாளி. தந்தையுடன் விவசாய வேலைகளைச் செய்தார் மரம் வெட்டினார். அடுத்து ஒரு கடையில் எழுத்தாளராகப் பணிபுரிந்தார். படகுகளில் சரக்குகளை ஏற்றிச் செல்லும் வேலையும் பார்த்தார். ஊர் மக்களின் பேரன்பைப் பெற்ற லிங்கன், கிராம அஞ்சல் அதிகாரியாகப் பணியாற்றினார். குறுகிய காலத்தில் சட்டம் படித்து வழக்கறிஞரானார்.

கடமை தவறாமல் பணியாற்றிய லிங்கன் அடிமை முறையை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று தீவிரமாகப் பிரசாரம் செய்தார். நாட்டில் அனைத்துத் தரப்பினருடைய நன்மதிப்பைப் பெற்றார்.

1860 ஆம் ஆண்டில் நடைபெறவிருந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சி போட்டியிட முடிவு செய்தது. அக்கட்சி ஆபிரகாம் லிங்கனை வேட்பாளராக நிறுத்தியது. தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றார்.

> "எந்தவொரு மாநிலமும் முறையான சட்டபூர்வ வழிகளில் அல்லாமல் வேறு எந்த வழிகளிலும் எந்தவொரு நபரது வாழ்வையோ, சுதந்திரத்தையோ அல்லது சொத்துக்களையோ பறிக்கக் கூடாது அல்லது அதனுடைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டங்களின் சமமான பாதுகாப்பை எந்தவொரு நபரும் மறுக்கக்கூடாது."

இதனால் ஆத்திரம் கொண்ட அமெரிக்காவின் தென் பகுதியிலிருந்த தோட்ட முதலாளிகள் தாங்கள் அமெரிக்காவிலிருந்து பிரிந்து போகப் போவதாக அறிவிப்புச் செய்தனர்.

1860 இல் தெற்குக் கரோலினா மாநிலம் முதன் முதலாகப் பிரிவினைப் பிரகடனம் செய்தது. அதைத் தொடர்ந்து இதரத் தெற்குப் பகுதி மாநிலங்கள் ஒவ்வொன்றாக பிரிந்து போக ஆரம்பித்தன. அடிமை முறை நீடிக்க வேண்டுமென்று கூறிய தென் பகுதித் தலைவர்கள் சிறப்பு மாநாட்டைக் கூட்டி தங்களுக்கென்று ஒரு அரசை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்கள் கர்னல் டேவீஸ் என்பவரைக் குடியரசுத் தலைவராகத் தேர்வு செய்தனர்.

அவர்கள் தங்கள் முக்கிய கொள்கையாக அறிவித்தது: "எங்களுடைய புதிய அரசின் முக்கிய கொள்ளை நீக்ரோ, (கறுப்பின மனிதன்) வெள்ளைக்கார மனிதனுக்குச் சமமாக மாட்டான். அடிமைத்தனம் என்பது அவனுக்கு இயல்பாகவே அமைந்தது என்பதுடன், வழக்கமான நிலைமையுமாகும்" என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

நன்றி:— ஆச்சா

இதன் காரணமாக, அமெரிக்காவில் இரண்டு அரசாங்கங்கள், இரண்டு குடியரசுத் தலைவர்கள், இரண்டு வெள்ளை மாளிகைகள், இரண்டு இராணுவங்கள் உருவாக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 1861 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமெரிக்க உள்நாட்டுப் போர் தொடங்கியது. ஆபிரகாம் லிங்கனின் படையில் வெள்ளையர்களுடன் 1,86,000 கறுப்பினத்தவர்கள் போர் வீரர்களாகச் சேர்க்கப்பட்டனர். ஊதியம் போன்றவற்றில் பாகுபாடுகள் காட்டப்பட்டாலும் அவர்கள் வீரத்துடன் போரிட்டனர்.

தெற்குப் பகுதியில் பதினொரு மாநிலங்கள் இருந்தன. அங்கு 91,00,000 மக்கள் வசித்து வந்தனர். அவர்களில் 36,50,000 கறுப்பின மக்களும் அடங்கும்.

அமெரிக்க உள்நாட்டு யுத்தம் 1861 முதல் 1865 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. இந்த யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், 1863 ஆம் ஆண்டில் ஆபிரகாம் லிங்கன் அடிமைகளுக்குச் "சுதந்திரப் பிரகடனம்" செய்தார். அதன்படி அமெரிக்காவின் தென் பகுதியில், வெள்ளையர்கள் கலகம் செய்துவரும் பகுதிகளில் உள்ள எல்லா அடிமைகளும் சுதந்திரமானவர்கள் என்று பிகரடனம் செய்யப்பட்டது. ஆனால், அந்தப் பிரகடனம் 1865 ஆம் ஆண்டில்தான் பதின்மூன்றாவது



அரசியல் சட்டதிருத்தத்தின் மூலம் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டது. அடிமைமுறை என்பது 'சட்டவிரோதமானது' என்று அது அறிவித்தது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது - "எந்தவொரு மாநிலமும் முறையான சட்டபூர்வ வழிகளில் அல்லாமல் வேறு எந்த வழிகளிலும் எந்தவொரு நபரது வாழ்வையோ, சுதந்திரத்தையோ அல்லது சொத்துக்களையோ பறிக்கக் கூடாது அல்லது அதனுடைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டங்களின் சமமான பாதுகாப்பை எந்தவொரு நபரும் மறுக்கக்கூடாது."

அமெரிக்க உள்நாட்டுப் போர் நான்காண்டுகள் நீடித்தது. முடிவில் வடக்குப் பகுதியினர் வெற்றி பெற்றனர். ஆனால், அந்தப் போர் முடிந்த ஐந்தாவது நாளில், 1865 ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள் ஆபிரகாம் லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## மனித நேயர் தோற்றம்

அடிமை நிலையை அமெரிக்காவில் முற்றிலும் இல்லாமல் செய்ய, அயராது உழைத்த மகான் மார்டின் லூதர் கிங். இவருடைய முன்னோர்கள் ஆபிரகாம் லிங்கன் செய்த கறுப்பு அடிமைகள் விடுதலை பிரகடனத்தைத் தொடர்ந்து அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கப் பட்டவர்கள்.

(தொடரும்)

# சூடான் அதிபருக்கெதிரான போர்க்குற்றம்

# சர்வதேச நீதிமன்றத்தின் பிடியாணை


**சூடான்** அதிபர் ஓமர் அல் பசீருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்த விடயம் இன்று சர்வதேச அரங்கில் முக்கிய பேசு பொருளாகியுள்ளது. தார்பூர் பிராந்தியத்தில் அவரது அரசாங்கம் மேற்கொண்ட மனித உரிமை, உயிர் அழிவுகளுக்கு அவர் விசாரிக்கப்பட வேண்டுமென ஹேக்கில் அமைந்துள்ள அனைத்துலக நீதிமன்றம் வலியுறுத்தி உள்ளது. சர்வதேச நீதிமன்றத்தின் இந்தக் கோரிக்கையை எதிர்த்து சூடானிய மக்கள் தற்போது ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

மேற்கின் காலனித்துவத்திலிருந்து ஆபிரிக்காவை விடுவிக்க வேண்டுமெனவும், இந்தப் பிடியாணை குறித்து தான் அஞ்சப் போவதில்லை எனவும் சூடானிய அதிபர் ஓமர் அல் பசீர் தெரிவித்திருக்கிறார். இப்பிடியாணை பிறப்பிக்கப்பட்டவுடன் அங்குள்ள தொண்டு நிறுவனங்களை உடனடியாக சூடானை விட்டு வெளியேறுமாறு அரசாங்கம் கோரியுள்ளது. இந்த விவகாரம் மேற்குலகத்திற்கும் ஆபிரிக்காவுக்குமிடையிலான பனிப் போராக இப்போது வெடித்துள்ளது.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தார்பூர் பிரதேசத்தில் தொடரும் வன்முறையினால் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளதுடன் மில்லியன் கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை கணக்கிட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர பல நாடுகள் முயற்சித்தும் வருகின்றன. சூடானிய அதிபர் மீதான இப்பிடியாணை தார்பூரில் சமாதானத்தைக் கொணர்வதற்கு சந்தித்துவரும் தடைகளில் மிகப்பெரும் தடையாக இருக்குமென தான் அஞ்சுவதாக ஆபிரிக்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அதேவேளை அமெரிக்காவும், சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும் இந்தப் பிடியாணையை வரவேற்றுள்ளன. கொடுமைகள் இழைப்போர் நீதியின் முன் நிறுத்தப்படுவர் என அமெரிக்க அரசுச் செயலகம் தெரிவித்துள்ளது. பயங்கரக் குற்றங்களைப் புரிந்தால் அரசுத் தலைவர்கள் கூட விதிவிலக்கல்ல என அனைத்துலக நீதிமன்றம் முடிவு கட்டியிருக்கிறது என சர்வதேச மனித உரிமைகள் இயக்கம் தெரிவித்துள்ளது. பிரிட்டன், பிரான்ஸ், பசீருக்கு எதிரான பிடியாணையை வரவேற்றுள்ளன.

இதே வேளை இப்பிடியாணையைக் கண்டித்தும், ஒத்திவைக்கும் படியும் சில நாடுகள் அனைத்துலக நீதிமன்றைக் கோரியுள்ளன. இது மிகவும் ஆபத்தான முன்மாதிரி என ரஷ்யா கண்டித்துள்ளது. இப்பிடியாணையை ஒத்திவைக்கும்படி எகிப்து கோரியுள்ளது. சீனாவும்,



ஆபிரிக்க ஒன்றியமும் அரபுலீக்கும் இதனை ஆதரிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளது. சர்வதேச நீதிமன்றத்தின் செயலுக்குப் பல ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் உட்பட ஏழு குற்றச்சாட்டுகளுக்கு சூடானிய அதிபர் பதில் அளிக்க வேண்டுமென சர்வதேச நீதிமன்றம் கோரி இப்பிடியாணையைப் பிறப்பித்துள்ளது. இன அழிப்புக் குற்றச்சாட்டும் இதில் சேர்க்கப்பட வேண்டுமென கோரப்பட்ட போதும், இன அழிப்புக் குற்றச்சாட்டை சூடானிய அதிபர் மீது சுமத்தப் போதிய ஆதாரம் இல்லாததால் அக்குற்றச்சாட்டை சேர்க்க முடியாது என சர்வதேச நீதிமன்றம் நிராகரித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சூடானின் மேற்குப்புறத்தில் அமைந்துள்ள தார்பூர் பிராந்தியம் தனது சுயாதீனத்தைக் கோரும் அரசியல் போராட்டம் பெரும் வன்முறையாகவும், அழிவுகளாகவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தார்பூர் பிரதேசத்தில் நிறைந்து காணப்படும் எண்ணெய், யுரேனியம், தங்கம் போன்ற வளங்கள் காரணமாகவே இப்பிரதேசத்தை சூடானில் இருந்து பிரிக்க மேற்கு நாடுகள் முயற்சித்து வருவதாக 1989 ஆம் ஆண்டிலிருந்து அதிகாரத்தில் உள்ள சூடானிய அதிபர் ஓமர் அல் பசீர் மேற்கு நாடுகள் மீது கண்டனத்தைத் தெரிவித்து வருவதுடன் மேற்குடனான பனிப் போரையும் முன்னெடுத்து வருகிறார்.

**ஊரோடி**



# மலையகத்து அவலம்

# பசறை மக்களின் அவலம்; ஊதியம் கொடுக்காத ஊதாரி நிர்வாகங்கள்

**பசறை,** பகுதியில் அமைந்துள்ள கோணக்கலை, கனவரல்ல, கந்தசேனை, பிங்கராவை, இந்தகலை, கிளனன் ஆகிய தோட்டங்களில் வாழ்ந்து வருகின்ற மக்கள் தொடர்ந்தும் தோட்ட நிர்வாகங்களினால் பந்தாடப்பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னதாக முன்னைய மாதத்திற்கான சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்றும் 25ஆம் திகதிக்கு முன்னதாகக் குறித்த மாதத்திற்கான முற் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள போதிலும், தோட்டங்களை நிர்வகித்து வருகின்ற இருபத்தூரண்டு தோட்ட நிர்வாகங்களில் பெரும்பாலானவை இந்த நிபந்தனைகளை அவ்வவ்போது மீறியே வருகின்றன. எனினும் குறித்த ஆறு தோட்டங்களிலும் இந்த நிலைமை தொடர்ச்சியாகக் கடந்த இரண்டரை வருடங்களாக நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. அதாவது, இந்தத் தோட்டங்களை அரசிடம் இருந்து பெற்றுக் கொண்ட நமுனகல பிளான்டேஷன் நிர்வாகத்தினர் அதனை நீண்ட கால உப குத்தகைக்கு டஸ்கன் பொட்லிங் நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளனர். இக்கைமாறலின் போது சுமார் 500 மில்லியன் ரூபாய் வரையில் கைமாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்நிர்வாகப் பரிமாறலில் மலையகத்தின் முக்கிய தொழிற்சங்கம் ஒன்று முக்கிய பாத்திரம் வகித்துள்ளதாகவும் இதன் மூலம் அவர்களுக்கு 50 மில்லியன் ரூபாய் தரகுப் பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இந்தத் தகவலை சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அப்புத்தளை விருந்தினர் விடுதியில் குறித்த தோட்டப் பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்ட போது டஸ்கன் பொட்லிங் நிர்வாகத்தின் முக்கிய நிர்வாகி ஒருவர் பகிரங்கமாகவே தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

தோட்ட நிர்வாகம் சம்பந்தமாக முன் அனுபவம் ஏதும் இல்லாத நீண்ட காலமாக வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றவர்களின் கைகளுக்கு இந்தத் தோட்டங்கள் கை மாறியதில் இருந்து ஒழுங்கான பராமரிப்புக்கள் ஏதும் இல்லாததுடன் நிர்வாகச் சிக்கல்களும் ஏற்பட காலப்போக்கில் தோட்ட உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு மாதாந்தச் சம்பளம் வழங்குவதற்கே திண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டது. இது, குறித்த தோட்டத்தில் வேலை செய்கின்ற 6000 தொழிலாளர்களை நம்பி வாழ்ந்து வருகின்ற 25,000 தோட்ட மக்களின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. கடந்த வருட இறுதியில் இந்நிலை உச்சக் கட்டத்தினை அடைந்தபோது, நிலைமையைச் சமாளிக்க முடியாத மக்கள் தங்களது ஆதங்கங்களை வெளியிட்டு வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம் என வீதிக்கு இறங்கிய வேளையில், சம்பந்தப்பட்ட தரப்பினர் அரச உயர்மட்டத்தினர் முன்னிலையில் தோட்ட நிர்வாகங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர். இதில் தொழிலாளர் சார்பாக முக்கிய தொழிற்சங்கம் கலந்து கொண்டிருந்தது. இந்தப் பேச்சுவார்த்தை முடிவில் தோட்ட நிர்வாகப் பொறுப்புக்கள் அனைத்தும் டஸ்டன் பொட்லிங் நிர்வாகத்திடம் இருந்து நமுனகல நிர்வாகத்தினர் மீண்டும் பொறுபேற்றுக் கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டிருந்தது. எனினும் உண்மையிலேயே திரும்பக் கையளிக்க வேண்டுமாயின், குத்தகை காலத்தில் எஞ்சியிருக்கும் 47½ வருடங்களுக்கான குத்தகைப் பணத்தினைத் திருப்பித் தரவேண்டும் என டஸ்கன் பொட்லிங் நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் அந்தளவு பெருந்தொகைப் பணத்தினை உடனடியாகத் திரும்பக் கையளிப்பதற்கு நமுனகல பெருந்தோட்டத்தினர் இணக்கம் தெரிவிக்கவில்லை. இவ்வாறு இழுபறிப்பட்ட நிலையில், பிரச்சினை பூதாகரமாகி வெடித்துக் கிளம்புமேயானால் தரகுப் பணமாகப் பெற்றுக் கொண்ட 50 மில்லியன் மலையக அரசியல் அரங்கில் பேசும் பொருளாகி பலத்த விமர்சனங்களைச் சந்திக்கும் என்பதனாலும், ஏற்கனவே தோட்ட நிர்வாகத்தினை நமுனகல பிளான்டேஷன் நிர்வாகம் பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கை பல மட்டத்திலும் அதிகரித்தமையினாலும், இப்பிரச்சினையை பூசி மெழுகுவதற்கு தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதே தேவை சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினருக்கும் இருந்தது. இந்நிலையிலேயே குறித்த தோட்டங்களில் தொழிலாளர்களுக்கான சம்பளத்தினை நமுனகல தோட்ட நிர்வாகத்தினரே பொறுப்பேற்றுக் கொள்வதென்றும், அதற்காக, குறிப்பிட்ட தொகை தேயிலையை டஸ்டன் பொட்லிங் நிர்வாகத்தினர் நமுனகல நிர்வாகத்தினருக்கு வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த அடிப்படையிலேயே சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகங்களை நமுனகல பிளான்டேஷன் மீளப் பெற்றுக்கொண்டு விட்டது என்று மக்களுக்கு கூறப்பட்டது என ஊவா மாகாண சபை உறுப்பினர் அரவிந்தகுமாரினால் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவங்கள் சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தது. அதன் பின்னர் தொழிலாளர்கள் சம்பளத்தை நமுனகல பிளான்டேஷன் நிர்வாகத்தினர் வழங்கி வருகின்ற போதிலும், தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து வெட்டி எடுக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற எவையும் வங்கியில் இடப்படுவதில்லை. அத்தோடு தொழிற்சங்கங்களின் சந்தா என்ற பெயரில் வெட்டி எடுக்கப்படுகின்ற பணமும் உரிய தொழிற்சங்கங்களுக்கு சென்றடையவில்லை. மலையக மக்கள் முன்னணியினருக்காகக் குறித்த தோட்டத் தொழிலாளர்களிடம் வெட்டி எடுக்கப்பட்ட சுமார் 6 இலட்சம் ரூபாய் இன்னும் தமது கட்சிக்குக் கிடைக்கவில்லை என்கிறார் மாகாணசபை உறுப்பினர் அரவிந்தகுமார்.

அதேசமயம் டஸ்கன் பொட்லிங் நிர்வாகத்தினரிடம் பெற்றுக் கொண்ட குத்தகைப் பணத்தை மீளக் கையளிக்காமல் தோட்ட நிர்வாகத்தைப் பொறுப்பேற்க விரும்பியும் நமுனகல தோட்ட நிர்வாகமானது, தொடர்ந்தும் குறித்த தோட்டத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதை விரும்புவதாகவும் டஸ்கன் பொட்லிங் நிர்வாகத்தின் மீது அரசு அதிருப்தியடைந்து நிர்வாகத்தை பொறுப்பேற்கும்படி தங்களுக்கு உத்தரவிட்டால் பெற்றுக்கொண்ட குத்தகைப் பணத்தை மீள வழங்காமலே நிர்வாகத்தைப் பொறுப்பேற்க முடியும் என நமுனகல எதிர்பார்ப்பதாகவும் இதனாலேயே சில பிரச்சினைகள் கண்டுகொள்ளாமல் விடப்பட்டுள்ளதாகவும் நோக்கர்களினால் கூறப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க முன் அனுபவமே இல்லாதவர்களுக்கெல்லாம் தோட்டங்களை உப குத்தகைக்குப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தமது செல்வாக்குகளையும், அதிகாரங்களையும் பயன்படுத்துகின்ற தொழிற்சங்கங்கள், மலையக சமூகத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள் போன்றவர்களை ஊக்குவித்து சிறிய தேயிலைத் தோட்டங்களாகப் பிரித்து அவர்களிடம் உப குத்தகைக்கு வழங்க முயற்சிப்பார்களேயானால் கூலிகளாக வாழ்ந்தவர்களின் சந்ததியினரே தோட்டங்களின் அதிபதிகளாக எதிர்காலத்தில் வளர்ச்சியடைவதற்கு வழியேற்படும். இவர்கள் தற்போது நுவரெலியா போன்ற மாவட்டங்களில் மரக்கறித் தோட்டம் போன்ற விவசாய நிலங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஓரளவு நியாயமான சம்பளத்தை வழங்கி வருவது போன்று தமது மக்களின் பிரச்சினைகளை உணர்வுபூர்வமாக விளங்கிக் கொள்கின்ற முதலாளிமார் தமது தோட்டத் தொழிலாளர்களுடன் தற்போதைய நிர்வாகத்தினை விட நியாயமான முறையில் நடந்து கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. பெருந்தோட்டங்களில் கிடைக்கின்ற வருமானமானது, வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து ஊதாரித்தனமான வாழ்வுக்குப் பயன்படாது மலையகத்திலேயே அதன் வளர்ச்சிக்கு வலுச்சேர்க்கும் என்பதிலும் சந்தேகமில்லை. எனவே உரியவர்கள் பரந்த நோக்கில் சிந்திப்பார்களேயானால் மலையகத்தின் மாற்றத்திற்குப் புத்துயிர் ஊட்டிய பெருமையைப் பெறுவார்கள்.

**ராஜூ**



மெய்த்தவர் பலருண் டாம் : வெறும்
வேடங்கள் பூண்டவர் பலருமுண் டாம்,
உய்த்திடு சிவஞா னம் – கனிந்
தோர்ந்திடும் மேலவர் பலருண் டாம்.

- சுப்பிரமணிய பாரதியார்



# அப்பாவின் ஆசி

ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி இருந்தார். அவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். ஒருவன் மிகவும் புத்திசாலி. அதே சமயம் மிகுந்த தந்திரசாலியும் கூட. ஆனால் இரண்டாவது மகன் பரம சாது. வெளுத்தது எல்லாம் பால் என்று நினைப்பவன். விவசாயிக்கு வயதானதால் தன் மூத்த மகனுக்கு நல்ல இடம் பார்த்துத் திருமணம் செய்து வைத்தார். படிப்பறிவும், புத்திசாலித்தனமும் இல்லாததால் இளையவனுக்கு யாரும் பெண் கொடுக்க முன் வரவில்லை. பெரியவன் நிலத்தை எல்லாம் உழுது நன்கு பயிர் செய்து பணத்தை எல்லாம் அப்பாவுக்குத் தெரியாமல் தன் மாமனாரிடம் கொடுத்துப் பத்திரப்படுத்தி வைத்தான். இது தெரிந்த விவசாயி பெரிதும் வருந்தினார். தன் காலத்திற்குப் பிறகு தன் இளைய மகனின் நிலையை எண்ணி வருந்தினார். இதனால் அவரது உடல்நிலை மோசமடைந்து படுத்த படுக்கையானார்.

இந்த நிலையில் மூத்தவன், அப்பாவைப் பார்க்க தன் மனைவியுடன் வந்தான். "அப்பா... உங்களுக்கு வயதாகிவிட்டது. உடல் நிலையும் சரியில்லை. எனவே உடனே சொத்தைப் பிரித்துக் கொடுங்கள்" என்று வற்புறுத்தினான். பெரியவரும் அவனது பேச்சைத் தட்ட முடியாமல் சொத்தைப் பிரிக்கச் சம்மதித்தார். ஆனால் சொத்தைப் பிரிப்பதற்குள் அவரது உயிர் பிரிந்து விட்டது. அப்பாவின் பிரிவு இளையவனை மிகவும் பாதித்தது. ஆனால் மூத்தவன் கவலை ஏது மின்றி இருந்தான்.

ஒருநாள் அண்ணன் தம்பியை அழைத்தான். "தம்பி, அப்பாவுக்குத் தான்



உன் மேல் எவ்வளவு பாசம்? நமக்கு மொத்தம் பத்துக் காணி நிலம். அதில் உனக்கு ஏழு காணியைக் கொடுக்கச் சொல்லி உயிர் விட்டார். எனக்கு மீதம் மூன்று காணி நிலம்தான். நான் குடும்பஸ்தன், இருந்தாலும் அப்பாவின் ஆசையை பூர்த்தி செய்கிறேன். நீ அந்த ஏழு காணி நிலத்தை எடுத்து பிழைத்துப் போ" என்று நயவஞ்சகமாக பேசி அவனிடம் தரிசு நிலம் ஏழு காணியைக் கொடுத்து ஊர் பஞ்சாயத்தில் நல்ல பெயரும் வாங்கி விட்டான். மீதி மூன்று காணி நல்ல விளைச்சல் நிலம். அது இளையவனுக்குத் தெரியாததால் தம்பியும் அண்ணன் மிகவும் நல்லவன் என்று நினைத்து வாங்கிக் கொண்டான்.

சில நாட்கள் கழிந்தன. அண்ணன் தம்பியை அழைத்தான். "தம்பி, இந்த வீட்டைப் பற்றி அப்பா ஏதும் சொல்லவில்லை. உனக்கு ஏழு காணி நிலம். எனக்கு வெறும் மூன்று காணிகள்தான். நானோ குடும்பஸ்தன். அதனால் எனக்கு இந்த வீட்டைக் கொடுத்து உதவுகிறாயா?" என்று அழகாகப் பேசி அவனது சம்மதத்தை வாங்கினான். பின் ஒரு நாளில் வீடு தன்னுடையது என்று கூறி, தம்பியை வீட்டை விட்டே வெளியேற்றினான்.

அதுவரை விவசாயம், வயல் என்று அறியாமல் எல்லாம் அப்பா, அண்ணன் என்று இருந்த தம்பி மிகுந்த மன வருத்தம் கொண்டு தன் ஏழு காணி நிலத்தை உழுதான். தரிசு நிலத்தை உழுவதைக் கண்டு அவன் அண்ணனும், மற்றவர்களும் கேலி பேசினர். அப்பொழுது மண்ணில் ஏதோ தட்டுப்பட்டது. உடன் வேகமாகத் தோண்டினான். அங்கே ஒரு பெரும் பானை இருந்தது. அதை எடுத்தவனுக்கு பெரும் ஆச்சரியம்! ஆம், அந்தப் பானை முழுவதும் தங்கக் காசுகள். அது அவனுக்குப் பல தலைமுறைக்குப் போதுமானதாக இருந்தது. மிகுந்த ஆனந்தம் அடைந்தான். அதில் ஒரு ஓலை இருந்தது. படித்துப்

பாப்பா முரசு சிறுகதை

பார்த்தான். அப்பா எழுதிய ஓலை.


"இளையவனே, நீ மிகவும் உத்தமன். வெகுளி. உன் அண்ணன் கெட்டிக்காரன். அவன் மனைவி அவனை விடத் தந்திரசாலி. உனக்கு இந்த நிலத்தைக் கொடுத்து ஏமாற்றுவான். அதற்குத்தான் உனக்கு நான் இத்தனை நாள் பாடுபட்டு சேர்த்த பொருளை எல்லாம் பானையில் புதையலாக வைத்துள்ளேன். நீ இதை வைத்து நல்ல விளைச்சல் நிலம் வாங்கி, உழைத்து உன் அண்ணனைப் போல் முன்னேறு. புதையலை யாரிடமும் கொடுத்து ஏமாந்து விடாதே, ஜாக்கிரதை!

- உன் அப்பா.

அப்பாவின் தீர்க்க தரிசனத்தை நினைத்து அழுதான் இளையவன். பொற்காசுகளைக் கொண்டு ஒரு வீட்டை வாங்கினான். ஆட்களை வேலையில் அமர்த்தியும், தானும் பாடுபட்டு தரிசு நிலத்தை விளைநிலமாக மாற்றினான். வசதிகள் சேர்ந்ததும் தனக்கு என்று ஒரு பெண்ணைப் பார்த்து மணந்து கொண்டான். தம்பி நன்கு வாழ்வது கண்டு, அண்ணனுக்குப் பொறாமை மற்றும் ஆச்சரியம். இந்த நேரத்தில், மழை பொய்த்ததால் எங்கும் ஒரே பஞ்சம். விவசாயம் இல்லாமல், அண்ணன் குடும்பம் மிகவும் பாதிக்கப்பட்டது. சாப்பிடக் கூட வழி இல்லாமல் கஷ்டப்பட்டனர். வேறு வழி இல்லாமல் தன் தம்பியிடம் உதவி கேட்டான் அண்ணன்.

மனதிற்குள் சிரித்துக் கொண்டே தம்பி எதையும் காட்டிக் கொள்ளாமல் அண்ணனை வரவேற்று உபசரித்து, தேவைக்கேற்ப பணமும் கொடுத்து உதவினான். "தம்பி, ஊரில் எல்லோரும் பஞ்சத்தால் கஷ்டப்படும் போது நீ மட்டும் எப்படி மகிழ்ச்சியோடு இருக்கிறாய்" என்று அண்ணன் பொறாமை மேலோங்கக் கேட்டான். அதற்கு அவன், "அண்ணா, எல்லாம் நம் அப்பாவின் ஆசி தான்!" என்றதும், அங்கு இருக்க வெட்கப்பட்டுக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான் அண்ணன்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 17.03.2009

**வர்ணம் தீட்டும் போட்டி இல.787**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 785

**பரிசுக்குரியவர்:** செல்வன் கோகுலராஜன் அஜாஜீகன், தரம் 4H, இந்துக் கல்லூரி வாழைச்சேனை.

**பாராட்டுக்குரியவர்கள்**

1. மு.ஐ.அ.பாசித், ஹாஜியார் லேன், காத்தான்குடி. 04.
2. செல்வன் வை.விவூ, புதுக்குடியேற்றம், நொச்சிமுனை, மட்டக்களப்பு.
3. எம்.கே.எம் றிஸ்வான், அந்தோனியார் வீதி, திருகோணமலை.
4. உ. யமுனா, வேலணை மேற்கு, வேலணை.
5. பாத்திமா றியானா சாலிஹ், அஷ்ரப் வீதி, ஏறாவூர் -02.
6. க. நெத்மினி, ஸ்டேஸ் வீதி, கொழும்பு-14.
7. பி.சிவாஜினி, கோவில் வீதி, வவுனியா.
8. T. பாத்திமா சஹீமித், பெண் சந்தை வீதி, ஏறாவூர்-02.

# ஆத்திசூடி

## உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்

உழுது உற்பத்தி செய்த உணவை உண்டு வாழ்வாரே, தம்மை மட்டும் நம்பி வாழ்பவர்கள்.

-திருவள்ளுவர்

# பாப்பா பாட்டு

## கடலைப் பார்!

அழகைப் பார் அழகைப் பார்!
அலை தவழும் கடலைப் பார்!
படகைப் பார் படகைப் பார்!
பவனி வரும் அழகைப் பார்!
கண்ணுக்கு எட்டிய தூரம் வரை
கருநீல வண்ணக் காட்சி பார்!

எண்ணிலா மீன்கள் துள்ளியாடும்
இன்பம் தரும் மாட்சி பார்!
தொலைவில் வரும் கப்பல் பார்!
கவரும் அதன் தோற்றம் பார்!
ஊரே நகர்வதைப் போல
உலகைச் சுற்றும் அழகைப் பார்!

# தெரிந்து கொள்ளுங்கள்

## "ஜெட்" காற்றோடைகள்


**பூமியின்** பரப்புக்கு மேலே சுமார் 12 கி.மீ. உயரத்தில் "ஜெட்" காற்றோடைகள் காணப்படுகின்றன. இந்தப் பகுதியில் காற்று மணிக்கு 90 கிலோமீற்றர் வேகத்தில் வீசும், இவை பூமியின் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அலை அலையாக வீசுகின்றன. மேலும் பூமத்திய ரேகைப் பகுதியிலும், வட மற்றும் தென் கோளங்களிலும் இரண்டு பிரிவுகளாக வீசுகின்றன.



கிழக்கு நாடுகளுக்குப் போகும் விமானங்கள் "ஜெட்" காற்றோடைகளை உபயோகித்துப் பறப்பதால் நேரமும், எரிபொருளும் மிச்சமாகிறது. மேற்கு நாடுகளுக்குச் செல்லும் விமானங்கள் "ஜெட்" காற்றோடைகளை எதிர்த்துப் பறப்பதால் இலக்கை அடைய அதிக நேரத்தை எடுத்துக் கொள்கின்றன; எரிபொருளும் அதிகமாகச் செலவாகிறது. இரண்டாம் உலகப் போரில், முதன் முதலில் ஜப்பான் நாடுதான் "ஜெட்" காற்றோடைகளை உபயோகித்து விமானங்களை வேகமாக இயக்கி எதிரி நாடுகளை மிரள வைத்தது.

## "கேக்" பிறந்த கதை

**பிறந்தநாள்** விருந்து என்றாலே கொண்டாட்டத்துக்குக் குறைவிருக்காது. ஆனால் பிறந்தநாளின் போது "கேக்" வெட்டாமல் இருந்தால் அந்த அளவு குதூகலம் இருக்குமா?



எந்த ஒரு விருந்து உபசாரமும் "கேக்" இல்லாமல் முழுமை பெறாது, அந்தக் காலத்திலிருந்தே இந்த வழக்கம் தொடர்ந்து வருகிறது.

வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி, கேக் தயாரிக்கும் முயற்சியில் முதலில் ஈடுபட்டவர்கள் எகிப்தியர்கள். அவர்களைத் தொடர்ந்து அதில் ஈடுபட்டவர்கள் கிரேக்கர்கள். அவர்கள் "நிலவுக் கடவுளான" ஆர்ட்டிமிஸ்"க்கு நிலவைப் போல வட்ட வடிவ ரொட்டிகளையும், தேன் சேர்த்துத் தயாரித்த கேக்குகளையும் படைத்தனர். தாங்கள் தயாரித்த கேக் நிலவைப் போல ஒளிர வேண்டும் என்பதற்காக அதன் மீது மெழுகுவர்த்திகளையும் ஏற்றி வைத்தனர். மெழுகுவர்த்தி எரியும்போது எழும் புகை தங்களின் பிரார்த்தனைகளைச் சொர்க்கத்தில் உள்ள கடவுள்களிடம் எடுத்துச் செல்லும் என்று கிரேக்கர்கள் நம்பினர்.

கிரேக்கர்களைப் போலச் சீனர்களும் அறுவடைக் காலத்தின் போது நிலவுப் பெண் தெய்வமான ஹெங்க் ஓவுக்கு வட்டவடிவ கேக்குகளை படைத்து வழிபட்டனர். ரஷ்யர்கள் வசந்தகாலச் சூரியனைப் போற்றும்விதமாக வட்டவடிவ கேக்குகளை படைத்தனர். அக்காலத்தில் ரொட்டி, தேன், உலர்பழங்களின் கலவையாக இருந்த கேக்குள் வித்தியாசமான சுவை கொண்டிருந்தன. கேக்கில் இன்றுள்ளது போல விதவிதமான வடிவங்கள், வகைகள் அக்காலத்தில் இல்லை. எளிதாகத் தயாரிக்க முடிகிற வட்ட வடிவத்திலேயே அவை உருவாக்கப்பட்டன.

# விடுகதை

1.சின்னஞ் சிறிய கதவுகள்; எத்தனை தடவைகள் திறந்து மூடினாலும் ஓசை தராத கதவுகள்; இவை என்ன?

2. சிவப்பு உறை ஒன்றினுள் சில்லரை கொட்டிக் கிடக்கின்றன. இது என்ன?

3. சித்திரப் பின்னல் கோட்டைக்குள் நுழைந்து விடலாம், ஆனால் வெளியே வர முடியாது. இது என்ன?

4.சிவப்பு ரோஜாக்கள் மலர்ந்தால் வெள்ளை முத்துக்கள் பளிச்சிடும். இது என்ன?

5.சின்னத்துரைக்கு இரண்டு தொப்பிகள், அது என்ன?

6.சிறகில்லாத பறவை, இது தேசம் முழுவதும் சுற்றும். இது என்ன?

7.சிங்கார மண்டபத்தில் சிறப்பான சங்கீதக் கச்சேரி அங்கே போனால் அடியும் உதையும் தப்பாது. அது என்ன?

8. சிரிக்காமல் கிடப்பான் காட்டுக்குள் சிரித்தபின் தான் வருவான் வீட்டுக்குள்; இது என்ன?

9. சிவப்புச் சட்டிக்குக் கறுப்பு மூடி; இது என்ன?

10.சிற்றா நல்லூர் ஏரியிலே- சில குமரிப்பெண்கள் குளிக்கிறார்கள். பார்த்த கண் பூத்துப் போச்சு இது என்ன?

விடுகதை விடைகள்
1. கண் இமைகள்
2. மிளகாய்ப்பழம்
3. எலிப்பொறி
4. உதடுகள்; பற்கள்
5. பட்டாணிக்கடலை
6. தபால்கார்டு
7. தேன்கூடு
8. பருத்திக்கொட்டை
9. குன்றிமணி
10. மீன்கள்




# 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

## மாதிரி வினாத்தாள் -I (நேரம்:- 45 நிமிடம்)

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**01-03 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடை தருக?**

01. வண்ணம் பல கொண்டது கண்
களைத் தான் பறிக்குது வாச
னையை வீசியே வண்டினைத்தான்
அழைக்குது.

இந்தப் பாடல் பூக்கள் பற்றியது என்றால் வாசம் என்ற சொல்லின் கீழே கோடு இடுங்கள். அவ்வாறன்றி இங்கு கூறப்பட்டது உணவு பற்றியது என்றால் கண்களை என்ற சொல்லைச் சுற்றி வட்டம் இடுங்கள்.

02. சூரியனின் வருகையினால்
மலர்களெல்லாம் மலர்ந்தனவே
பாலர் நாமும் கண்விழிப்போம்
கால்முகம் கை கழுவிடுவோம்.

இந்தப் பாடலில் கூறப்பட்டது காலைப் பொழுது என்றால் பாடலின் இரண்டாவது அடியின் கீழே கோடு இடுங்கள். அவ்வாறு இன்றி நண்பகலுடன் தொடர்பானது என்றால் நான்காவது அடியின் கீழே கோடு இடுங்கள்.

03. கறுப்பு நிறக்குட்டிதான் கால
டியில் வந்ததுவே பாலை நக்கிக்
குடித்ததுமே பாய்ந்து பாய்ந்து
ஓடுதே.

இந்தப் பாடலில் கூறப்பட்டது ஒரு பிள்ளை பற்றியது என்றால் கறுப்பு என்ற சொல்லின் கீழே கோடு இடுங்கள். அவ்வாறு இன்றி பூனையுடன் தொடர்புடையது என்றால் பாய்ந்து பாய்ந்து என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுங்கள்.

**04 - 06 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள இடைவெளிகளுக்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிந்து, அதன் கீழ்க் கோடிடுக.**

எனது வகுப்பு நண்பன் ஒருவன் வாகன விபத்தில் சிக்கி (1) அனுமதிக்கப்பட்டுள்ளான். நான் எனது அம்மாவுடன் ஞாயிற்றுக்கிழமை அவனைப் பார்க்கச் சென்றேன். நாங்கள் அவனுக்கு (2) சுவையான பலகாரங்களும் கொண்டு சென்றோம். அவனைக் கண்டதும் எனக்குக் கண்ணீர் பெருகியது. அவனது கண்களிலும் கண்ணீர் வந்ததை நான் கண்டேன். அவனது கைகளிலும் தலையிலும் (3) கட்டப்பட்டிருந்தன. அவன் அருகில் நீண்ட நேரம் அமர்ந்து இருந்து மிகுந்த துக்கத்துடன் திரும்பினோம்.

04. முதலாவது கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்
1. விடுதியில் 2. வைத்தியசாலையில் 3. மருந்தகத்தில்

05. இரண்டாவது கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்
1. பந்துடன் 2. கிரிக்கெட் மட்டையுடன் 3. பழங்களுடன்

06. மூன்றாவது கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்
1. கட்டுக்கள் 2. மருந்து 3. நூல்

**07 - 08 வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

07. பாடசாலை வேலைகளைப் பொறுப்புடனும் கவனத்துடனும் செய்கின்ற சந்திரன் பிறர் துன்பமடையும் போது தன்னால் இயன்றவரை உதவிகளையும் செய்வான். நண்பனுக்குப் பென்சில் இல்லாத போது தன்னிடமுள்ள மேலதிக பென்சிலைக் கொடுப்பான். எவருக்கேனும் புத்தகம், அழிப்பான், அடிமட்டம் இல்லை எனில், தன்னுடையவற்றை அவர்கள் பயன்படுத்தக் கொடுப்பான். இங்கு கூறப்பட்ட விளக்கத்தின்படி
1. சந்திரன் இரக்கம் மிக்க மாணவன்
2. சந்திரன் வீரம் மிக்க மாணவன்
3. சந்திரன் பொறுப்பு மிக்க மாணவன்


08. எங்கள் அதிபர் எல்லோரும் விரும்பும் குணம் உடையவர். அவர் எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படுவார். ஒரு நாள் பாடசாலைக்கு வந்த ஒருவன் ஏதோ காரணம் பற்றி அதிபரைக் கடுஞ் சொற்களால் ஏசினான். எனினும், எங்கள் அதிபர் எதுவுமே பேசாது அவன் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார். இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுவது.
1. அதிபரின் பலவீனம்
2. அதிபரிடம் காணப்படும் பிறர் விரும்பும் தன்மை
3. அதிபரின் பொறுமைக்குணம்

**09 - 11 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

09. இந்த நான்கு படங்களிலும் உள்ள பயிர்களிலிருந்து பெறக்கூடிய பொருட்களுள் பயிருக்குப் பொருத்தமற்ற பொருள் காணப்படும் படம் எது?




10. இங்குள்ள மிருகங்களில் ஏனைய மூன்று மிருகங்களில் இருந்தும் வேறுபடும் மிருகம் எது?





11. இங்குள்ள படங்களில் மிருகத்துக்குப் பொருத்தமற்ற பாதம் காணப்படும் படம் எது?





**12 - 15 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு படங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று ஏனைய மூன்று படங்களுடன் பொருத்தமற்றதாகக் காணப்படுகிறது. அதனைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**


12.




13.



14.




15.



**இல. 16 - 18 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடிடுக.**

16. ஒரு பிள்ளை பட்டம் ஒன்றைச் செய்து வானத்தில் பறக்கவிடும்போது நூல் அறுந்து பட்டம் காற்றினால் இழுத்துச் செல்லப்படும் முறையினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?




1. 3,4,2,1,5 2. 4,2,1,5,3 3. 2,5,1,3,4

17. மாணவன் ஒருவன் காலையில் எழுந்து கால்முகம் கழுவி ஆயத்தமாகிப் பாடசாலை சென்று வகுப்பறையில் படிக்கும் விதத்தினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?




1. 2,5,3,4,1 2. 2,4,1,3,5 3. 4,3,5,1,2

18. கிரிக்கெட் விளையாட்டு ஆரம்பிக்கும் போது பந்தை எறிந்து, வீரர் ஒருவர் பந்தைப் பிடிக்கும் விதத்தை எடுத்துக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?




1. 4,2,3,5,1 2. 2,1,3,5,4 3. 3,1,5,2,4

**19 - 21 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடிடுக.**

19. ஸ்ரீகுமரனினதும் சாந்தனதும் வயதுகளின் கூட்டுத் தொகை 45 வருடங்களாகும். ஸ்ரீகுமரனின் வயது சாந்தனின் வயதிலும் 4 மடங்காயின் சாந்தனின் வயது எத்தனை வருடங்களாகும்
1. 10 வருடங்கள் 2. 9 வருடங்கள் 3. 8 வருடங்கள்

20. ரமணன் தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கிச் சிறிது தூரம் சென்ற பின் வலது கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்றான். பின்பு வலது கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்று மீண்டும் வலது கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்ற பின் இறுதியில் இடது பக்கம் திரும்பினான். இப்போது ரமணன் எந்தத் திசையை நோக்கி நிற்கின்றான்?
1. வடக்குத் திசை 2. மேற்குத் திசை 3. தெற்குத் திசை

21. பிரசன்னா படம் ஒன்றினைப் பார்த்து பின்வருமாறு கூறினான். "இந்தப் படத்தில் இருப்பவரின் தந்தை எனது அம்மாவின் தந்தை ஆகும். அப்படியானால் படத்தில் காணப்படுபவருக்கும் பிரசன்னாவுக்கும் இடையில் உள்ள உறவு முறை யாது?
1. மாமா 2. சிறிய தந்தை 3. பாட்டன்

**தொடர்ச்சி அடுத்த வாரம்**

### வினாத்தாள் I இற்கான விடைகள்

1. வாசம
2. மலர்களெல்லாம் மலர்ந்தனவே
3. பாய்ந்து பாய்ந்து
4. வைத்தியசாலையில்
5. பழங்களுடன்
6. கட்டுகள்
7. சந்திரன் இரக்கம் மிக்க மாணவன்
8. அதிபரின் பொறுமைக்குணம்
9. 4 ஆவது படம் ( நெல் - தேன்)
10. 3 ஆவது படம் ( யானை )
11. 4 ஆவது படம் ( கரடி )
12. 3 ஆவது படம் (நீரில் வாழ்வது, ஏனையவை நிலத்தில் வாழ்வன)
13. 3 ஆவது படம் ( கடலில் செல்வது, ஏனையவை யாவும் வீதியில் செல்வது)
14. 3 ஆவது படம் ( நீண்ட காற்சட்டை, ஏனையவை யாவும் மேலங்கிகள்)
15. 4 ஆவது படம் ( கால்களால் விளையாடுவது, ஏனையவை யாவும் கைகளால் விளையாடுவது)
16. 3 (2, 5, 1, 3, 4)
17. 1 (2, 5, 3, 4, 1)
18. 2 (2, 1, 3, 5, 4)
19. 2 ( 9 வருடங்கள்)
20. 3 ( தெற்குத் திசை)
21. 1 ( மாமா )



சூர்யா - தமன்னா
அயன்

## மினிசினி

❖ **செல்வராகவனின்** ஆயிரத்தில் ஒருவன் பார்த்திபனுக்கு திருப்பு முனையாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு பல மட்டங்களிலும் ஏற்பட்டுள்ளது.

❖ **இயக்குநர்** பேரரசுதான் இயக்கப் போகும் திருத்தணி படத்தின் மூலம் இசையமைப்பாளர் அவதாரம் எடுக்கின்றனர்.

❖ **டாய்** ச்சி என்ற சீனர்களின் தற்காப்புக்கலை கற்க ஆரம்பித்துள்ளார் நடிகர் ஆர்யா.

❖ **பாராளுமன்ற** தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

❖ **விஜயகுமார்** – மஞ்சுளா தம்பதிகளின் இறுதி வாரிசான ஸ்ரீதேவிக்கும் திருமணம் நடாத்த இவரது பெற்றோரினால் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

❖ **வாமனன்** படத்திற்காக 10 கிலோ எடையை குறைத்துள்ளார் ஜெய்.



சீவா - மதுமிதா

## ஸ்ரேயாவின் பின்னால் அலையப்போகுது தமிழ்நாடு

**கமல்** துவங்கிய லிப் கிஸ் பழக்கத்தை இன்னும் அவரே விடவில்லை. அதற்குள் சிலம்பாட்டம் படத்தில் சிம்பு, ஆறுமுகம் படத்தில் பரத். அப்படியே இந்த பக்கம் வந்தால், கந்தசாமியிலும் கலகலப்பு. வெளிநாட்டில் படித்துவிட்டு கிராமத்திற்கு வரும் ஸ்ரேயாவுக்கும், விக்ரமுக்கும். காதல் மலர்கிறது, ஒரு கட்டத்தில் இழுத்துப் பிடித்து ஒரு "பச்சக்" தருகிறாராம் விக்ரம். இந்த முத்தம் தமிழ்சினிமாவில் ரொம்ப காலத்துக்கு பேசப்படும் என்றார் ஸ்ரேயா. இது போதாதுன்னு குளியல் தொட்டியிலே ஸ்ரேயாவும், விக்ரமும் செய்கிற பப்பி ஷேம் பஞ்சாயத்தும் இருக்கிறதாம் படத்தில். "மொத்தத்தில் இந்த படத்தில் நான் பேரழகியா வர்றேன். பித்து பிடிச்சு அலையப் போவுது தமிழ்நாடு" என்று சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்கிறார் ஸ்ரேயா.

## கோக் அம்பாசிடர் விஜய்

கொகோ கோலா குளிர்பானத்தின் பிராண்ட் அம்பாசிடராக நடிகர் விஜயை ஒப்பந்தம் செய்துள்ளது கோக் நிறுவனம். குளிர்பான நிறுவனங்கள் தங்களது பிராண்ட் அம்பாசிடராக பிரபல நடிகர்களையும் கிரிக்கெட் வீரர்களையும் நியமிப்பது வழக்கம். தமிழ்நாட்டில் கோக் குளிர்பானத்தின் அம்பாசிடராக நடிகர் விஜய் 2000 - 2003 வரை நியமிக்கப்பட்டிருந்தார். அந்த ஒப்பந்தத்தை இந்த வருடம் மீண்டும் புதுப்பித்திருக்கிறது கோக் நிறுவனம்.

## சி னி வி சி ட்

### ஆடுவது சுகமானது

**சிம்புவும்,** த்ரிஷாவும் "விண்ணைதாண்டி வருவாயா" படத்தில் ஒன்றாக சேர்ந்து மறுபடியும் ஒரு அலையை கிளப்பப் போகிறார்கள். இது சாதாரண எறும்புக்கு கூட தெரிஞ்ச விடயம்! தெரியாத ஒரு விடயம், இந்த படத்தில் சிம்புவோட, தங்கையின் தோழியாக வர்றாரு த்ரிஷா. கௌதம் மேனனின் ஸ்டைல்படி இந்த கூட்டணியும் வெளிநாட்டுக்கு பறக்கப் போகிறார்களாம். முக்கால்வாசி படத்தை அங்கேயே முடித்துவிட்டு மிச்ச மீதிக்குதான் சென்னைக்கு வருவார்களாம். "ரஹ்மான் மியூசிக்லே வரப்போகும் பாடலுக்காகதான் காத்திருக்கேன். அந்த மியூசிக்கில் ஆடுவது எப்போதும் சுகம். ஆஸ்கருக்கு பிறகு இன்னும் இன்னும் சுகம்" என்கிறார் த்ரிஷ்.

### நடிகர் சங்கத்தில் புகார்

**பேராண்மை** படப்பிடிப்பு முணாறு காட்டுப்பகுதியில் நடந்து வருகிறது. படத்தின் நாயகிகளில் ஒருவரான அதிசயாவை கொசுக்கள் ரவுண்டு கட்டி கிஸ் அடிக்க, உடம்பெல்லாம் எரிச்சல் அதிசயாவுக்கு. படப்பிடிப்பு நடக்கிற ஏரியாவில் தங்கினால்தானே பிரச்சனை? சில கிலோ மீட்டர்கள் தள்ளியிருக்கும் ஹோட்டலுக்கு போய்விடலாம் என்று முடிவெடுத்தாராம். ஆனால் இதற்கு இயக்குனர் ஜனநாதன் சம்மதிக்கவில்லை. படத்தின் ஹீரோவான ஜெயம் ரவி மற்றும் சில நடிகைகள் அந்த ஹோட்டலில் தங்கியிருக்கும்போது, தனக்கு மட்டும் தடை போடுவது ஏன் என்ற கோபம் அதிசயாவுக்கு.

இயக்குனரை மதிக்காமல் மறுநாளும் ஹோட்டலுக்கு போய் விட்டாராம். இதனால் ஆத்திரத்திற்குள்ளான ஜனநாதன் கையை ஓங்கியதாக கூறுகிறார் அதிசயா. சொல்லாமல் கொள்ளாமல் சென்னைக்கு திரும்பிவிட்டார் நடிகை. இங்கே வந்து நடிகர் சங்கத்தில் புகாரும் கொடுத்துவிட்டார்.



கோபிசந்த் - பாவனா
சுப்ரமணியம்

## அங்கம் -04
## ஒரு நடிகையின் கதை

**பட்டத்தின்** ஆரஞ்சுச் சுளை மாதிரியான ஈரம் கசிந்த கீழ் உதட்டை தன் பற்களால் கடித்து இழுத்தார் விரல்! பட்டம் அதிர்ச்சியில் உறைந்து போக... கேமிரா கிளிக்கிக் கொண்டது. சினிமாவில் நடிகைகள் முத்தக் காட்சியில் நடிப்பது சகஜம்தான் என்றாலும் முன்கூட்டியே அந்த சம்பந்தப்பட்ட நடிகையிடம் தெரிவித்துவிடுவார்கள்! சில சமயம் அக்ரிமெண்ட் போடும்போதே இப்படிப்பட்ட காட்சிகள் இருந்தால் சொல்லிவிடுவார்கள்! ஆனால் இப்படி எதுவுமே சொல்லாமல் திடுதிப்பென தன் உதடு பல பேர் முன்னிலையில் கவ்வப்படுவதை அவமானகரமாக கருதினார் பட்டம்! கோபமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு கிளம்பிப் போய் விட்டார் பட்டம்! பின்னாலேயே கிளம்பிப் போனார் விரல் விரல் பலமுறை செல்லில் தொடர்பு கொண்டும் பட்டம் அட்டர்ன் பண்ணவில்லை! நேராக ஹோட்டலுக்கு கிளம்பிப் போனார் விரல்! 'கதைக்கு இந்த காட்சி ரொம்ப ரொம்ப முக்கியம்னலாம் பொய் சொல்ல வரலை! நான் எவ்ளோ பேர் கூட நடிச்சிருக்கேன்! ஆனா உன்னோட அருகாமை என்னை என்னவோ பண்ணிடிச்சு! நான் உன்னை ரொம்பவே லவ் பண்றேன்னு நினைக்கிறேன்! அதான் என்னை கண்ட்ரோல் பண்ண முடியல!.விரல் கண்ணீர் குரலில் விளக்கம் தர சட்டென அவரை அள்ளி அணைத்துக் கொண்டு சமாதானமானார் பட்டம்! புகைப் படங்கள் வெளிவந்ததும் பட்டத்திடம் மீடியாக்கள் இந்த 'உதடு கடி' சங்கதியைப் பற்றி விளக்கம் கேட்டனர்! மீடியாக்காரர்களின் கேள்விகளுக்கு நடிகை எவ்வாறான பதில்களைச் சொன்னார் என்பதை அடுத்த வாரம் பார்ப்போம். ***(தொடரும்...)***




ரஜினி
அரசன்

## நின்றாலும், நிமிர்ந்தாலும் கிக்!

**படம்** வந்தால் நிக்கோலையும் ரசிகர்கள் கொண்டாடுவார்கள் போலிருக்கிறது. சற்றே இளைத்துப் போன நமீதா போலவே இருக்கும் நிக், நின்றாலும் கிக், நிமிர்ந்தாலும் கிக்! அதே நேரத் தில் அழகான குரலையும் கொண்டவராம். கன்னட படம் ஒன்றில் பாடவும் செய்திருக்கிறார். இதற்கிடையில் "அடடா என்ன அழகு" படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போது இவருக்கும் படத்தின் நாயகன் ஆகாஷ் ஜெய்யுக்கும் ஒரு நிஜமான "ஆக்ஷன் சுச்சுவேஷன்" அமைந்துவிட்டது. "ஆகாஷ் மன்னிப்பு கேட்டால் தான் திரும்பவும் படப்பிடிப்புக்கே வருவேன்" என்று கோபித்துக் கொண்டு போய்விட்டார் நிக்கோல். "வரலைன்னா எனக்கென்ன நஷ்டம்" என்று ஆகா ஷும் முரண்டு பிடிக்க, ஒருவழியாக தயாரிப்பாளரும், இயக்குநரும் முன்னின்று பிரச்சனையை முடித்து வைத்தார்கள்



பாவனா



# திரை விமர்சனம் - ந.த-07-அல4777

**டாக்சியில்** பயணிக்கும் கோஸஸ் வரன் ஒருவனுக்கு அந்த டாக்சிக்காரன் கொடுக்கிற டார்ச்சர்தான் கதை! காலையில் துவங்கி இரவில் முடிவதாக கதை அமைந்தாலும், இரண்டே மணி நேரத்தில் "சுருக்" என்று படத்தை முடித்திருக்கிறார் இயக்குநர் லட்சுமிகாந்தன். தன்னை எல்ஐசி ஏஜென்ட் என்று மனைவி சிம்ரனிடம் பொய் சொல்லும் பசுபதி, பார்க்கும் தொழிலோ டாக்சி டிரைவர் வேலை. பசுபதிக்கு அஜ்மல் ருபத்தில் வருகிறது பிரச்சினை. பசுபதியின் உண்மையான தொழிலை மனைவியிடம் போட்டுக் கொடுத்த அஜ்மல் மீது கோபமாகிறார் பசுபதி. 500 கோடி ருபாய் சொத்துக்கு அதிபதியான அஜ்மல், பசுபதியினால் பிளாட்பாரத்திற்கு வருகிறாரா என்பது க்ளைமாக்ஸ். ஏழை பசுபதியின் ஆரம்ப அறிமுகம் கலகலப்பு.

தன்னிடம் பொய் சொன்ன தோடல்லாமல் போலீஸிலும் சிக்கிக் கொள்கிற புருஷனிடம், மனைவி கொள்கிற இயல்பான கோபத்தை அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார் சிம்ரன். எந்நேரமும் உர்ரென்று இருக்க வேண்டிய கட்டாயம் அஜ்மலுக்கு. காலையில் அணிந்து கொண்ட கோட்டைக் கூட கழற்ற மனசில்லாமல் சுற்றுகிறாராம்! அபத்தம். ஒரு சாதாரண துணை நடிகை செய்ய வேண்டிய வேடம் மீனாட்சிக்கு!

இசையில் புது துள்ளல் இருக்கிறது. வார்த்தைகள் புரியாத பாடலுக்கு நடுவில், "அந்த காலத்திலே பாட்டு எப்படி இருந்திச்சு. இப்பவும் பாடுறானுங்களே" என்று குரல் கொடுக்கும் கிழவி சூப்பர். "இப்படி கொல வெறி புடிச்சு அலையுறானுங்களே..." என்று அதே கிழவி கூக்குரல் இடுகையில் கைதட்டி ரசிக்கிறது தியேட்டர்! யதார்த்தத்தை அனுமதித்த விஜய் ஆன்டனி வாழ்க! அற்புதமான முழு பாடலாக வந்திருக்க வேண்டிய ஒரு பாடலை சுருக்கி "தீம் சாங்" ஆக்கிவிட்டது வருத்தம். சேசிங், மற்றும் ஆக்ஷன் காட்சிகளில் ஆர்.பி.குருதேவின் ஒளிப்பதிவு பிரமிக்க வைக்கிறது. எடிட்டிங்கில் சசிக்குமாரின் ஜிமிக்ஸ் வித்தை காட்டுகிறது. ஆத்திச்சூடி பாடலுக்கு டான்ஸ் மாஸ்டர் ஷோபியின் நடனம் கலக்கல்! சுகமான பயணமாக வரவேண்டிய படம். ஏசி இல்லாத கார் சவாரியாகி விட்டது!



ஜெய் - ப்ரியா வாமணன்

ஜூசப்பில்:~ ரஜினி

# இதய தானம்

**விஷ்ணுவர்தனின்** இயக்கத்தில் ஆர்யா-த்ரிஷா நடித்துள்ள படத்தில் ஒரு குழந்தையின் பெற்றோராக ஆர்யாவும், த்ரிஷாவும் நடித்துள்ளனர். அபியும் நானும் பிரகாஷ்ராஜுக்கு குழந்தையா நடிச்சுட்டு இதுல ஒரு குழந்தைக்கு அம்மாவா நடிக்கிறீங்களே... இமேஜ் பாதிக்காதா? என த்ரிஷாவிடம் லாஜிக் பேசினால் "அது அந்த படத்துல இது இந்த படத்துல" என காமெடி பண்ணுகிறார். விபத்தில் இறந்த ஜிஜேந்திரனின் இதயம் தானம் செய்யப்பட்ட சம்பவம் விஷ்ணுவர்த்தனை ரொம்பவே பாதிச்சது. இதனை பேஸ் பண்ணி க்ளைமாக்ஸ் சீனை உருவாக்கியுள்ளார். அதாவது கதைப்படி த்ரிஷா இறந்துபோயிடுவாங்க. அவங்க இறந்து போறது முன்னாடியே தெரிந்துவிடும் என்பதால் தனது இதயத்தை ஒரு குழந்தைக்கு தானமா தருவது போன்ற காட்சிதான் க்ளைமாக்ஸ். இதுபற்றி பட யூனிட்டை சேர்ந்த இன்னொருவர் சொன்ன போது, "ஆரம்பத்துல அந்த மாதிரி சீனை எடுத்தது உண்மைதான். ஆனா, அதனை மாற்றி எடுக்கும் எண்ணம் இயக்குநரிடம் இருக்கு" என்றார்



சரத்குமார் - பர்ஸானா 1977

# ரஜினியின் விருப்பம்

**கன்னட** சினிமா தொடங்கி 75 ஆண்டுகள் ஆனதை கன்னட திரைத் துறையினர் கொண்டாடினர். இதன் இரண்டாவது நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார் ரஜினி. இவர் கன்னடத்தில் நடித்து 35 வருடங்கள் ஆகிறது. தளவாய் முத்தண்ணாவின் கதையைப் படமாக்கினால் அதில் தளவாய் முத்தண்ணாவாக நடிக்கத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். ரஜினியே கூறிவிட்டதால் தளவாய் முத்தண்ணாவின் கதை விரைவில் படமாகும் என்ற நம்பிக்கை கன்னட திரைத் துறையினரிடையே ஏற்பட்டுள்ளது.

# பாவனாவின் "சுப்ரமணியம்"

**த்ரிஷா,** நயன்தாரா, சிநேகா நடித்த தெலுங்குப் படங்கள் தமிழில் டப் செய்யப்பட்டு வெளியாகின. இப்போது பாவனா நடித்த படமொன்றும் விரைவில் தமிழில் மொழிமாற்றமாகி வெளியாகிறது. ரமணா திரைக்கதை எழுதி இயக்கிய தெலுங்குப் படம் ஒன்டரி. ஜெயம் படத்தில் வில்லனாக நடித்த கோபிசந்த் ஹீரோ. ஹீரோயின் பாவனா. இந்தப் படத்தை சுப்ரமணியம் என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றம் செய்து வெளியிடுகிறது ஐஸ்வர்யா கிரியேஷன்ஸ். தமிழ் வசனங்களை ஏ.ஆர்.கே. ராஜராஜா எழுதியுள்ளார். மணிசர்மா படத்துக்கு இசையமைத்துள்ளார். இப்படம் தமிழில் வெளியானதும் தமிழ் ரசிகர் மத்தியில் தனக்கு ஒரு நிரந்தரமான இடம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறார் பாவனா.







## என்னவனே!

உன் நலம் கண்டு
மனம் சொல்ல உன்னவளின் இதயம்
இது!
ஆரம்பிக்க வார்த்தைகள் பஞ்சம் ஒரு
கோடி என்னிடம்!
தேக்கி வைத்த ஆசைகள் உன்னிடம்
சொல்ல பலகோடி என்னிடம்!

நாளொன்று பார்
நான் உன்னைக் காண!
தேதியொன்று பார் நீயென்னைச் சேர!
வருடங்கள் ஒவ்வொன்றும் யுகங்களென்று
ஆகிறதடா உன் பிரிவால்!
யுகங்களும் நிமிடங்களென்று
தோன்றாதோ
உன் வரவால்!

ஒன்று சேர்ந்து நான்கு பாதச்சுவடுகள்
பதியவில்லையே கரை மணலில்!
நான்கு கைகள் சேர்த்தெடுத்து
அணைத்திடவில்லையே சோலை
மலர்களை!
அருகிருந்தும் இடைவெளியோடு உன்
வாசம் சுவாசித்திடவில்லையேயடா என்
சுவாசம்!

செவிகள் நலம் அனுதினம் உன்
குரல் கேட்பதால்!

இதயம் நலம் நீ மட்டும் உள்ளே
நிறைந்திருப்பதால்!
நினைவுகளும் நலம் நிதம் உன்
நினைவை நினைப்பதால்!
ஆனால்,
தினமும் விழிகள் நனைகிறதே!
காரணம்,
காரணகர்த்தா நீ அறியாததா?

வலியும் நீயறிவாய் மருந்தும் நீ-
யேயறிவாய்!
உன் மனம் அறிந்ததை என்
வார்த்தைகளும் சொல்லாது!
என்னை அறிந்தவன் உனக்கு
என் வார்த்தைகள் எதற்கு?
சீக்கிரம்- சிறைகொடு
என் விழிகளுக்கு!

'மடல் கண்டதும் பதில் போடு'
வார்த்தை உள்ளது என்னிடம் ஆனால்
உன்னிடம் கேட்பதற்கில்லை!

ஆசைகள் உள்ளது என்னிடம் ஆனால்
அறிந்தவன் உன்னிடம்
சொல்வதற்கில்லை!

இன்னமும் பார்த்திரு தபால்காரன்...
தூது வருவான் உன்னிடம்....!

**தாரணி, நுவரெலியா.**

## என் மனவானில்......

நிலைத்துவிட்ட பார்வையை
திசை திருப்ப முயன்றும்
தோற்றுவிட்ட விழிகள்.

அரும்பான செவ்விதழ்கள் இரண்டும்
மலரத் துடிக்கும்
துடிப்புக்கள்.

அத்தனைக்கும் மேலாக
பெண்மையின் முழு உருவம்
நாணத்தை மட்டுமே
இறுக அணைத்தபடி அவள்
புரியாத பதில் தேடும்
படபடப்பில் ராட்டினமாடும்
அவள் மனம்.

அங்கு நிலவுகின்ற நிசப்தத்தை
நிராகரிக்கும் வண்ணம்
கிளர்ந்தெழும் சுவாசங்கள்.

மஞ்சள் தேய்ந்த அவள்
வெண்மதி வதனம் மட்டும்
என் வாழ்வின் முழு நாளும்
பௌர்ணமியாய் ஒளிர.

இவள்தான் என்னவளோ என
தொலைதூர மேகமாய்
நின்று நான் யாசிக்கின்றேன்.

**ரேகா ரவிச்சந்திரன்,**
**வயாவிளான்.**

## பந்தாடிய பாவை

ஆர்ப்பரித்து அலையெழுப்பும்
ஆழ் கடலைப் போன்ற
பூப்படைந்த பருவப்
புதுப் பொலிவுடையாள்!

கோர்த்த முத்துப் பல்லும்
குழி விழுந்த கன்னக்கதுப்பும்
போர்ப்படையே வசமாகும்
அவள் விழி வீச்சும்
மூர்த்தி தலம் தீர்த்தம் போல், அவள்
முகப்பொலிவும் என்னை
ஈர்த்ததினால்,நான்
என்னை இழந்துவிட்டேன்!

அர்த்தமுள்ள இந்துமதப்
பற்றுடையாள்
அமுதத் தமிழின் பால்
ஆழமான காதலுள்ளாள்
நேர்மைதனை
அணிகலனாய்
பூண்ட பெண்ணாள், தன்
பார்வையினால் என்னையவள்
பந்தாடி விட்டாள்!

**கவிக்குயிலன்,**
**சேனையூர்-06**

## போகத் துடிக்கின்றேன்

உயிரென்னைப் பிரிகிறே னென்றது
உடலிங்கு தளர்கிறே னென்றது
மனதுக்குள் என்னவோ செய்தது
மரணமும் கண்முன் தெரிந்தது
நேசித்த நினைவுகள் நெருப்பாயானது
நேற்று நடந்ததும் இன்று மறந்தது
நெஞ்சம் வெடித்தது பாசம் கசத்தது
பாரும் வெறுத்தது பார்வை இழந்தது
காதல் கொண்டது காயமானது
காயம் தேற்றிடும் வழியும் மறைந்தது
பாதை இல்லாத சுவடு நோக்கியே
பாதம் நடந்தது வலிகள் எடுத்தது
பிறந்த பாவமாய் வாழ்க்கை யானது
பிரிவின் பாதை பிதற்றலானது
தன்னைத் தானே வெட்டிப் பார்ப்பதாய்
எனக்குள் வலிகள் சொந்தமானது
உறவுகள் எல்லாம் சுமைகளானது
உயிரும் எனக்குக் கனத்துப் போனது
மனித வாழ்வே மண்ணில் நிழலென
ஞாலம் முழுதும் உரத்துக் கூறனும்....
ஞானம் வருவதும் காதல் கொண்டதால்
நானும் கூறவோ.. பிரிவை ஏற்கவோ..?
வாழ்க்கை வெறுக்கின்றேன் வாழ
மறுக்கின்றேன்
வந்த இடத்துக்கே இன்று போகத்
துடிக்கின்றேன்!

**சி.மதியழகன்,**
**திக்கம், அல்வாய்.**

## மறுப்பு



**டைரக்டர்** மணிரத்னம் இயக்கத்தில் உருவாகி வரும் ராவணா படத்தில் சீதையாக நடிக்கவில்லை என்று நடிகை ஐஸ்வர்யா ராய் தெரிவித்துள்ளார். ராவணா படத்தில் ஐஸ்வர்யா ராயின் கணவர் நடிகர் அபிஷேக் பச்சன் நாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராய் நடிக்கிறார். படத்தில் ஐஸ்வர்யா ராய்-க்கு சீதை கேரக்டர் என்று பரபரப்பாகப் பேசப்பட்டது. இதனை ஐஸ்வர்யா ராய் மறுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் அளித்துள்ள பேட்டியில், ராவணா படத்தில் நான் சீதையாக நடிக்கவில்லை என்று கூறியுள்ளார். ராவணா படத்தின் சூட்டிங் பெப்ரவரி 17ஆம் திகதி தொடங்கியது.



## ஆசை

**வரும்** லோக்சபா தேர்தலில், காங்கிரஸ் கட்சி சார்பில், தேர்தலில் போட்டியிடப் போவதாக நடிகை நக்மா தெரிவித்துள்ளார். பிரபல நடிகை நக்மா தென்னிந்திய மற்றும் போஜ்புரி படங்களில் அதிகமாக நடித்துள்ளார். முன்னாள், இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் சௌரவ் கங்குலியுடன் நெருங்கிப் பழகியதாக கிசுகிசுப்பில் சிக்கியவர். இவர் கடந்த 5 ஆண்டுகளாகக் காங்கிரஸ் கட்சியின் நிரந்தர உறுப்பினராக இருக்கிறார். அவர் அளித்துள்ள ஒரு பேட்டியில், காங்கிரஸ் கட்சி விரும்பினால் உ.பி.யில் உள்ள அலகபாத், மொரதாபாத், மகாராஷ்டிராவில் உள்ள மும்பை வட மேற்கு ஆகியவற்றில் ஏதாவது ஒரு தொகுதியில் போட்டியிடத் தயாராக உள்ளேன். எனது விருப்பத்தை விட, கட்சியின் முடிவுதான் முக்கியம். கடந்த 2004 தேர்தலில், போட்டியிடுவதாக இருந்தது. ஆனால், என்னுடைய திரைப்பட வேலைகள் முடியாததால் போட்டியிடுவது தவிர்க்கப்பட்டது. அப்போது காங்கிரஸ் கட்சிக்காக நாடு முழுவதும் பிரசாரம் செய்தேன். நான் அதிகமாக போஜ்புரி படங்களில் நடித்துள்ளதால், மக்களுக்கு நன்கு அறிமுகம் ஆகியுள்ளேன். கல்வி மற்றும் பெண்கள் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தான் எனது கொள்கை, என்று கூறியுள்ளார்.


## விருது



**பிலிம்பேர்** என்ற சினிமா பத்திரிக்கை ஆண்டுதோறும் விருதுகளை வழங்கி வருகிறது. இந்நிலையில் 2008ஆம் ஆண்டுக்கான பிலிம்பேர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஹிருத்திக்ரோஷன், ஐஸ்வர்யாராய் நடித்த வரலாற்றுப் படமான ஜோதா அக்பர் படத்துக்கு 5 விருதுகள் கிடைத்துள்ளன. சிறந்த படம், சிறந்த நடிகர், சிறந்த டைரக்டர், சிறந்த பாடல், சிறந்த இசையமைப்பாளர் ஆகிய 5 விருதை அந்த படம் தட்டிச் சென்றது.

சிறந்த நடிகருக்கான விருது ஹிருத்திக் ரோஷனுக்கு (ஜோதா அக்பர்) கிடைத்தது. பேஷன் படத்தில் நடித்ததற்காகச் சிறந்த நடிகைக்கான விருது பிரியங்கா சோப்ராவுக்கு வழங்கப்படுகிறது. சிறந்த டைரக்டராக அசு தோஸ் கவுரிகா (ஜோதா அக்பர்) தேர்வு பெற்றுள்ளார். ஏ.ஆர்.ரஹ்மானுக்குச் சிறந்த பின்னணி இசைக்கு விருது (ஜோதா அக்பர்) கிடைத்துள்ளது. ஜோதா அக்பர், தோஸ்ட்னா, கஜினி, ஜானே துயா ஜானே நா, ராக் ஆன் ஆகிய படங்கள் சிறந்த படத்துக்காகப் போட்டியிட்டன. இதில் ஜோதா அக்பர் சிறந்த படத்துக்கான விருதைப் பெற்றது. சிறந்த புதுமுக நடிகைக்கான விருதை நடிகை அசின் கஜினி படத்துக்காகத் தட்டிச் சென்றுள்ளார்.

# பஸ் நடத்துநர் சூப்பர் ஸ்டாரானது எப்படி !



80

## சிவாஜிராவ்/ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு:

**முயல்,** குரங்கு முதலான கார்ட்டூன் படங்களுடன் ''அனிமேஷன்'' ரஜினிகாந்த் நடித்தார். ஏவி.எம். தயாரித்த ''ராஜா சின்ன ரோஜா'' என்ற படத்துக்காக, மிகுந்த பொருட்செலவில் இந்தப் பாடல் காட்சி படமாக்கப்பட்டது.

இந்தப்படம் 1989-இல் தயாரிக்கப்பட்டதாகும். கதை- வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுதினார். எஸ்.பி.முத்துராமன் டைரக்ட் செய்தார்.

பாடல்களைக் கவிஞர் வைரமுத்து எழுத, சந்திரபோஸ் இசை அமைத்தார்.

இந்தப் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக கௌதமி நடித்தார்.

மற்றும் ராகவி, ஷாலினி, கோவை சரளா, எஸ்.எஸ்.சந்திரன், சின்னிஜெயந்த் ஆகியோர் நடித்தனர்.

### புதுமை

இந்தப் படத்தில் ரஜினி, கௌதமி மற்றும் 5 குழந்தைகள் இடம்பெறும் பாடல் காட்சி ஒன்று வருகிறது. அந்தப் பாடல் காட்சியில், இந்த 7 பேருடன் யானை, முயல், குரங்கு முதலான மிருகங்கள் (கார்ட்டூன்களாக) ஆடிப்பாடுவது போல் படமாக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு முன் கார்ட்டூன் சினிமாப் படங்கள் உருவாகியிருந்தபோதிலும், மனிதர்களுடன் கார்ட்டூன்கள் சேர்ந்து நடிப்பது இந்தியாவிலேயே இதுவே முதல் தடவை.

இப்படி கார்ட்டூன் காட்சிகள் அமைப்பதில், மும்பையைச் சேர்ந்த ராம்மோகன் பெரிய நிபுணர். அவர் ரொம்ப ''பிசி''யாக இருந்த காலகட்டம் அது.

எனவே, பட அதிபர் ஏவி.எம்.சரவணன், முத்துராமனை அழைத்து, ''படத்துக்கு இந்த அனிமேஷன் காட்சி முக்கியம். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. அதைச் சிறப்பாக எடுக்க வேண்டும். ''அனிமேஷன்'' நிபுணர் ராம்மோகன் ரொம்பப் பிசியாக இருப்பதாக அறிந்தேன். நீங்கள் உடனடியாக மும்பை சென்று, அவருடைய சம்மதத்தைப் பெற்று வாருங்கள்'' என்றார்.

### பூஜை அன்றே பயணம்

எனவே, படத்துக்குப் பூஜை போடப்பட்ட அன்றே விமானம் மூலமாக முத்துராமன் மும்பை சென்றார். ராம்மோகனைச் சந்தித்து, விஷயத்தைச் சொன்னார்.

''இந்த மாதிரியான ''அனிமேஷன்'' பாடல் காட்சி எடுக்க, நான் 80 ஆயிரம் படங்களை வரையவேண்டும். அதற்கு ரொம்ப அவகாசம் வேண்டும். இப்போது எனக்குள் இருக்கும் வேலையில், இந்தப் பொறுப்பை ஏற்பது இயலாத காரியம்'' என்று ராம்மோகன் கூறினார்.

ஆனால், முத்துராமன் விடவில்லை. ''ஏவி.எம். எதையும் திட்டமிட்டுப் படமாக்கும் நிறுவனம். இந்தப் பாடல் காட்சியை முதலாவதாகப் படமாக்கி, உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். உடனடியாக நீங்கள் படம் வரைய ஆரம்பித்துவிடலாம். அதன்பின் 6 மாதம் கழித்துத்தான் படம் ரிலீஸ் ஆகும். உங்கள் வேலையைப் செய்து முடிக்க, போதுமான அவகாசம் கிடைக்கும்'' என்றார்.

அதன் பேரில், கார்ட்டூன்கள் வரைய ராம்மோகன் சம்மதித்தார்.

### படமாக்கியது எப்படி?

''இந்தக் காட்சியைப் படமாக்கியது எப்படி?'' என்று முத்துராமனிடம் கேட்டதற்கு


குழந்தைகளுடன் ரஜினி, கௌதமி.

அவர் கூறியதாவது:-

''இந்தப் பாடல் காட்சியில் ரஜினி, கௌதமி ஆகியோருடன் 5 குழந்தைகள் பங்கு கொண்டார்கள்.

அவர்களுடன் யானை, முயல், குரங்கு முதலான மிருகங்கள் ஓடியாடுவது வெறும் கற்பனைதான். அக்காட்சியில் யானை எங்கிருந்து வரும், முயல் எப்படி ஓடி வரும்.

என்பதையெல்லாம் உதவியாளர்கள் விளக்கி, நடித்துக் காட்டினார்கள்.

அந்த மிருகங்கள் அந்தந்த இடங்களில் இருப்பதாக ரஜினியும், மற்றவர்களும் கற்பனை செய்துகொண்டு நடித்தார்கள்.

இதை நாங்கள் படமாக்கி மும்பை அனுப்பினோம். அதற்கு ஏற்றபடி, ராம்மோகன் கார்ட்டூன்கள் வரைந்தார். அவற்றையெல்லாம் அந்தந்த இடத்தில் பொருத்தமாக இணைத்துப் பாடல் காட்சியை உருவாக்கினோம்.

சிரமமும், பணச்செலவும் அதிகமாக இருந்தபோதிலும், அந்தக் காட்சி அழகாக அமைந்தது. குழந்தைகளை வெகுவாகக் கவர்ந்தது.

''குழந்தைகளைப் பெற்றோர்கள் பொறுப்போடு வளர்க்க வேண்டும். வேலைக்காரர்களிடம் விட்டுவிடக்கூடாது'' என்ற கருத்தை இந்தப்படம் வலியுறுத்தியது. இதற்கு அந்தப் பாடல் காட்சி உதவியது.


### குழந்தைகள்

இந்தக் காட்சியின் மூலம் தமிழ்நாட்டுக் குழந்தைகளின் மனதை ரஜினி வெகுவாகக் கவர்ந்தார். எங்கு போனாலும், ''ரஜினி அங்கிள்,

ரஜினி அங்கிள்'' என்று குழந்தைகள் கூடிவிடுவார்கள்.

(பயணிக்கும்)

# திருமணத்திற்கு முன்பு பெண்கள் தங்களின் அழகை மெருகூட்டுவதற்கு...




**திருமணம்** என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் மறக்க முடியாத ஒன்று. குறிப்பாகத் தங்களுடைய அலங்காரத்தையும், அழகையும் வெளிக்காட்டும் விதத்தில் சடங்குகளும் சம்பிரதாயங்களும் அமைந்த ஒரு விசேஷம் என்பதால் மூன்று மாதங்களுக்கு முன்பு முகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து... முகப்பரு, படை, கரும்புள்ளிகள் போன்றவை நீங்க சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். வாரத்திற்கு ஒரு நாள் வீதம் தொடர்ந்து ஆறு வாரங்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டால் முகம் பளீச் என்று மாறிவிடும். கறுப்பான முகமும் நிறம் மாறிக் காணப்படும். ''ஆரஞ்சு கால்வானிக்'' மசாஜ் செய்து கொண்டால் சருமம் மென்மையாகும். பத்து நாட்களுக்கு ஒருமுறை இதைச் செய்து கொண்டால் சருமத்தின் நிறமும் கூடும். உடம்பில் உள்ள சருமத்தின் கரடுமுரடுத்தன்மை நீங்குவதற்கு ''பாடி பாலிஷ்ங்'' செய்து கொள்வது நல்லது.



உங்களுடைய சருமத்திற்கு எந்த பேஷியல் பொருத்தமாக... சரியாக இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்டு பேஷியல் செய்து கொள்வது நல்லது. அதேபோல், என்ன உடை, எந்த நகை பொருத்தமாக இருக்கும் என்பதை அழகுக்கலை நிபுணருடன் ஆலோசனை செய்து கொள்ளலாம். சருமத்தின் நிறம் மற்றும் அதன் தன்மைக்குத் தகுந்தாற்போல் உடை, நகை என அனைத்தும் பொருத்தமாக இருக்க வேண்டும்.

சுருண்டு பரந்த தலை முடிக்கு... ''ஹேர் ஸ்பா'' செய்து கொள்ளவும். இதனால் தலைமுடி பளபளப்பாக ஜொலிக்கும். மினுமினுப்பும் அதிகமாகும். சுருண்ட முடிக்கு ''ஹேர் ஸ்மூத்தினிங்'' பண்ணலாம். பொடுகுத் தொல்லை இருந்தால் ஆயில் மசாஜ் செய்த பின்னர், ஹென்னா போட்டுக் கொள்ளலாம். இரண்டு வாரங்களுக்குப் பிறகு இவற்றைப் பண்ணக்கூடாது.

### இரண்டு மாதத்திற்கு முன்பு...!

தொடர்ந்து ''ஆரஞ்சு கால்வானிக்'' மசாஜ் செய்து கொள்ளவும். மாதம் ஒருமுறை ''பெடிக்குயர் மெடிக்குயர்'' முறையில் கை, கால் நகங்கள் மற்றும் விரல்களை அழகு படுத்திக் கொள்ளவும்.

முகப்பருக்களை நீக்குவதற்கு, ''பிம்பிள் ட்ரீட்மெண்ட்'' பண்ணவும். முகப்பரு வராமல் இருக்க... உணவு முறையைக் கடைபிடிக்கவும். முட்டை, எண்ணெயில் பொரித்த உணவுகள், சில வகை மீன்கள் ஆகிய உணவுகளை தவிர்க்கவும். கரட் ஜூஸ் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சருமம் மற்றும் கண்கள் பொலிவடைந்து அழகாகும். பழங்கள், காய்கறிகளை அதிகமாக சாப்பிட்டு வந்தால் பருக்கள் வராது. அதிகமாக தண்ணீர் குடித்தாலும் பருக்கள் எட்டிப் பார்க்காது.

தற்போது வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிகம் என்பதால்... அவர்கள் வெயிலின் தாக்குதலுக்கு ஆளாவார்கள். இதனால் வெயில் தாக்குதலைத் தடுக்க... இரண்டு மாதங்களுக்கு முன்பு சிகிச்சை எடுத்துக் கொள்வது நல்லது. வெயில் பட்டு கறுத்துப் போகும் கை, கால்களை பிளீச் மற்றும் ஸ்கிரப் செய்து கொள்ளலாம். ''வெஜிடபிள் பேக்'' போடவேண்டும். அதுமட்டுமன்றி, வெயில் படும் உடல் பாகங்கள் மீது ஆரஞ்சு சாறு பூசுவதால் மெருகேறும்.

### ஒரு மாதத்திற்கு முன்பு

திருமணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக பியூட்டி பார்லரில் ஸ்டீம் பாத் எடுத்துக் கொள்ளலாம். இதனால் உடல் சுத்தமாகும். டெட் ஸ்கின் செல்கள் நீங்கி, சருமம் மென்மையாகும். சூரிய கதிர்களால் தோலில் ஏற்படும் அலர்ஜி நீங்கும். இப்படி அழகு படுத்துவதை பியூட்டி பார்லரில்தான் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை. தேவையான பொருட்களை வைத்து வீட்டிலும் செய்து கொள்ளலாம்.

### இரண்டு வாரத்திற்கு முன்பு...

''ஆரஞ்சு கால்வானிக்'' மசாஜ் பண்ணியபிறகு, முத்து, தங்கம், வைரம் போன்றவை மூலம் பேஷியல் பண்ணிக் கொள்ளலாம். ஆனால் உங்களுடைய சருமத்திற்கு பொருத்தமான பேஷியல் செய்து கொள்வது நல்லது.

### ஒரு வாரத்திற்கு முன்பு...

எந்த விதமான ஹேர் ஸ்டைல் உங்களுடைய முகத்துக்கு அழகாக இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்டு அந்த ஹேர் ஸ்டைலில் முடியை தயார் செய்யவும்.

### மூன்று நாட்களுக்கு முன்பு...

உடம்பு முழுவதையும் பிளீச் மற்றும் வாக்ஸிங் செய்து கொள்ளவும். ஸ்கிரப் பண்ணிக் கொள்வதும் நல்லது. கை, கால்களுக்கு ''பிரெஞ்சு பெடிக்குயர் - மெடிக்குயர்'' பண்ணினால் விரல்களும், நகங்களும் அழகு கூடும். முடிந்தால் நெயில் ஆர்ட் கூட பண்ணினால் இன்னும் அழகாக இருக்கும்.

இதுவரை பேஷியல் பண்ணாதவர்கள்கூட மூன்று நாட்களுக்கு முன்பாக முத்து, தங்கத்தில் பேஷியலை செய்து கொள்ளலாம். திருமணத்தின் போது முகம் அழகாக இருக்கும்.

### திருமணத்திற்கு முந்திய நாள்...

கல்யாணத்திற்கு முதல் நாள் மெகந்தி போட்டுக் கொண்டால்... திருமணத்தின்போது மிகவும் அழகாக இருக்கும். மெகந்தி போடுவதற்கு முன்னர், அந்த இடத்தில் ஆயில் பூசிவிட்டு பின்னர் மெகந்தி போடவும். இன்றைக்கு ''அராபிக் மெகந்தி'' மற்றும் டிசைன்கள் அதிகமான ''இந்தி மெகந்தி'' ஆகியவை அனைவராலும் விரும்பப்படுகின்றன. காயும் வரை காத்திருந்து, மெழுகுவர்த்தியில் கையை சூடாக்குவது, கிராம்பு போட்டு கொதிக்க வைத்த நீரில் ஆவி பிடிப்பது போன்றவை செய்தால் மெகந்தி நன்றாக பிடிக்கும்.

75 சதவீதம் மெகந்தி உலர்ந்தபிறகு, சிறிது சர்க்கரை மற்றும் எலுமிச்சை சாறு கலந்த திரவத்தில் பஞ்சை நனைத்து, மெகந்தியின் மேல் பகுதியில் ஒத்தி எடுக்கவும். இதனால் அடர்ந்த சிவப்பு கலந்த பிரவுன் கலர் கிடைக்கும். இதில் சர்க்கரைக்கு பதில் கரும்புச் சாறு அல்லது வெல்லம் சேர்த்து பயன்படுத்தலாம். ஐந்து முதல் எட்டு மணி நேரம் மெகந்தியை கலைக்காமல் உலரவிடுவது நல்லது. நன்றாக காய்ந்த பிறகு, மெதுவாக பெயர்த்துவிட்டு, உடனே தண்ணிரில் நனைக்காமல் ஆறு மணிநேரம் கழித்து கழுவவும். மெகந்தி போடும்போது க்ளவுஸ் பயன்படுத்தினால் மற்ற இடங்களில் மெகந்தி பிடிக்காது.

## தூதுவளைத் தோசை



**தேவையான பொருட்கள்**

1. பச்சரிசி - 1 கப்
2. தூதுவளை இலைகள் - 12
3. மிளகு - 10
4. சீரகம் - 1/2 டீஸ்பூன்
5. பச்சை மிளகாய் அல்லது காய்ந்த மிளகாய் - 2
6. உப்பு - தேவையான அளவு
7. நல்லெண்ணெய் - தேவையான அளவு.

**செய்முறை:-**

பச்சரிசியை 2 மணி நேரம் ஊற வைக்கவும்.

ஊறிய அரிசியைக் களைந்து, அலம்பி மிளகாய், சீரகம், மிளகு, தூதுவளை, உப்புச் சேர்த்து அரைத்து எடுத்து வைக்கவும்.

தோசைக் கல்லில் மெல்லிய ஊத்தப்பமாக ஊற்றி வெந்ததும் திருப்பிவிட்டு மறுபுறமும் வெந்ததும் எடுத்துச் சூடாகப் பரிமாறவும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

முரசு வாசகர்களுக்கான போட்டி -165

ரூபா. 1000/- பரிசு

கேள்வி:-
மகளிர் தினம் முதன் முதலாக எத்தனையாம் ஆண்டு கொண்டாடப்பட்டது?

165

பெயர் : ....................
முகவரி : ....................
....................
....................
தே-அ- அட்டை இல : ....................
விடை : ....................
கையொப்பம் : ....................

- சரியான விடையை எழுதி அனுப்பி வைப்பவர்களில் அதிர்ஷ்டசாலி ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும். (பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -165**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 17.03.2009

பரிசுப் போட்டி இல -163
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

எஸ். வீரக்குட்டி,
ஏகட் வீட்டுத் திட்டம்,
கோளாவில்-01, அக்கரைப்பற்று.

# பெண் விடுதலையும், மகளிர் தினமும்

**மார்ச்** 8ஆம் திகதி மகளிர் தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. உலகமகளிர் தினத்தில் பெண்கள் சம உரிமைகள் பற்றியும், முன்னேற்றம் பற்றியும் ஆராய்ந்து பெண்சமுதாயம் வளர்ச்சியடைய பாடுபடப்போவதாகச் சொல்கிறார்கள். பெண் அடிமைத்தனம் எங்கு இருக்கிறன்றதோ அங்குதான் பெண் சுதந்திரம் மற்றும் பெண்கள் எழுச்சி தேவைப்படுகிறது. பெண்கள் முன்னேற்றம் மற்றும் சம உரிமையை மையமாக வைத்து கி.பி. 1909-இல் அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சியினர் முதன் முதலாக மகளிர் தினத்தைப் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி கொண்டாடினர்.



இதன் முடிவாக 1911, மார்ச் 19 அன்று ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி மற்றும் சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளில் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் அரசு அலுவலகங்கள் முன் திரண்டு வேலைவாய்ப்பு மற்றும் அரசியலில் சம உரிமை அளிக்கவேண்டும் எனப் போராடினர். இதனால் ஏற்பட்ட கிளர்ச்சியினால் ஐக்கிய இராஜ்ஜியம், ரஷ்யா போன்ற நாடுகளில் வேறுபட்ட நாட்களில் 1917 வரை இவ்வாறான குரல்கள் ஒலித்து வந்தன. 1917-இற்குப்பின் உலக மகளிர் அமைப்புகள் ஒன்று கூடி மகளிர் தினத்தை மார்ச்-8 என்று கட்டமைத்தனர். இத்தகைய பெண்கள் போராட்டங்களால் 1945-இல் சென் பிரான்ஸிஸ்கோவில் ஐக்கிய நாடுகள் ஒன்று கூடி பெண்கள் சம உரிமை என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

மேற்கத்திய நாடுகள் உலகறிய தாங்கள்தான் பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறோம் என்கிறார்கள். மகளிர் அமைப்புகள், பெண்கள் சம உரிமைக்காக போர்க்கொடி ஏந்தி போராடி வருகிறார்கள். இத்தகைய நிகழ்வுகளாலும், போராட்டங்களாலும், மகளிர் அமைப்புகளின் செயல்களாலும் பெண்சமுதாயம் முன்னேற்றமடைந்துவிட்டதா? பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைந்திருக்கின்றனவா? என்றால் இல்லை என்றே கூறலாம்.

சம உரிமை பேசும் மேற்கத்திய நாடுகளில் பெண் எழுச்சி ஏற்பட்டதன் விளைவாக கலாசார சீரழிவுகளும் ஏற்பட்டு வருகின்றது. அதேபோன்று சில குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் பெண் சுதந்திரம், மகளிர் தினம் போன்ற கோஷங்கள் முன்னிலைப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாகவேயுள்ளது. உதாரணமாக புலிகள், பெண்களைத் தமது பயங்கரவாதச் செயற்பாடுகளுக்குள் உள்வாங்குவதற்காகவும், அதன் மூலம் தற்கொலையாளிகளாக மாற்றித் தமது பயங்கரவாத வெறித்தனங்களை அரங்கேற்றுவதற்காகவும் கடந்த காலங்களில் பெண் சுதந்திரம் பற்றிய கருத்துக்களையும் மகளிர் தினம் போன்ற நிகழ்வுகளையும் முன்னிலைப்படுத்தியிருந்தன.

அதற்காகச் சமுதாயத்தில் பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட வேண்டும் என்றோ, மகளிர் தினம் போன்ற சர்வதேச தினங்கள் அவசியமற்றவை என்றோ நாம் கூறவில்லை. இவ்வாறான நிகழ்வுகள் பெண்ணியத்தின் புனிதத் தன்மை கெட்டுச் சீரழிவதற்குத் தூண்டுகோளாகவோ அல்லது சுயநலவாதிகளின் பயங்ரவாத செயற்பாட்டாளர்களும் தங்களின் இலக்குகளை இலகுவாக்கிக் கொள்வதற்கான பாலமாக அமைந்துவிடக் கூடாது என்பதுவுமே எமது அவாவாகும்.

ஆனால் உலகெங்கும் சமயத்தின் பேராலும், சமூகத்தின் பேராலும் இன்னும் வேறு பல காரணங்களாலும் அடக்கி ஒடுக்கப்படுகின்ற பெண்கள் தங்களது தனித்துவத்தை இழந்துவிடாதவாறு சுயமாகச் சிந்தித்து, சுயமாக இயங்குவதற்காக அவர்கள் மீதான அடக்குமுறைகள் உடைத்தெறியப்பட வேண்டும். உலகெங்கும் ஆண்களும், பெண்களும் சரி சமனாகத் திகழ வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

**"புதுமைப் பெண்களைக் காணும் பாரதியின் கனவு தொடர்ந்தும் கனவாகவே இருக்கும்."**




மாத்யூவின் கருத்தைக் கேட்டேன். அந்த ஆளை அன்றிரவே கொன்றுவிட வேண்டுமென்பதை அவன் ஆதரித்தான். தானே அதைச் செய்யவேண்டுமென்று விரும்பினான். வேண்டாமென்று தடுத்து விட்டேன். வெளிப் பார்வைக்கு ஒரு மாதிரியாகத் தோன்றுகிறான் என்பதற்காக ஒருவனைக் கொலை செய்வதும் சரி-அல்லது அதன் விளைவாகத்தானே கொலை யுறுவதும் சரி -அந்த யோசனையே எனக்கு வெறுப்பாயிருந்தது.

நாரிக்கிடம் கேட்டேன்: ''என்னப்பா, அந்த ஸெலியரிடம் ஏதாவது கவனித்தாயா?''

''இல்லையே, கவனிக்கவில்லை. பீப்பாயை என் தோள் மீது தூக்கி

**எவனுக்காவது** நம் வேலை தெரிந்து விட்டது என்று நினைக்கிறாயா? யாரிடமாவது தனியே இரகசியமாய்ச் சொல்லி விட்டாயா? சொல்லு,'' என்றேன்.

''இல்லை, இல்லவே இல்லை.''

''இருந்தாலும், எதைப் பற்றியோ நீ அலட்டிக் கொண்டிருக்கிறாயென்று எனக்குத் தோன்றுகிறது. சொல்லு.''

''வந்து.... ஸெலியர் என்ற ஒரு பேர்வழி. அவன் ஏனோ குறுகுறுப்பாய்ப் பார்த்தான். அதிலிருந்து எனக்கு உறுத்தலாயிருந்தது. நாரிக் தச்சுப் பட்டறையிலிருந்து கட்டையை எடுத்துக் கிளிஞ்சல் பீப்பாயில் வைத்து எடுத்துச் செல்கிற போது பார்த்திருப்பானோ என்று ஓர் எண்ணம். நாரிக் கேட்டுக்குப் போகிறவரையில் அவனைக் கவனித்துக் கொண்டேயிருந்தான் அந்தப் பேர் வழி. அதுதான் எனக்குக் கவலை.''

கிராண்டெட்டிடம் சொன்னேன்: ''இந்த ஸெலியர் என்கிற ஆள் நம் பிளாக்கில் இருப்பவன். ஆகையால் காட்டிக் கொடுக்கிறவனாக இருக்கமாட்டான்.''

வைத்துக் கொண்டு போனேன்- கேட் காவல்காரன் அதற்குள் இருப்பதைப் பார்த்துவிடக்கூடாதென்று. காவல்காரனிடம் சென்றதும், அவனுக்கு நேர் எதிரில் நின்று கொண்டு என் தம்பியின் வருகைக்காகக் காத்திருக்கிற மாதிரி நடிப்பதென்று எங்களுக்குள் ஏற்பாடு. அப்போதுதான், நான் அவசரப்படாமல் இருப்பதாகக் காவல்காரன் நினைத்துக் கொள்வான். ஆகவே பீப்பாய்க்குள் பார்க்கமாட்டான். ஆனால் என் தம்பி பிற்பாடு சொன்னான், ஸெலியர் என்னையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்ததாக.''

''சரி, இத்துடன் விட்டு விடுவோம். கட்டுமரத்துக்கான கடைசிப் பாகத்தை எடுத்து வரும்போது, முதலில் ஸெலியர் எங்கே இருக்கிறான் என்பதைப் பார்த்துக் கொண்டு பிறகு அடியெடுத்துவை. காவல்காரர்கள் விஷயத்தில் எப்படி எச்சரிக்கையுடன் இருப்பாயோ அதே போல் இவனிடமும் இரு.''

அன்று இரவு பூராவும் நான் மார்சேல்ஸ் சீட்டாட்டத்தை வெறி பிடித்தவன்போல் ஆடினேன். ஏழாயிரம் ஃபிராங்க் ஜெயித்தேன். அதிக வெறியுடன் ஆட ஆட அதிக வெற்றி கண்டேன்.



மணி நாலரை, மீன் பிடிக்கச் சென்றேன்.

என் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. முந்தின இரவு வெறியுடன் சீட்டாடியதால் களைப்புற்று இருந்தேன். ஒரு பாறையின் நிழலில் அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டேன். மூன்று மாதத்துக்கும் மேலாக நான் என் மனத்தில் அனுபவித்து வரும் வேதனை இதோ ஒரு வழியாக முடியப் போகிறது என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். அந்த ஸெலியர் விஷயத்தைச் சிந்தனை செய்தேன். அவனைக் கொலை செய்ய எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்ற முடிவுக்கு மீண்டும் வந்தேன்.

எவ்வளவு முட்டாள்தனமான முடிவு!

கட்டுமரம் தயாரிக்க ஆரம்பித்து மூன்று மாதம் ஆகியிருந்தது. மாத்யூவைப் பார்க்கச் சென்றேன்.

அவன் சொன்னான்: ''அந்த ஆள் பொதுப் பணித்துறையில் தன் இஷ்டம்போல் போகிறான், வருகிறான். அவன் எப்படிப்பட்டவன் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. இராணுவத்திலிருந்து தள்ளப்பட்டவன். அல்ஜீரியாவிலும், மொராக்கோவிலும் இருக்கிற எல்லா இராணுவச் சிறைச்சாலைகளையும் பார்த்தவன். சண்டைக்காரன். கையில் கத்தி இருக்கும்போது அபாயகரமானவன். பையன்களை வேட்டையாடுகிறவன். சூதாடி ஸிவிலியன் பிரஜையாக வாழ்ந்ததே கிடையாது. ஒரே வார்த்தையில் சொல்வதானால் துளியும் நல்லவனில்லை; ரொம்ப ரொம்ப ஆபத்தானவன். ஜெயில்தான் அவன் வாழ்க்கை. உனக்குச் சந்தேகம் ஏற்பட்டு விட்டதென்றால் நீ முந்திக் கொண்டுவிடு. இன்று இராத்திரியே ஆளைத் தீர்த்துவிடு. அவன் உன்னை மடக்குவதாக இருந்தால் அதற்கு அவகாசம் கொடுக்காதே.

''அவன் காட்டிக் கொடுக்கிறவன் என்பதற்கு (ருசு) ஏதுவுமில்லையே?''

''உண்மைதான்,'' என்றான் கால்கானி. ''ஆனால் யோக்கியமான நபர் என்பதற்கும் ருசு கிடையாது. உனக்கே தெரியும்-இந்த வகைக் கைதிகளுக்குத் தப்பி ஓடுவது என்றாலே பிடிக்காது. அவர்களுடைய அமைதியான, செம்மையாக அமைந்துவிட்ட வாழ்க்கையை அந்த முயற்சிகள் குலைத்து விடுகின்றன. வேறு விஷயத்தில் அவர்கள் காட்டிக் கொடுக்க மாட்டார்கள். ஆனால் தப்பி ஓடும் முயற்சி என்றால்-அவர்கள் எப்படி மாறுவார்களோ சொல்வதற்கில்லை.''

எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

அவனுடைய தோட்டத்துச் சுவரிலிருந்து புதைகுழியை நன்கு காண முடியும். வழி நெடுக மண் அரித்திருந்தது. பகலுக்கு அங்கே போய்க் கூட்டிச் சரிப்படுத்துவதாக மாத்யூ சொன்னான்.

ஜூலியட்டிடம் நான் பிடித்த மீன்களில் பாதியைக் கொடுத்தேன்.

''பட்டாம்பூச்சி, உன்னைப் பற்றி ஒரு கெட்ட கனாக் கண்டேன். உன் உடம்பு பூராவும் ஒரே இரத்தமாக இருக்கிற மாதிரியும், உன்னைச் சங்கிலியில் கட்டிப் போட்டிருக்கிற மாதிரியும் சொப்பனம். முட்டாள்தனமாக எதுவும் செய்து வைக்காதே. உனக்கு ஏதேனும் நேர்ந்தது என்றால் நான் மிகவும் துன்பப்படுவேன். அந்தக் கெட்ட கனா என்னைக் கலங்க வைத்துவிட்டது. நான் குளிக்கவும் இல்லை, தலை சீவிக் கொள்ளவும் இல்லை. பைனாகுலரை எடுத்து வந்து, நீ எங்கே மீன் பிடிக்கிறாய் என்று பார்க்க முயன்றேன். உன்னைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த மீன்களை எங்கே பிடித்தாய்?'' என்றாள் அவள்.

''தீவின் மறுபக்கத்தில் பிடித்தேன்.

(பட்டாம் பூச்சி பறக்கும்)


## சிங்கப்பூரில்
### தங்குமிடவசதி

சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்கவும் திருமணத்திற்கும் குடும்பத்தோடு வருபவர்களுக்கு எல்லா வசதிகளோடும் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். இலவச போக்குவரத்து வசதி, வழிகாட்டி (Guide) வசதி. மேலதிக விபரத்துக்கு எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியாக

அப்புலிங்கம் கைத்தொலைபேசி:- 0065 - 97514941

LINGAM WEDDING SERVICES
50.A, JALAN LIMBOK, SINGAPORE 548730.


# வன்னிக்குள் சிக்கியுள்ள மக்களை அமெரிக்கா மீட்கும் திட்டம் சாத்தியப்படுமா?

**வன்னிக்குள்** புலிகளின் பிடிக்குள் சிக்கியுள்ள மக்களை மீட்டெடுப்பது பெரும் தடையைத் தாண்ட வேண்டிய விடயமாகவே உள்ளது. அரசாங்கம் அங்குள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேற இரண்டு நாள் யுத்த நிறுத்தம் மேற்கொண்டும் புலிகள் மக்களை வெளியேற அனுமதிக்கவில்லை. அரச படைகளுக்கும், புலிகளுக்குமிடையில் நடக்கும் இறுதிச்



சண்டைக்குள் சிக்கியுள்ள மக்கள் பெரும் உயிராபத்தையும் பாரிய மனித அவலத்தையும் எதிர்கொள்கின்றார்கள் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்தில்லை. இம்மக்கள் படுகின்ற துயர் எமது நெஞ்சை உலுக்கிக் கரைக்கிறது. இம்மக்கள் போரின் தீச்சுவாலைக்குள்ளிருந்து பாதுகாப்பாக மீட்டெடுக்கப்படல் வேண்டும்.

புலிகளின் கடும் தடையையும் மீறி உயிராபத்துக்களை எதிர்கொண்டும் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி நாளுக்கு நாள் வன்னியில் சிக்குண்டுள்ள மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி தப்பி வந்தவர்கள் புலிகள் வன்னிக்குள் மக்களைப் பணயக் கைதியாக்கி வைத்து நடாத்திய அராஜகத்தைச் சொல்லிக் கண்ணீர் வடிக்கின்றனர். உயிருடன் திரும்பி வந்து வாழ்ந்து கொண்டிருப்பதே தாங்கள் செய்த புண்ணியம் என்கின்றனர். வவுனியா மாவட்டத்தில் இடைத்தங்கல் முகாம்களுக்குள் வாழும் இம்மக்களுக்கான அடிப்படை வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது. தற்காலிக இருப்பிடம், உணவு, மருத்துவம், மாணவர்களுக்குக் கல்வி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

தற்போது வன்னிக்குள் எஞ்சியுள்ள மக்கள் உணவு, மருத்துவம், தங்குமிட வசதிகள் முழுமையாகக் கிடைக்க முடியாதவர்களாகவும் பெரும் உயிர் அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளுகின்றனர். இம் மக்களுக்கான அடிப்படை அத்தியாவசியப் பொருட்களை அரசாங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அனுப்பி வைத்தது. இக்கப்பல் கரைக்குச் சென்று பொருட்களை இறக்க முடியாததனால் சிறுபடகுகள் மூலம் முல்லைத்தீவு புதுமாத்தளன் கடற்கரைப் பிரதேசத்தில் பொருட்களை இறக்கிக் கொண்டிருந்தபோது புலிகள் இவ் உணவுக் கப்பலை நோக்கி ஷெல் தாக்குதலை நடாத்தியதாகவும் இதனால் இக் கப்பலால் இங்கு தரித்து நிற்க முடியாமல் திருகோணமலைக்குத் திரும்பி விட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னிக்குள் உள்ள மக்களை வெளியேற விடாமலும், அம் மக்களின் அபாயகர நிலையைக் கருத்திற் கொண்டு, அரசாங்கம் அனுப்பி வைக்கும் மனிதாபிமான உதவிகளைக் கிடைக்க விடாமலும் தடுக்கும் புலி அரசியலின் எதிர்பார்ப்பு அம் மக்களின் அழிவையும், துயரையும் வைத்து அரசியல் நடாத்துவதுதான். வன்னிக்குள் எஞ்சியுள்ள மக்களின் அழிவை வைத்தே புலித் தலைமை கடந்த இரண்டு மூன்று மாதங்களாகத் தமிழ் மக்களுக்குள்ளும் சர்வதேச சமூகத்திற்கு முன்னும் அரசியல் நடாத்தி வருகிறது! தமிழ் மக்கள் வன்னிக்குள் கொல்லப்படுகிறார்கள். பட்டினிச்சாவை எதிர்கொள்கிறார்கள் எனக் குரல் எழுப்புபவர்கள் இந்த நிலைக்கான உண்மையான குற்றவாளிகள் யார் என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அந்த உண்மைக் குரலின் விரல் சுட்டுகை புலித் தலைமையை நோக்கியதாகத்தானிருக்கும்.

கடந்த சில நாட்களாக அமெரிக்கா தலையிட்டு வன்னிக்குள் சிக்கியுள்ள மக்களை மீட்டெடுக்க ஆலோசிப்பதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. வன்னி மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் தடைப்பட்டுள்ளமை குறித்தும் அம்மக்களின் நிலை குறித்தும் ஐக்கிய நாடுகள் சபையின் இடம் பெயர்ந்த மக்களுக்கான குழு தனது கவலையை வெளிப்படுத்தியும் உள்ளது. இது விடயமாகப் பேசுவதற்கு அமெரிக்க அரசுத் தலைமை இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் சிவசங்கர் மேனனை அழைத்ததன் பேரில் அவர் வாஷிங்டன் சென்றுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா அப்படியானதொரு நடவடிக்கையை மேற்கொள்ள உண்மையாக முயற்சிக்குமானால் இந்தியாவின் ஒப்புதலும், ஆதரவும் இல்லாமல் செய்யாது என்பது உறுதி! அமெரிக்க கடற்படை, விமானப்படையின் உதவியுடன் மக்கள் மீட்புத்திட்டம் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அமெரிக்க அரசுக்குப் பரிந்துரைத்தும் உள்ளது. இந்தியா இந்த விடயத்தில் என்ன முடிவை எடுக்கும் எனத் தெரியவில்லை.

வன்னியிலிருந்து காயப்பட்டு வரும் பொது மக்கள் திருமலை வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு இம்மக்களுக்கு மருத்துவ சேவை வழங்குவதற்கு இந்திய அரசு மருத்துவக் குழுவொன்றை விமானம் மூலம் அனுப்பி வைத்துள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் இவர்களது பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான பிரத்தியேக வைத்தியசாலையொன்றும் புல்மோட்டையில் அமைக்கப்பட்டும் வருகின்றது. ஏலவே பெருமளவிலான அத்தியாவசியப் பொருட்களை இந்திய அரசு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. ஆனால் வன்னிக்குள் சென்று இந்தியப் படை மக்களை மீட்டெடுக்கும் நடவடிக்கையைத் தனித்து மேற்கொள்ள முடியாமல் இருப்பதற்குப் புலிகள் தொடர்பான எதிர் நிலைப்பாட்டை இந்தியா கொண்டுள்ளதே காரணமாகும்.

— பிரசாத் —

அமெரிக்கா தனது படைகளை அனுப்பி வன்னிக்குள் சிக்கியுள்ள மக்களை மீட்க நடவடிக்கை எடுக்குமானால் உலகளவில் இந்த விடயம் முக்கியத்துவம் பெறும். ஒபாமா நிர்வாகத்தின் முதல் இராணுவ நடவடிக்கையாக இது அமையுமென சிலர் வாதிடுகின்றனர். இன்னும் சிலர் இதுவொரு மனிதாபிமான நடவடிக்கை என்கின்றனர். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் காலத்திலேயும் அமெரிக்கா சோமாலியாவில் இப்படியானதோர் நடவடிக்கையில் இறங்கிப் பெரும் நெருக்கடியைச் சந்தித்திருந்தமையும் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.



# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

பகுதி -73

## நான்காம் பாகம்

**கட்டியவனுக்கு** ஒரு வீடு; கட்டாதவனுக்குப் பல வீடு.

வாங்கிய வீட்டை விற்க நேர்ந்தால் உயிர் போகும்; வாடகை வீட்டை மாற்ற நேர்ந்தால் கவலை ஏது?

என் அநுபவங்களிலேயே உச்சக்கட்ட அநுபவம், இந்தக் கடன்தான்.

பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கி, அதற்கு வட்டியாக முப்பதாயிரம் கட்டியிருக்கிறேன்.

என் பொருட்டுக் கையெழுத்துப் போடும் உரிமையை ஒருவனிடம் கொடுத்துவிட்டு, அவன் வாங்கிய கடனுக்கெல்லாம் நான் பாத்தியப்பட்டிருக்கிறேன்.

கொஞ்சம் கொஞ்சமாகக் கடனை அடைப்பது என்று முடிவு கட்டி, அடைக்கத் தொடங்கி இரட்டிப்புப் பணம் கொடுத்திருக்கிறேன்.

காஞ்சிப் பெரியவர்கள் ஒன்று சொன்னார்கள்.

''கடனைத் திருப்பிக் கொடுக்கும் போது, கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்தால், அது ஆயுட்காலத்திற்கு வரும்.

முடிந்தவரை மொத்தமாகக் கொடுத்துப் பத்திரத்தைத் திருப்பி வாங்கிவிடு! என்றார்கள்.

அதே நேரத்தில் நான் ஒருமுறை கூறியிருக்கிறேன். ''யாரோடும் கூட்டுச் சேர்ந்து தொழில் நடத்தாதே; அப்படி நடத்தினால் கையெழுத்துப் போடும் உரிமையை அவனுக்குத் தராதே'' என்று

வாங்கிய கடனுக்கு அழலாம்; வாங்காத கடனுக்குமா அழ வேண்டும்?

என் தாயார் அடிக்கடி சொல்லுவார்.''கடனில்லாக் கஞ்சி கால் வயிறு போதும்!'' என்று.

துயரங்களிலெல்லாம் மிகப்பெரிய துயரம், கடன்படுவது. அதிலே பணம் மட்டுமா போகிறது? மானமும் போகிறது; உயிரும் போகிறது.

அதனால்தான் மரண வேதனையால் துடித்த இராவணன் நெஞ்சத்தை ''கடன் கொண்டார் நெஞ்சம்'' என்றான் ஒரு கவிஞன்.

**விடங்கொண்ட மீனைப் போலும்**
**வெந்தழல் மெழுகு போலும்**
**படங்கொண்ட பாந்தள் வாயிற்**
**பற்றிய தேரைப் போலும்**
**திடங்கொண்ட ராம பாணம்**
**செருக்களத் துற்ற போது**
**கடன்கொண்டார் நெஞ்சம் போல**
**கலங்கினான் இலங்கை**
**வேந்தன்!**

கூடுமானவரைக் கடன் என்னும் சிக்கல் இல்லாமலேயே வாழ்வை நடத்தப் பார்ப்பது மரியாதை.

வாங்கித்தான் தீர வேண்டும் என்றால், பத்துப் பேர் வலியவந்து, 'நான் தருகிறேன்' தருகிறேன் என்று சொல்லும் படி நாணயத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

ஒரு ரூபாயை நாலு ரூபாயாக்கும் தொழில் திறமை உனக்கு இருந்தால், கடன் வாங்கு.

அந்த ஒரு ரூபாய் இருபத்தைந்து காசாக ஆகிவிடும் என்றால், அந்த இருபத்தைந்து காசை முட்டை தூக்கியாவது சம்பாதி.

எங்கள் செட்டிமார்கள் வட்டித் தொழிலை, 'தாயைக் கொல்லாத' தொழில் என்பார்கள்.

அதாவது அடகு பிடிக்கும் தொழிலில் முலதனத்தை யாரும் இழப்பதில்லை. முலதனம் தாய்; வட்டி குழந்தை. குழந்தைகள் குறைந்தாலும் தாய் சாவதில்லை.

அது தாயைக் கொல்வதில்லையே தவிர, கடன் பட்டவனைக் கொன்று விடுகிறது.

ஏழாவது திகதி சம்பளம் வந்ததும் மீட்டுக் கொள்ள முடியும் என்றால், முதல் மாதம், இருபதாம் திகதி அடகு வைப்பதில் தவறில்லை.

வட்டி கட்ட முடியாத நிலை வந்தால், நகையை விற்று விடுவது இலாபகரமானது. இல்லையேல் ஆயிரம் ரூபாய் நகை ஐந்நூறு ரூபாய்க்கு ஏலம் போய்விடும்.

கடன் பட்டவன் குடும்பம் என்னாகும் என்பதற்கு இந்துப் புராணங்களிலே காந்தியைக் கவர்ந்த கதை ஒன்று உண்டல்லவா, அதுதான் அரிச்சந்திரன் கதை.

பணத்தின் வலிய சக்தி அங்கு சுடுகாடு வரை வருகிறதல்லவா?

சந்திரமதியின் தாலி மட்டும் மற்றவர்களின் கண்ணுக்குத் தெரிந்திருக்குமானால், அதையும் 'ஜப்தி' செய்திருப்பார்கள் அல்லவா?

அடகு வைத்துச் சூதாடி, கடன் பட்டுக் காடு சென்ற பாண்டவர் கதை காலங்காலமாக வரும் கதையல்லவா?

ஒருவன் அடகு வைக்கத் தொடங்கி விட்டால், அது எதுவரை போகும்?

மனைவியையே ஈடுகட்டும் வரை போகும் என்பதற்கு, 'பாரத'த்தை விடவா வேறு உதாரணம் வேண்டும்?

'கடன்' என்ற வார்த்தைக்கு 'கடமை' என்றொரு பொருள் உண்டு.

கடமையை ஒழுங்காகச் செய்து வரவுக்குள் வாழத் தொடங்கினால், ஓரளவுக்குக் கடன் சுமையில் இருந்து தப்பலாம்.

''ஆன முதலில் அதிகம் செலவானால் மானமிழந்து மதிகெட்டுப் போன திசை.

எல்லோர்க்கும் கள்ளனாய்
எழுபிறப்பும் தீயனாய்
நல்லோர்க்கும் பொல்லனாம்
நாடு!''

ஜமீன்தாரி முறை பரவலாக இருந்த காலத்தில் விவசாயிகள், தாங்கள் பட்ட கடனுக்குத் தங்கள் குழந்தைகளைக் கால காலங்களுக்கு அடிமையாக்க வேண்டி வந்ததல்லவா?

கொத்தடிமை முறை அதில் ஏற்பட்டதுதானே?

அண்மையில் கள்ளக்குறிஞ்சித் தாலுக்காவில் ஒரு குறிப்பிட்ட மலை ஜாதியினர் முழுவதும், இன்றுவரை கொத்தடிமைகளாக இருந்தது கண்டு பிடிக்கப்பட்டதல்லவா?

ஆகவே கடன் வாங்கும் போது அலட்சியப் புத்தியோடு வாங்காதே!

அது கழுத்தில் வந்து அமரப்போகும் சனீஸ்வரன் என்ற பயத்தோடு வாங்கு.


சினிமாத் தொழிலில் பெரும்பாலானோர்- படத்தயாரிப்பாளர்கள்- தங்கள் இலாபம் முழுவதையும் வட்டியாகக் கொடுக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில், தங்கள் வீட்டையும் எழுதிக் கொடுத்துத்தான் படத்தை வெளியிடுகிறார்கள்.

திடீரெனப் பணக்காரன் ஆக வேண்டும் என்று நீ விரும்பினால், நீ செய்யும் தொழிலில் கடன்காரனாகவும் வசதியுண்டு.

நாளைய பொழுது கேள்விக் குறியாகாமல் இருக்கக் கடன் வாங்காதே!

(தொடர்ந்துவரும்)

# லாகூர் தாக்குதல்!



**பாகிஸ்தான்** அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடிக் கொண்டிருந்த இலங்கைக் கிரிக்கெட் அணியினருக்கு கடந்த 03 ஆம் திகதியும் அவர்கள் தங்கியிருந்த றோயல் சர்வதேச நட்சத்திர விடுதியில் வழமையான ஒரு நாளாகவே பொழுது மலர்ந்தது. வீரர்களுடைய சிந்தனை எல்லாம், துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமான கடாபி மைதானத்தில் 19 பாகிஸ்தானிய வீரர்களின் விக்கெட்டுக்களை எவ்வாறு வீழ்த்துவது? என்பதாகவே அமைந்திருந்தது. ஏனெனில் இத்தொடரை வெற்றிகரமாக முடித்து தலைமைப் பொறுப்பில் இருந்து விடைபெற்றுச் செல்லும் அணித்தலைவர் மஹேலவுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பதில் அனைவரும் உறுதியுடன் காணப்பட்டனர்.

காலையில் அன்றைய உடல் பரிசோதனையை முடித்துக்கொண்ட வீரர்கள் 8 மணியளவில் விடுதியின் உணவகத்திற்குச் சென்று காலை உணவையும் தேநீரையும் அருந்திவிட்டு, இவர்களுக்காக விடுதி வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு பஸ் வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டனர். அனைவரும் பஸ்ஸில் ஏறி விட்டதை உறுதிப்படுத்திக் கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகள் பஸ் சாரதி முஹமட் கலீலுக்கு பஸ் பயணிப்பதற்கான அனுமதியை வழங்கினார்கள். 8.30 மணியளவில் கடாபி மைதானத்தை நோக்கிப் புறப்பட்டது பஸ்வண்டி. வீரர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக ஆயுதம் தாங்கிய பொலிஸாருடன் ஓர் வாகனம் முன்னால் செல்ல அதனைத் தொடர்ந்து சென்றது வீரர்களின் பஸ்வண்டி. அதைத் தொடர்ந்து சென்ற இன்னுமொரு வாகனத்தில் போட்டி நடுவர்கள், மத்தியஸ்தர், உட்பட அதிகாரிகள் பயணம் செய்தனர்.



விடுதியில் இருந்து சென்ற வாகனத்தொடரணியானது மைதானத்தை நோக்கிச் செல்வதற்கு முன்னர் லாகூர் நகரின் கடைத்தொகுதி அமைந்துள்ள பகுதியில் அமைந்திருக்கும் லிபேர்ட்டி சுற்றுவட்டம் எனப்படும் இடத்தில் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. இவ்விடத்தில் வாகனத்தைத் திருப்புவதற்காக வாகனத் தொடரணியின் வேகம் குறைக்கப்படுகின்ற போது தாக்குதல் நடத்துவதே துப்பாக்கிதாரிகளின் திட்டமாக இருந்தது. திட்டத்தின் படியே சுற்றுவட்டத்தில் பஸ் வண்டி வேகத்தைக் குறைத்து திருப்ப முற்பட்ட போது மறைவிடங்களில் இருந்து வெளிப்பட்ட தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினர் மீது கடும் தாக்குதலைத் தொடுத்த அதேவேளை இலங்கை வீரர்களின் பஸ்ஸை நோக்கியும் வீதியின் இரு மருங்கிலும் இருந்தும் தாக்குதல் நடாத்தினர்.

ஆரம்பத்தில் பட்டாசு வெடிக்க வைக்கப்படுவதாக அனைவரும் எண்ணினர். பட்டாசுச் சத்தம் என்ற எண்ணத்தில் வெளியே என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காகத் தன் இருக்கையை விட்டு எழுந்த இலங்கை வீரர் தரங்க பரணவிதாரணவின் நெஞ்சுப்பகுதியை ஓர் துப்பாக்கிக் குண்டு பதம் பார்த்தது. நெஞ்சில் இருந்து இரத்தம் குபுக் எனப் பாயச் சுருண்டு விழுந்தார் தரங்க பரணவிதாரண. இந்தக் காட்சியை நேரில் பார்த்த முரளி கூறும் போது ''ஆரம்பத்தில் தரங்க இறந்து விட்டதாகவே'' தான் எண்ணியதாக கூறியிருந்தார். தரங்க காயமுற்று வீழ்ந்த அதே வேளை பஸ் நோக்கி சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுவதை ஊகித்துக் கொண்ட இலங்கை வீரர்கள் வீழ்ந்து படு, வீழ்ந்து படு, என அலறியவாறு ஆசனங்களுக்கு கீழே பதுங்கிக் கொண்டனர். வீரர்களின் இந்த சமயோசிதமான செயற்பாடே நடைபெறவிருந்த பாரிய விபரீதத்தினைக் குறைத்திருந்தது. அனைவரும் அதிர்ச்சியில் செய்வதறியாது அலறியபடியிருக்க சுதாகரித்துக்கொண்ட முரளி, வாஸ் ஆகியோர் மைதானத்தை நோக்கி செல்லும்படி சாரதிக்கு உத்தரவிட்டனர். அதைத் தொடர்ந்து வேகமாகப் போங்கள் என்று டில்ஷானும் கதற ஆரம்பித்தார். பஸ் வண்டியின் முன்னால் வந்த தீவிரவாதிகளினால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுவதையும், பஸ்ஸை நோக்கி ஏவப்பட்ட கைக்குண்டு . குறிதவறி மின்கம்பத்தில் பட்டு வெடித்ததையும் கண்டதனால் திகைத்துப்போய் நின்ற சாரதி, வீரர்களின் அலறல் தொனியில் வந்த உத்தரவையடுத்து சுதாகரித்துக்கொண்டு மின்னல் வேகத்தில் செயற்பட ஆரம்பித்தார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி முன்னால் நின்ற பாதுகாப்புப் படையினரின் வாகனத்தை விலத்திக்கொண்டு துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு முகங்கொடுத்தவாறே வேகமாகப் பஸ் வண்டியை கடாபி மைதானத்தை நோக்கி ஓட்டிச் சென்றார்.

பஸ்சாரதியாகச் செயற்பட்ட முஹமட் கலீல் என்பவர் அத்தருணத்தில் தன்னுடைய உயிரைக் காப்பாற்ற முயற்சித்திருப்பாரேயானால் பஸ் வண்டியைவிட்டு வெளியே இறங்கி ஓடியிருக்கவோ அல்லது தானும் தலை வெளியே தெரியாதவாறு வீழ்ந்து படுத்திருக்கவோ முடியும் அல்லது தீவிரவாதிகளிடமே தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு தப்பித்திருக்க முடியும். ஏனெனில் இலங்கை வீரர்களே தீவிரவாதிகளின் இலக்காக இருந்தனர். ஆனால் அவ்வாறு எதுவும் செய்யாது கலீல் செயற்பட்டமையினாலேயே இலங்கையின் விலை மதிப்பற்ற சொத்துக்களான வீரர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர். தனது நாட்டின் விருந்தாளிகளைக் காப்பாற்றுவது தன்னுடைய கடமை என்று கருதியமையினாலேயே, முஹமட் கலீல் என்கின்ற சாரதி இன்று இலங்கை, பாகிஸ்தான் மக்களின் நாயகனாகக் கருதப்படுகின்றார்.

மைதானத்தின் உட்பகுதிக்கு பஸ் கொண்டு சென்று நிறுத்தப்பட்ட பின்னரே நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்ட வீரர்கள் மயங்கிய நிலையில் இருந்த தரங்க பரணவிதாரணவை வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையில் இறங்கிய போது, ஆசனத்திற்கு அடியில் மறைந்திருந்த திலான் சமரவீர தனது கால் ஒன்று விறைத்துப் போய் இருப்பதாக அருகில் இருந்த டில்கார பெர்னாண்டோவிடம் தெரிவிக்க, அவரின் கால்களைப் பார்த்த பொழுதே இடது கால் தொடைப்பகுதி கடும் காயத்திற்கு உள்ளாகி இருந்தது அறியப்பட்டது. அதே போன்று அஜந்த மெண்டிஸ் தலையிலும் ஓர் துப்பாக்கிக் குண்டு ஏறியிருந்தது. அதே வேளை வாஸ், சங்கக்கார, மஹேல, ஆகியோருக்குக்கும் சிறிது வெட்டுக்காயங்கள் ஏற்பட்டிருப்பது அவர்களால் உணரப்பட்டது.

இதற்கிடையே, துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே பஸ் வண்டியினுள் பதுங்கி இருந்தவாறு, கொழும்பில் இருந்த தனது சகோதரருக்குத் தொடர்பினை ஏற்படுத்தி விபரத்தினை முரளி தெரிவித்தார். உடனடியாக அவரது சகோதரர் அழைப்பை துலிப்மெண்டிஸுடன் தொடர்புபடுத்தி விபரத்தினைத் தெரிவித்தார். உடனடியாகச் செயற்பட்ட துலிப் மெண்டிஸ் மேலதிக நடவடிக்கைகளுக்காக முகாமையாளர் பிரெண்டன் குறுப்புவுடன் தொடர்பை ஏற்படுத்திய போது, வீழ்ந்து படு, வீழ்ந்துபடு என்ற சத்தம் மட்டுமே துலிப் மெண்டிஸால் கேட்க முடிந்தது. அத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. இதனால் கலவரமடைந்த துலிப்மெண்டிஸ் அரச உயர்மட்டத்திற்கு அறிவிக்க உடனடியாகத் தகவல் பாகிஸ்தானில் உள்ள இலங்கைத் தூதராலயத்திற்குச் சென்றது.

அன்றைய தினமே தூதராலயத்திற்குப் புதிதாகப் பொறுப்பேற்றுச் சென்றிருந்த ஜேயலத் வீரக்கொடி அவர்கள் பாகிஸ்தான் விமானப் படையினரிடம் உலங்கு வானூர்தியைப் பெற்று அதன் மூலம் கடாபி மைதானத்திற்கு நேரடியாகச் சென்று, வீரர்களை நேரடியாகச் சந்தித்ததோடு அவர்களின் மருத்துவ வசதிகளையும், தொடர்ந்து அவர்களின் பாதுகாப்பு, நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் உட்பட அனைத்தையும் நேரடியாகக் கண்காணித்தார்.



எப்படியோ எல்லாம் இறைவன் செயல் என்று கூறுகின்ற முஹமட் கலீல் தன்னலம் கருதாது செயற்பட்டதனால், இலங்கை வீரர்கள் காப்பாற்றப்பட்டுவிட்டனர். எனினும் உயர்ந்த குணாம்சங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் சர்வதேச தூதர்களான விளையாட்டு வீரர்கள் மீதான இந்தக் காட்டுமிராண்டித் தனத்தை யார் செய்திருந்தாலும், அவர்களின் நோக்கம் எதுவாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதே ஒட்டு மொத்த உலக மக்களின் கருத்தாகும்.

## மூன்றாவது கண்

# மத்திய கிழக்கில் இலங்கைப் பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள்!

இலங்கையைச் சேர்ந்த ஓர் ஆண் மீதும் ஒரு பெண் மீதும் சவூதி அரேபியாவிலுள்ள ஜித்தா நீதிமன்றம் கடந்த வாரம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. இருவருமே வெளிநாட்டவர்களைத் திருமணம் புரிந்தவர்கள். தகாத பாலியல் தொடர்புகளை வைத்திருந்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரிலேயே மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. பெண் நீதிபதியே இத்தண்டனையை வழங்கியுள்ளார். அடுத்த நீதிமன்ற விசாரணையின்போது இருவர் தரப்பு நியாயங்களைக் கேட்ட பின்னர் தண்டனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுமென்றும் நீதிபதி தெரிவித்துள்ளார். அன்றைய தினம் தண்டனை நிறைவேற்றப்படும் திகதி குறித்து அறிவிக்கப்படுமென்றும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியா போன்ற நாடுகளில் சட்டங்கள் கடுமையாக அமுற்படுத்தப்படுவதுண்டு. களவு, தவறான பாலியல் உறவுகள், மதுப்பாவனை போன்ற குற்றங்களுக்கு சிரச்சேதம் தண்டனையாக வழங்கப்படுவதுண்டு. லெபனான், குவைத் போன்ற நாடுகளில் ஓரளவுக்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது என்றும் சொல்லாம். கடந்த வருடம் சவூதி அரேபியாவில் ஆகக் குறைந்தது 103 பேருக்குச் சிரச் சேதத் தண்டனை வழங்கப்பட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியிருந்தது. மேற்கு நாடுகளிலும், ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளிலும் கலாசார, பண்பாட்டு விழுமியங்களும் பழக்க வழக்கங்களும் வித்தியாசமானவை, இதனால் தண்டனை முறைகளிலும் வித்தியாசங்கள் நிறையவே உள்ளன.

தற்போது சவூதி அரேபியாவில் நான்கரை இலட்சம் இலங்கையர்கள் பணி புரிகிறார்கள். இவர்களில் எண்பது சதவீதமானவர்கள் பெண்களென்று இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த வருடம் வீட்டு எஜமானியான மூதாட்டியொருத்தியைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரிலும் உடைமைகளைத் திருடிய குற்றச்சாட்டின் பேரிலும் இலங்கைப் பெண்ணொருத்திக்கும் அவளது கணவரான இந்தியப் பிரஜை ஒருவருக்கும் சவூதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கைக்கு அந்நியச் செலவாணியை ஈட்டித் தரும் மூன்று முக்கிய துறைகளில் பெண்களே அதிகம் தொழில் புரிகிறார்கள். ஆடை ஏற்றுமதி மூலம் 310 கோடி அமெரிக்க டொலர்கள் கிடைத்து வந்தன. உலகில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு இலங்கையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதால் பல ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. இரண்டாவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் 170 கோடி அமெரிக்க டொலர்கள் கிடைக்கின்றன. சுமார் பதினைந்து இலட்சம் இலங்கையர்கள் வெளிநாடுகளில் வேலை செய்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர்கள் பெண்களாவார்கள். மூன்றாவதாகத் தேயிலைத் தொழில் துறை 120 கோடி அமெரிக்க டொலர்களை ஈட்டிக் கொடுக்கிறது. இங்கும் பெண்கள் தான் கணிசமானளவு தொழில் புரிகிறார்கள்.

பெரும்பாலும் பணிப்பெண்களே வெளிநாடுகளுக்கு வேலை தேடி செல்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பொருளாதார, கல்வியறிவு அற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றர்கள். தமது குடும்ப வறுமையைப் போக்குவதற்காகவே இவர்கள் செல்கிறார்கள். பின் தங்கிய பகுதிகளைச் சேர்ந்த பெண்களைக் கொழும்புக்கு அழைத்துவரும் உபமுகவர்களில் பலர், பல்வேறு வக்கிரங்களுக்கு அந்தப் பெண்களை உள்ளாக்குகிறார்கள். இவர்கள் லொட்ஜ்கள் என்றழைக்கப்படும் தங்குவிடுதிகளில், மோசமான சூழ்நிலைகளில் வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். கடவுச் சீட்டுப் பெறுவது, விமான டிக்கட் எடுப்பது, மருத்துவப் பரிசோதனை என்று பல்வேறு தேவைகளுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் முகவர்களை நம்பித் தன்னந்தனியாகவே வருவதால் பல்வேறு தொந்தரவுகளை எதிர்கொள்ள வேண்டியேற்படுகிறது. பாலியல் வக்கிரங்களுக்கும் உள்ளாக வேண்டியேற்படுகிறது.

சகல கஷ்டங்களையும் தாண்டி வெளிநாடுகளுக்குச் சென்ற பின்னரும் பெண்கள் சந்திக்கும் கொடூரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. பாலியல் வக்கிரம் கொண்ட ஆண்களின் தேவைகளுக்கு ஈடுகொடுக்க வேண்டியிருக்கிறது. வெறும் பொருளாதாரச் சரண்டல் மட்டுமல்ல உடல் ரீதியான சுரண்டல்களையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. கடந்த வருடம் மட்டும் வெளிநாடுகளில் பத்துக்கு மேற்பட்ட இலங்கைப் பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மாடியிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொள்வது, கழுத்தில் சுருக்கிடுவது, தீ மூட்டி எரிவது இப்படிப் பல சோக முடிவுகளுக்குப் பெண்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இன்னும் சில பெண்கள் வாயும் வயிறுமாகக் கர்ப்பிணிக் கோலத்தில் இலங்கை வந்த சம்பவங்களும் இருக்கின்றன.



உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மனிதர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு அப்பால், இரண்டாம் பட்சமானவையாகப் பாலியல் தேவைகளும் இருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் எமது நாட்டில் அதற்கு வரம்புகளும் சமூகக் கட்டுப்பாடுகளும் இருக்கின்றன. மேலை நாடுகளில் பிள்ளைகளோடு வாழும் 'ஒற்றைத் தாய்மார்கள்' இருக்கிறார்கள். இவர்களை அந்தச் சமூகம் அங்கீகரிக்கிறது. அப்படியான ஓர் அங்கீகாரம் எமக்கும் தேவையென்று வாதிடுவது தவறானது. வெளிநாடுகளுக்குப் பணிப்பெண்களாகச் செல்லும் சில பெண்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தவறிப் போவதும் உண்டு. இவர்கள் நாடு திரும்பும் போது சமூகத்தினால் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்படுகிறார்கள்.

இந்தியாவிலிருந்து முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்களே பணிப்பெண்களாகச் செல்ல முடியும். அத்துடன் அவர்களுக்கு உத்தரவாதங்களும் வழங்கப்பட வேண்டும். சம்பளம் தொடர்பான சட்டதிட்டங்களும் இருக்கின்றன. இலங்கைப் பணிப்பெண்களுக்கும் இத்தகைய உத்தரவாதங்களைப் பெற்றுக் கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

---




# மேய்ச்சல் வெளி

**இந்த** நாட்டில் மக்கள் அழிவை நிறுத்துவதற்கு அவ்வப்போது போர்நிறுத்தக் கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருந்தால் போதும் என்பதுடன் மனிதாபிமானிகள் எல்லோரும் திருப்தியடைந்து விடுகிறார்கள். மீண்டும் மீண்டும் அழியும் மக்களுக்காக அனுதாபப்பட்டுக் கொள்ளும் ''முற்போக்கு சுகத்''தைத் தவிர, அழிவுகள் இல்லாத நிம்மதியான வாழ்வுக்குப் போரை முழுமையாக இல்லாமல் என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்வது தங்கள் பொறுப்பல்ல என்று அதை முற்றிலும் புலிகளிடம் விட்டுவிடுகிறார்கள்.

பிரச்சினை தீர்வதற்குத் தீர்வு வைக்கப்பட வேண்டும். தீர்வு வைக்க வேண்டும் என்றால் அதற்குத் தடையாக உள்ள எல்லாப் பக்கங்கள் பற்றியும் முழுமையாகப் பேசுவதில்லை. தங்கள் இயலாமையை மறைப்பதற்கு, ''போராட்டக் குழு எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளட்டும் அரசு சரியாக நடக்க வேண்டும் என்பதைப் பற்றி மட்டுமே நாம் பேசுவோம்'' என்ற சால்ஜாப்பைச் சொல்வதுடன் அவர்களது மக்களபிமானம் நிறைவு பெற்றுவிடுகிறது.

போரையும் அழிவுகளையும் நிறுத்துவதற்குப் புலிகள் பெரும் தடையாக இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும்வரை இங்கு அழிவுகள் ஓயப் போவதில்லை. தமிழ்மக்கள் அழிவுக்கான தூண்டுதல்களைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பதே அவர்களது போராட்ட முறையாக இருக்கிறது. அதற்காக, தனிநாட்டுக்குக் குறைவான எந்தத் தீர்வையும் குழப்பும் உபாயங்களைக் கைக்கொள்வதே அவர்கள் வழிமுறையாக இருந்து வருகிறது.

இந்த உண்மையை எதிர்கொள்ளாமல் மக்கள் அழிவுக்காகக் கண்ணீர் சிந்தும் மேம்போக்கு மனிதாபிமானத்தையே அறிஞர்கள் புத்திஜீவிகளிடமெல்லாம் காணமுடிகிறது. புலிகளின் கொடூரம் பற்றியும், அவர்களை மாற்ற முடியவில்லை என்பதையும், யாருக்கும் அவர்களுடன் அவர்களது அநியாயங்கள், பிழைகள் பற்றி உரையாட முடியவில்லை என்பதையும் இவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். வெறுமனே அரசையும் அதன் இராணுவத்தையும் கண்டித்து இந்த அழிவுகளை நிறுத்திவிட முடியாது என்ற உண்மை கண்முன்னே தெரியும்போது, நம் தரப்புத் தவறைச் சரிப்படுத்திக்கொள்ள முடியாமல் நம்மைத் தடுப்பது எது?

மனிதாபிமானமும் மக்கள் அழிவு பற்றிய கவலையும் உள்ளவர்களெல்லாம் புலிகளிடம் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்ட முடியாத உயிரச்சுறுத்தல் நிலையை ஏன் மறந்துவிடுகிறார்கள்? இந்த சுயதணிக்கையுடனேயே மனிதாபிமானத்தையும் வெளிப்படுத்த முடிகிறது. இது எதனால் என்பதைப் புரிந்து கொள்ளாவிட்டால் நம் அவல நிலையை எப்படி நிறுத்துவது? அழிவுகளை எப்படி முடிவுக்குக் கொண்டுவருவது?

ஆயுதமற்ற போராட்ட முறைக்கு இங்கு வழியேற்படுத்துவதே இங்கு தொடரும் அழிவுகளை நிறுத்துவதற்கான ஒரே வழி. புலிகள் இங்கு யுத்தமற்ற சூழலை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். புலிகள் என்ற வன்முறை நிறுவனம் இருக்கும்வரை நமது உரிமைப் போராட்டம் வன்முறைப் போர்ச் சுழலுக்குள்ளேயே மக்களை இழுத்து அழிக்கும். ஏனைய சாத்தியங்கள் இருப்பதாகவே நம்ப விடாது.

விமானப்படை, தற்கொலைப்படை என அயல் நாடுகளையும் ஏனைய உலக நாடுகளையும் கூட அச்சத்திற்குள்ளாக்கும் புலிகளின் கொடூர பலம் அழிவதொன்றே இன்றைய நிலையில் நம் மக்களின் உரிமைப் போராட்டம் சரியான வடிவமெடுக்க உதவும். சம உரிமைகளையும் விடுதலையையும் பெற்றுக் கொள்வதற்கான வேறுவகை ஆன்ம பலத்தை நம் சமூகம் உருவாக்கிக் கொள்ளும். அதற்குத் தடையாக இருப்பது இன்றுள்ள ஆயுதங்களின் மீதான அதீத நம்பிக்கையே. இந்த நம்பிக்கையை வழிபடுவது, உயிர்ப்பலிகளையே மேலும் மேலும் தந்துகொண்டிருப்பதாக அமையும்.

தனிநாட்டுக்குக் குறைவான தீர்வுகளைப் பரிசீலிக்கத் தயாராயில்லாததையே பலமுறையும் காண்பித்துவிட்ட புலிகள், எதையும் குழப்பும் பலத்துடன் எப்போதும் ஆயுதங்களோடு தாம் இருக்க வேண்டுமென்பதையே தொடர்ந்த போரின் மூலம் வெளிப்படுத்தி வருகிறார்கள். தனிநாட்டுக்குப் பதிலாகத் தீர்வொன்றை எடுத்து உயிரழிவையும், சமூக அழிவையும் தடுக்கலாமென யோசிக்க முனைந்த பலரும் புலிகளால் திட்டமிட்டு அழிக்கப்பட்டார்கள். இப்போதும் யுத்தநிறுத்த வாய்ப்புக் கிடைத்தால் யுத்தத்திற்கு எதிரானவர்களைத் தேடி அழிப்பதே அவர்களது முதல் வேலையாக இருக்கும் என்பதை அவர்களது போராட்ட வரலாறு தெரிந்த யார்தான் மறுக்க முடியும்?

ஆண்ட பரம்பரைக் கனவுக்காகப் புலிகளின் வன்முறையையும் உயிரழிப்புப் போராட்டத்தையும் நியாயப்படுத்திவரும் புத்திஜீவிகள், புலிகளது எதேச்சதிகார இராஜ்ஜியத்தில் குடிமகனாக வாழும் சகிப்புத்தன்மை இருக்கிறதா என்று தங்களைக் கேட்டுப்பார்க்க வேண்டும். அது காட்டுத் தர்பார் என்பதும், அவர்களிடம் தாங்கள் சரி என்று நினைக்கும் எந்தச் சமாசாரத்தையும் பேச முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரிகிறது. அவர்களது சிறு தவறைக் கண்டித்தாலும் உயிரை இழந்தாக வேண்டும்.

இந்நிலையில், வெளிநாடொன்றின் குடிமகனாக இருப்பதுதான் புலிகளின் தனிநாட்டுக்காகப் பேசிக்கொண்டிருக்கப் பாதுகாப்பான வழி. இலங்கை அரசின் மீதான கோபத்திற்குப் பழிவாங்கும் ஒருவகைத் திருப்திக்காகவே இவர்களுக்குப் புலிகளின் குரூரம் தேவைப்படுகிறது. இந்தப் பக்கத்தை மௌனமாக்கி வைத்துக்கொண்டு பிரச்சினைத் தீர்வுக்குச் சொல்லும் வழிகள் என்ன மாற்றத்தைக் கொண்டுவரும்?

புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் இலங்கை அரசு தமிழ்மக்களை அழித்துமுடித்துவிடும் என்கிற பிரசாரத்தை உண்மையிலேயே இவர்கள் நம்புகிறார்களா? சிங்களவர்கள் காட்டுமிராண்டிகள், இரத்தக் காட்டேரிகள் என்கிற ரீதியில் உலகெங்கும் பரப்பப்படுகிற தமிழ்த் துடிதுடிப்பு, புலிகளின் ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்துவதற்கும் மேலும் தொடர்வதற்குமானது என்று இவர்களுக்குப் புரியவில்லையா? கசப்புணர்வுகளையே மேலும் மேலும் தூபம் போட்டு வளர்த்துவிட்டு, இந்தத் தீவில் அமைதியையும் நிம்மதியையும் எப்படி இந்த நூற்றாண்டிலாவது கொண்டுவருவது?

தமிழீழம் என்ற கனவுக்காகவே இது நாள்வரையான பலிகள் எல்லாவற்றையும் தமிழுலகம் செரித்து முன்னேறிவருவது உண்மையில்லையா? போராட்டத்தை நிறுத்திவிட்டால் ஈழத்தமிழினம் அழிந்துவிடும் என்பதுதான் உண்மையா? இப்படியே பொன்னுலகக் கனவைச் சொல்லியும், தேசிய, இன, மொழி, மத ஆவேசங்களாலும் உலகெங்கும் மடிந்த கோடான கோடிப் பேர் பற்றியெல்லாம் நன்கறிந்த பின்னுமா, ஆயுதவெறிப் போராட்டத்தில் நியாயமுள்ளது என்று சொல்லிக் கொண்டிருப்பது?

**— சுல்தான் —**

மனதுக்கு நிம்மதி


# மனச் சித்திரம்

**இப்போது**, உங்களை வெற்றிக்கு அழைத்துச் செல்லும் மனோதத்துவ ஏணியில் பெரியதொரு படியில் அடியெடுத்து வைக்கப்போகிறீர்கள்!

கடந்த சில அத்தியாயங்களாக இந்த வெற்றிக் கட்டுரையின் பாடங்கள் சுயமுன்னேற்ற மனோதத்துவத்தில் பல பயனுள்ள உத்திகளைக் கற்பித்து வந்துள்ளன. நீங்கள் அவற்றில் நல்ல பயிற்சி பெற்றிருக்கும் பட்சத்தில் - அதாவது மந்திர சுலோகங்களை நன்கு கற்று எப்போதெல்லாம் வேறு விஷயங்களில் அறிவு ஈடுபடாமல் இருக்கிறதோ அப்போதெல்லாம், ஒவ்வொரு விநாடியும் நீங்கள் தேர்ந்தெடுத்த மந்திர சுலோகத்தை மனம் தானாகவே ஜெபிக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருக்குமேயானால் - சுயமுன்னேற்ற மனோதத்துவத்தின் முதுகலைப் பாடம் கற்பதற்கு நீங்கள் தயாராகி விட்டீர்கள். மந்திர சுலோகத்தின் சொற்களைப் படங்களாக - மனோசித்திரங்களாக - மாற்றுகின்ற தகுதி உங்களுக்கு வந்துவிட்டது.

மனோதத்துவ உத்திகளில் இந்த முறையானது மிகச் சக்தி வாய்ந்தது. மிகுந்த பலன்தருவது.

உங்களது மந்திர சுலோகத்துக்குள்ள சொற்களை - அவற்றில் அடங்கியுள்ள எண்ணங்களை - நீங்கள் என்ன அடைய விரும்புகிறீர்களோ அதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு மனோசித்திரமாக உங்கள் உள்மனத்தில் நிரந்தரமாகப் பதிவு செய்து கொள்ளுங்கள். அதைப் பெற்றுத்தர உங்கள் உள்மனம் உதவி செய்யும்.



போன நூற்றாண்டிலேயே, எண்ணங்களை நிஜப்பொருள்களாக மாற்றுகின்ற சக்தி படங்களுக்கு உண்டு என்பதைப் புரிந்து கொண்ட சாமுவேல் கோல்ரிட்ஜ் ''படம் என்பது ஓர் எண்ணத்துக்கும் ஒரு பொருளுக்கும் இடைப்பட்ட ஒன்றாகும்'' என்று எழுதியிருக்கிறார்.

இப்போது, நூற்றைம்பது வருடம் கழித்து நீங்கள், சுயமுன்னேற்ற மனோதத்துவத்தின் முதுகலைப் பயிற்சி மூலம், உங்கள் விருப்பத்தை எண்ணமாக (மந்திர சுலோகமாக) உருமாற்றி, மந்திர சுலோகத்தை ஒரு மனோசித்திரமாகக் கற்பனை செய்து, நிரந்தரமாக உங்கள் உள்மனத்தில் பதிவு செய்து கொள்ளுங்கள். உங்கள் நிஜ வாழ்க்கையில் அது உங்கள் விருப்பத்தை யதார்த்தமாக உருவாக்கித்தரும்.

முந்தின அத்தியாயங்களில் சொல்லித் தரப்பட்டது போல் மந்திர சுலோகத்தை மனத்துக்குள் தொடர்ந்து ஜெபியுங்கள்.

ஆனால் இப்போது மந்திர சுலோகத்துடன் சேர்த்து மனோசித்திரத்தையும் பயன்படுத்த வேண்டும்.

அதாவது உள்மனத்தில் மந்திர சுலோகத்தினால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்பைப் பலப்படுத்தவும் தீவிரப் படுத்தவும் மனோ சித்திரங்களைப் பயன்படுத்துங்கள். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்களோ அதை எவ்வளவுக்கெவ்வளவு அழுத்தமாக உங்கள் உள்மனத்தில் பதிவு செய்திருக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு உறுதியாகவும் வேகமாகவும் அதை அடைவீர்கள்.

உங்களுக்கு என்ன வேண்டும் என்று எழுத்தில் வடிக்கும் போது எந்த அளவுக்குப் பலம் அதிகமாகுமோ அதைவிட, மந்திர சுலோகத்தின் சொற்களுக்கு மனோ சித்திரத்தின் துணை சேரும் போது உள்மனத்தில் பன்மடங்கு அழுத்தத்துடன் பதிவாகும்.

பழைய சீனப் பழமொழி சொல்வது போல, 'ஒரு சித்திரம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.'

உள்மனத்தில் உங்கள் மந்திர சுலோகம் ஏற்படுத்தும் பாதிப்பைப் பலப்படுத்தித் தீவிரமாக்கும் விஷயத்தில் மனோ சித்திரங்களுக்கும் இந்தப் பழமொழி வெகுவாகப் பொருந்தும்.

உதாரணமாக, முந்திய அத்தியாயம் ஒன்றில் கூறப்பட்ட மந்திர சுலோகத்துக்குத் துணையாக என்னென்ன மனோசித்திரங்களைப் பயன்படுத்தலாம் என்பதைப் பார்ப்போம்.

செல்வத்துக்கான மந்திர சுலோகம்:

பண்ண வேண்டும் பத்து இலட்சம்!.......... பண்ண வேண்டும் பத்து இலட்சம்!.........பண்ண வேண்டும் பத்து இலட்சம்!.................. (30 தரம் சொல்லவும்)

மந்திர சுலோகத்தின் தீவிரத்தைக் கூட்டும் பொருட்டு இந்த மனோசித்திரங்களை அதற்குத் துணையாகப் பயன்படுத்தலாம்.

நீங்கள் நிச்சயம் அடையப் போவதாகத் தீவிரமாக நம்புகின்ற பணத்தைக் கொண்டு என்னவெல்லாம் செய்யலாம் என்று நம்புகிறீர்களோ அதை ஒரு படமாக மனத்துக்குள் கற்பனை செய்யுங்கள். பத்து இலட்சம் உங்கள் கைக்குக் கிடைத்து விட்டதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்களைப் பெரும் செல்வந்தராக மனக் கண்முன் காணுங்கள். சக்தி மிகுந்தவராக......... செல்வாக்கு



உள்ளவராக......... தன்னம்பிக்கை நிறைந்தவராக...... வெற்றிச் செல்வராக உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்!. விலை உயர்ந்த ஆடைகள் அணிந்து கொண்டு...... பெரிய படகுக் காரில் சவாரி செய்பவராக மனத்துக்குள் சித்திரம் வரையுங்கள்.! பெரிய அழகிய மாளிகை உங்களுடையது....... சொந்தக் கப்பலில் பிரயாணம்........ பல நிறுவனங்களின் உரிமையாளர்......... உங்களுக்குச் சொந்தமான நகைகள், ஷேர்கள், பலவகைச் சொத்துக்கள்...... எல்லாவற்றையும்

விவரமாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்!. இலட்சாதிபதி குறித்த மனோசித்திரத்தை மேலும் அழுத்தமாக வரைந்து கொள்ளுங்கள்!

மந்திர சுலோகத்தில் கவனத்தை ஒருமுகப்படுத்துங்கள் ( முந்தின அத்தியாயங்களில் வர்ணித்தது போல).... உங்கள் வாழ்க்கையில் அது ஏற்படுத்தப் போகும் அதிசயங்களை மனோசித்திரங்களாகத் தீட்டி மந்திர சுலோகத்தைத் தீவிரப்படுத்தி அதற்கு வலுவூட்டுங்கள். ஆர்வத்துடன் கற்பனை செய்யுங்கள்! நுணுக்கமாக ஓவியம் தீட்டுங்கள்! நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதை அடைந்து விட்டது போலவும் மகிழ்ச்சியுடன் அனுபவிப்பது போலவும் மனக் கண்ணால் பார்த்துக் கொள்ளுங்கள். மனக் கண்ணால் நீங்கள் எதைப் பார்க்கிறீர்களோ அதை அடைவீர்கள் என்று உறுதியாக நம்புங்கள். மனக் கண்ணால் திரும்பத் திரும்ப ஒரு முகப்பட்டுப் பார்த்து உள்மனத்தில் பதிவு செய்யுங்கள்.

ஏனெனில் எதை, நீங்கள் அனுபவிப்பதாக நம்பிக்கையுடன் மனக் கண்ணால் பார்க்கிறீர்களோ அதை நீங்கள் அடைவது நிச்சயம்.

தெளிவாகவும் திட்டவட்டமாகவும் மனோ சித்திரங்களைக் கற்பனை செய்வது எப்படி? நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதன் அசல் படத்தைப் பார்த்தீர்களானால் தெளிவாக மனோ சித்திரத்தைக் கற்பனை செய்ய முடியும். உதாரணமாக நீங்கள் விரும்பும் செல்வம் பற்றிய மனோ சித்திரங்களை உங்கள் மனத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். பண்ண வேண்டும் பத்து இலட்சம்!...... பண்ண வேண்டும் பத்து இலட்சம்!...... என்ற மந்திர சுலோகத்தை திரும்பத் திரும்ப ஜெபிப்பதன் மூலம் அந்தப் பணத்தை வரவழைத்துத் தருமாறு உங்கள் உள்மனத்துக்குக் கட்டளையிட வேண்டும். அப்படியானால்-

செல்வச் செழிப்புக்கான புறச் சான்றுகளைச் சித்திரிக்கும் அசல் படங்கள் அடங்கிய நோட்டுப் புத்தகம் ஒன்றைத் தயார் செய்யுங்கள். ஒரு பாஷன் பத்திரிகையை எடுத்துக் கொள்ளுங்கள். கவர்ச்சிகரமான விலையுயர்ந்த ஆடைகள் மற்றும் பாஷன் சம்பந்தப்பட்ட பொருட்கள் இவற்றின் படங்களைக் கத்தரித்து நோட்டுப் புத்தகத்தில் ஒட்டுங்கள். இந்தப் படங்களை ஆர்வத்துடன் பாருங்கள்.

இந்த விலையுயர்ந்த நாகரிக உடைகளை நீங்கள் அணிந்து கொண்டு இருப்பது போல் கற்பனை செய்யுங்கள். உங்கள் உள்மனத்தால் இந்த மனோ சித்திரங்களை நோக்கியபடி மந்திர சுலோகத்தை ஆர்வத்துடன் ஜெபியுங்கள்.

அடுத்தபடியாக உங்களுக்குப் பிடித்தமான மோட்டார் கார் கம்பெனி ஷோரூமுக்குச் செல்லுங்கள். மிக அதிகமான விலையுள்ள மாடல்களின் வண்ண விளம்பரப் படங்களைக் கேட்டு வாங்குங்கள் ''உங்கள்'' காரின் வண்ணப்படத்தைக் கத்தரித்து உங்கள் பத்து இலட்சம் நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி வையுங்கள். அந்தப் படங்களை ஆர்வத்துடன் அடிக்கடி பாருங்கள். இந்தப் படகுக் கார் உங்களுக்குச் சொந்தமானது போல் கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்கள் கற்பனைச் சித்திரத்தை உங்கள் மனக் கண்ணால் பார்த்தபடி மந்திர சுலோகத்தை ஆர்வத்துடன் ஜெபியுங்கள். 'பண்ண வேண்டும் பத்து இலட்சம்! ........ பண்ண வேண்டும் பத்து இலட்சம்!....... பண்ண வேண்டும் பத்து இலட்சம்!...... ( முப்பது தரம் ஜெபியுங்கள்)

உங்களுக்குப் பத்து இலட்சம் ரூபாய் கிடைத்ததும் என்னென்ன பொருள்கள் வாங்குவீர்களோ அவற்றின் படங்களைத் திரட்டி உங்கள் பத்து இலட்சம் நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி வையுங்கள். இதைத் தொடர்ந்து செய்யுங்கள். அந்தப் படங்கள் சித்திரிக்கும் விலையுயர்ந்த பொருள்களுக்கு நீங்கள் சொந்தக்காரர் என்று தீவிரமாக பாவித்துக் கொண்டு அந்தப் படங்களைப் பாருங்கள்.

அடிக்கடி பாருங்கள். அழகிய மாளிகைகளின் படங்கள் கொண்ட ஒரு பத்திரிகையை வாங்கி, அந்தப் படங்களைத் கத்தரித்து உங்கள் பத்து இலட்சம் நோட்டுப் புத்தகத்தில் ஒட்டுங்கள். அத்தகைய மாளிகை ஒன்று உங்களது உடைமையாகி இருப்பது போல பாவனை செய்து கொண்டு அந்தப் படங்களை அடிக்கடி பாருங்கள்.

முக்கிய செய்தித்தாளில் வரும் வணிகப் பகுதியை விடாமல் படியுங்கள். பணம், ஷேர்கள், பத்திரங்கள், முதலீடுகள் இவற்றிலேயே உங்கள் எண்ணங்கள் ஊறட்டும். பத்து இலட்ச ரூபாயை என்னென்ன வகையில் முதலீடு செய்வது என்று நீங்கள் தீர்மானிக்கும் காட்சியை மனக் கண்ணால் பாருங்கள்.

உங்கள் உள் மனத்தால் செல்வம் பற்றிய மனோ சித்திரத்தைக் காணுகின்ற ஒவ்வொரு முறையும் உங்கள் மந்திர சுலோகத்தை ஜெபியுங்கள்: பண்ண வேண்டும் பத்து இலட்சம்! பண்ண வேண்டும் பத்து இலட்சம்!..... பண்ண வேண்டும் பத்து இலட்சம்!......... ( முப்பது தரம் சொல்லுங்கள் )

செல்வம் சம்பந்தப்பட்ட மனோசித்திரங்களைப் படைப்பது எப்படி என்று இதுவரை விளக்கினோம். நீங்கள் வேறு எதை விரும்பினாலும் அது பற்றித் தெளிவாகக் கற்பனை செய்ய இதே நோட்டுப் புத்தக முறையைப் பயன்படுத்துங்கள். உங்கள் உள்மனத்துக்குக் கட்டளையிடும் போது மந்திர சுலோகத்தைப் பலப்படுத்தவும் தீவிரமாக்கவும் நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்களோ அதை, ஏற்கனவே அடைந்து விட்டாற் போன்ற மனோ சித்திரங்களைப் பயன்படுத்துங்கள்.

இந்தக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ள மற்ற எல்லா முறைகளையும் கடைப்பிடிப்பதுடன் இந்தத் தலைசிறந்த, சுய முன்னேற்ற மனோதத்துவ உத்தியை ஒவ்வொரு நாளும் பலமுறை உபயோகப்படுத்தினால் நீங்கள் எதை அடைய விரும்பினாலும் அதை அடைந்து விடலாம். உங்கள் உள்மனத்தில் மனோசித்திரங்களை அழுத்தமாகப் பதிவு செய்ய உதவும் மற்றொரு சிறந்த உத்தி அடுத்த அத்தியாயத்தில் விளக்கப்படும்.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.310 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

எம்.ஏ.எம்.அக்ரம், இல.4/7, உடையார் யாவந்தை, தெலியா கொன்னை, குருநாகல்.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்:

01. செல்வி. விசித்திரா சின்னத்தம்பி, இல.27, புதிய சந்தை வீதி, வாழைச்சேனை.
02. K.பிரியா, தாராபுரம், மன்னார்.
03. தவம் கமலநாதன், 16/1 கோணர் வீதி, மட்டக்களப்பு.
04. R.சுதர்சன், 233/250D, ஹேனமுல்ல முகாம், மாதம்பிட்டிய வீதி, கொழும்பு -14.
05. செல்வி. அ.வினோதா, புனித தெரேசாள் கன்னியர் மடம், ஆலய வீதி, மூதூர்.
06. உதயகரன் ஜெலினா, நாகம்மாள் வீதி, உடுவில், கன்னாகம்.
07. R.C.தினேஸ், புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
08. பி.சிவாஜினி, இல-97, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா.
09. ம.அம்பிகாவதி, 97, கல்லூரி வீதி, திருகோணமலை.
10. திருமதி.வை.டி.மூர்த்தி, 4, முருகன் பிளேஸ், ஹெவ்லொக் வீதி, கொழும்பு -06.

### குறுக்கெழுத்துப் போட்டி 312

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 5 | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | ■ |
| ■ | 14 | 15 | ■ | ■ | 18 |
| 19 | ■ | 21 | 22 | ■ | 24 |
| 25 | 26 | ■ | ■ | 29 | ■ |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

**இடமிருந்து வலம்**

01. இந்த உணர்வுக்கு நாயை உதாரணப்படுத்துவார்கள்.
05. நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை.
07. காலின் ஒரு பகுதி. (திரும்பியுள்ளது)
10. பயம் என்றும் கூறலாம்.
14. சதம் என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது).
21. தானியங்களில் ஒன்று. (திரும்பியுள்ளது)
25. போதை தருவது. (திரும்பியுள்ளது)
31. நகைச்சுவையாக நடந்துகொள்பவன். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. ஆறு என்றும் கூறலாம்.
02. மலை அல்லது மலை உச்சியைக் குறிக்கும். (குழம்பியுள்ளது)
05. கொடிய காட்டு மிருகமொன்று.
15. புத்தகம் என்றும் பொருள்படும்.
18. சம்பளம் என்றும் கூறலாம்.
19. யாகம் என்றும் பொருள்படும்.
26. பாடல் என்பதையும் குறிக்கும்.
29. வேகத்தைக் குறிக்கும். (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 310- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம | 2 னை | 3 தி | 4 ரி | 5 த் | ■ |
| 7 ரு | 8 சி | 9 சு | ■ | 11 ழு | 12 வி |
| 13 ண் | ■ | 15 டு | 16 எ | 17 அ | ■ |
| ■ | 20 வெ | ■ | 22 தி | ■ | 24 ளா |
| 25 சி | 26 மா | ■ | 28 ரி | 29 அ | 30 சீ |
| 31 ம | 32 வை | 33 ன் | ■ | 35 ணை | 36 அ |


**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 17.03.2009 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-312
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.



# இரவே உரு(ற)வானவள்

திகில் தொடர்

திகில் 04

**அதனால்**, அவர்களுக்குப் பல கோயில்கள் மற்றும் காவுகளிலும் பூஜைகள் முடங்கிவிட்டன. கோயில் பராமரிப்பு மற்றும் பூஜைகளுக்கான சம்பளம் கொடுக்கும் அளவுக்கு கதளிக்காட்டு மனைக்கு வருமானமில்லாமல் போனதுதான் காரணம். இப்படிப்பட்ட கோயில்களில் ஒன்றுதான் மேற்குறிப்பிட்ட பகவதி கோயில்.

அங்குதான் ஒரு காலத்தில் கண்களில் கனம் எரிந்து கொண்டிருந்த தேவி குடியிருந்தார். பூஜைகள் முடங்கி, நேரா நேரத்துக்கு விளக்கு ஏற்றக்கூட ஆள் இல்லாமல் போனதால் தேவியின் சக்தி முழுமையாகக் குன்றிப் போய்விட்டது. அதற்கு மற்றொரு காரணமும் இருந்தது.

ஒரு காலத்தில் பகவதி கோயிலிலிருந்து அருகில் கூப்பிடு தொலைவில் கடல் பரவியிருந்ததாம்.

கடலில், கோயில் பகுதியைக் கடந்து செல்லும் எதுவும் அல்லது யாரும் தேவியை வணங்காமல் போக மாட்டார்களாம்.

ஒரு தடவை ஒரு கப்பல் - அது வெள்ளைக்காரர்களுடையது என்று சொல்கிறார்கள். அதற்குள் மாமிசம் மற்றும் மதுவகைகள் இருந்தனவாம்.

தேவியை வணங்காமல், பொருட்படுத்தாமல் அந்தக் கப்பல் கோயில் பகுதியைக் கடந்து செல்ல முற்பட்டபோது, என்ன காரணத்தாலோ அது மேற்கொண்டு நகர முடியாமல் அப்படியே கடலில் ஒரு பாறைபோல் அசைவற்று நின்று விட்டதாம்!

பிரஸ்னம் பார்த்தபோது அதற்குக் காரணம் தேவியின் கோபம் என்பது விளங்கியது. அதன் பொருட்டு கப்பற்காரர்கள் மந்திரவாதி ஒருவரை அணுகினார்களாம். அந்த மந்திரவாதி காஞ்ஞிரங்காட்டு மனையைச் சேர்ந்தவர். அவர்தான் தேவியின் சக்தியைக் குறைப்பதற்கு ஒரு யோசனை சொன்னாராம்.

**தமிழில் சிவன்**

அன்றைய பூசாரியும் அதற்கு உடந்தையாக இருந்தாராம். தேவியின் விக்கிரகத்துக்கு முன்னால் இறந்துபோன ஓர் ஆட்டுக்குட்டியை அறுத்து பலிக்கல்லை அசுத்தமாக்கினாராம்.

அத்துடன் தேவியின் சக்தி குலைந்து போனதாம்.

கப்பலும் பழையபடி பயணம் செய்ததாம். ஆனால், அன்றைய தினத்திலிருந்து அந்தப் பூசாரியின் குடும்பத்தில் அதன் மோசமான பலன்கள் தெரியத் தொடங்கியது. அந்தக் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள் பார்வையற்றவர்களாகவோ, உடல் ஊனமுற்றவர்களாகவோ இருந்தனர். அதற்குப் பின் மிகக் குறுகிய காலத்தில் அந்தக் குடும்பத்தில் எவருமே மிஞ்சாமல் பூண்டோடு அழிந்து போனார்கள். அதற்குப் பின் வந்த ஓர் அமாவாசை நாளில் இரவில் இடி விழுந்து அந்த வீடே அழிந்து போனதாம்!

தேவியின் சக்தி அழிந்து விட்டதைத் தெரிந்து கொண்டதால்தான் மானவிக்கிரமன் நம்பூதிரி அங்கிருந்து தேவமோகினியைக் கடத்திச் சென்றார்.

மறுநாள் சோபனா அந்தர்ஜனம் வழக்கம் போல் விடியற் காலை வேளையில் குளிப்பதற்காகக் குளத்துக்குச் சென்றாள்.

அன்றைய அவளது வருகைக்கு மற்றொரு காரணமும் இருந்தது. ஒரு சில நாட்களுக்கு முன்பாக கதளிக்காட்டு மனையில் பிரஸ்னம் பார்த்தார்கள். அதில் தேவியின் சக்தி குலைந்திருப்பது தெரிந்தது. இருப்பினும் பூஜையை மட்டுமாவது தொடருமாறு பிரஸ்னம் கூறியது. அப்படிப் பூஜைசெய்வது பெண்மணியாக இருந்தாலும் பரவாயில்லை என்றும் அது ஒரு விதிவிலக்கு அளித்தது. குறைந்த பட்சம் வாரத்துக்கு ஒரு பூஜையாவது நடக்க வேண்டும். அதனால், கோயிலுக்குள் செல்ல முடிந்த நாட்களில் எல்லாம் சோபனா தவறாமல் பூஜை செய்தாள். அதற்காகத்தான் இந்தத் தடவை பிரம்ம முகூர்த்தத்திலேயே சோபனா அந்தர்ஜனம் குளத்தை நோக்கி விரைந்தாள்.

கிழக்குப் புற முகட்டில் சூரியன் இன்னும் எட்டிப் பார்க்கவில்லை. இருப்பினும் மலையின் விளிம்புகளில் ஒளிச் சரிகைகள் தென்பட்டன. அதன் மெல்லிய வெளிச்சம், அந்தப் பகுதியின் தெளிவற்ற தன்மையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

உடைகளைக் களைந்து, ஒரேயொரு துண்டை மட்டும் உடுத்திக் கொண்டு, குளத்தின் மேற்புறப் படிக்கட்டில் அவள் நின்று கொண்டிருப்பதைப் பார்க்க நேர்ந்தால் எப்படிப்பட்ட பிரமச்சாரியும் ஒரு கணம் தன்னை மறந்து அப்படியே நின்று விடுவான்.

இயற்கையை ஒட்டிய அவளின் மார்பகங்கள் வீறுடன் விளங்கின. அதன் இரு புறங்களில் இருந்தும் தேன் துளித் துளியாக வடிவது போலிருந்தது. அவளின் தொப்புள்க் கொடியின் கீழ்ப்பகுதியில் துண்டு ஒன்றிணையாமல் விலகியிருந்தது. அதன் இடைவெளியில் கால்கள் ஒன்றிணையும் பகுதியில் காமனின் அம்புகள் ஒளிந்திருந்தன.

அவளின் தொடைப் பகுதிகளிலும்



தங்க நிற ரோமங்கள் பளபளத்தன. அவள் நிதானமாகக் குளத்தின் படிக்கட்டுக்களில் இறங்கியபோது, அவள் உடுத்திருந்த துண்டின் விளிம்புகள் காற்றில் அசைந்து விலகின.

அப்போது பெரிய நீர்க்குமிழி ஒன்று மேற்புறமாக உயர்ந்து நீரின் மேற்பரப்பை அடைந்தவுடன் உடைந்து தெறித்தது.

அதேநேரம் சோபனாவின் பாதத்தை கை ஒன்று தொட்டது. அதன் விரல்களில் மிகவும் கூர்மையான வளைந்த நகங்கள் இருந்தன. அவை, அந்தப் பாதத்தில் ஆழ்ந்து இறங்கின. உடனே அவள் தன் காலை உயர்த்த முயன்றாள். எனினும் முடியவில்லை.

அமானுஷிகமான சக்தி வாய்ந்த அந்தக் கைகள், அவள் காலை வலுவுடன் நடுக்குளத்தை நோக்கி இழுத்தன.

சோபனா படிப்படியாகக் குளத்துக்குள் அமிழத் தொடங்கினாள்.

குளத்தின் மேற்புறப் பரப்பில் படர்ந்து கிடந்த தாமரைக்கொடியின் கிளைகளில் மொட்டுகளாக நின்றிருந்த தாமரை மலர்களின் நடுவிலிருந்து ஏராளமான நீர்க் குமிழிகள் உயர்ந்து உடைந்தன.

நிமிடங்கள் சில கடந்தன.

கடைசியில்-

ஆச்சரியகரமான காட்சி ஒன்று அங்கு தட்டுப்பட்டது. சோபனாவின் உடையற்ற உடல் ஒரு மரக்கட்டை மாதிரி நிமிரத் தொடங்கியது. கடைசியில் அது, குளத்தின் மேற்பரப்பில் கால்களைப் பதிந்து நின்றது. உடலில் எந்தப் பகுதியையும் மறைக்க முற்படாதவளாகத் தரையில் நடப்பது போல் நீரின் மேற்பரப்பில் நடந்தவள், படிக்கட்டில் ஏறத் தொடங்கினாள். பின்பு உடை மாற்றும் அறையில் இருந்த தனது உடைகளை நிதானமாக எடுத்து உடுத்தத் தொடங்கினாள்.

*(தொடர்ந்து மிரட்டுவாள்...)*

---

# இவ்வாரச் சிறுகதை

# விதியின் விளையாட்டு




**நித்திரை** இல்லாமல் தன் கடந்த காலத்தில் நடந்த சம்பவத்தை நினைத்துக் கொண்டிருந்தாள் நந்தினி. எல்லாம் நடந்து முடிந்துவிட்டன இனி நடப்பவை எல்லாம் நல்லபடியாக அமைய வேண்டும் எனத் தனக்குள்ளே நினைத்துக் கொண்டு மறுபடியும் படுத்தாள். முடியவில்லை அவள் பட்ட துன்பம் உடலில் அல்ல உள்ளத்தில் ஊடுருவியது அல்லவா? எப்படி அவளால் நிம்மதியாய்த் தூங்க முடியும்.

நந்தினியும் அசோக்கும் சிறுவயதில் இருந்தே ஒரே பாடசாலையில் கல்வி கற்றனர். இவர்கள் முதலில் நல்ல நண்பர்களாகத்தான் இருந்தார்கள். இந்தச் சமூகத்தில் ஒரு ஆண் ஒரு பெண்ணுடன் கொஞ்சம் நெருங்கிப் பழகினால் எப்படிக் கதைப்பார்கள். அவ்வாறுதான் இவர்களையும் காதலர்களாக மாற்றிவிட்டனர். காதலும் வளரத் தொடங்கிவிட்டது. இருவரும் வைத்திருக்கும் அன்பிற்கு எல்லையே இல்லை. கடல் ஆழம் கண்டாலும் காணலாம் இவர்களின் அன்பின் ஆழத்தை அழவிடவே முடியாது. இந்தக் காதலர்கள் இருவருக்கும் நடுவில் நந்தி மாதிரி இவர்களின் காதலைப் பிரிக்க உருவான கயவன் தான் முரளி. நந்தினி நல்ல வசதியானவள்தான். முரளியை சுத்தமாகவே அவளுக்குப் பிடிக்காது. நந்தினியைத் தான் எப்படியாவது திருமணம் செய்து அவளின் சொத்துக்களைச் சூறையாடவேண்டும் என்பதுதான் அவனின் குறிக்கோள். நந்தினியிடம் போய் அசோக்கைத் தப்பாகச் சொல்வதும் அசோக்கிற்கு நந்தினியைத் தப்பாகச் சொல்வதுமாக இருந்தான்.

நந்தினியினதும் அசோக்கினதும் அன்பிற்கு எதைக் கொடுத்தாலும் ஈடாகாது. இருவரும் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகம் வரை சென்று பட்டம் பெற்று சந்தோஷத்துடன் வெளியேறினார்கள். இவற்றை எல்லாம் பார்க்கும் போது முரளிக்குப் பொறாமையாக இருந்தது. இருவரும் நல்ல வேலை பார்க்கிறார்கள்; கைநிறையச் சம்பளம், அன்பான காதலன் காதலி, ஆதரவிற்குப் பெற்றோர்கள் இதைத்தவிர இவர்களுக்கு என்ன வேண்டும்? முரளி, அசோக் மனதில் நல்ல நண்பன் என்ற பெயருடன் இடம்பிடித்துவிட்டான்.

இவன் இவர்களுடன் பழகுவதோ இவர்களின் காதலைப் பிரிக்கத்தான். இருவரையும் சதி செய்து எப்படியாவது பிரிக்கத் திட்டம் போட்டான். கொஞ்ச நாட்போக நந்தினி இவனின் குணத்தை அறிந்துவிட்டாள். இதைப்பற்றி அசோக்கிடம் சொல்வதற்குப் பயமாகவும் இருந்தது. நந்தினியும் அசோக்கும் எங்கு சென்றாலும் தானும் அவர்களுடன் காரில் ஏறிக் குந்திவிடுவான். அசோக்கும் நந்தினியும் முரளியுடன் அன்பாகத் தான் பழகுகிறார்கள். இவன் மட்டும் தொண்டைக்குள் விஷத்தை வைத்திருக்கிறான் என்பது இருவருக்கும் தெரியவா போகின்றது.

அசோக்குக்கு வேலை விஷயமாக வெளியூர் போக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. நந்தினி இதுவரைக்கும் ஒருநாள் கூட அசோக்கைப் பார்க்காமல் இருந்ததே இல்லை. அசோக் தன்னைவிட்டுப் போவது நந்தினிக்கு கவலையாகத்தான் இருந்தது. அசோக் போவதை நினைக்கும் போது நந்தினி பசி மறந்தாள், இரவு தூக்கத்தை மறந்தாள். இரவை வெறுத்தாள் இது பிரிவின் கொடுமையா எனத் தன் மனதை அலையாய்ப் பாயவிட்டாள். நிலைமறந்து சிரித்தாள் மௌனமாய். வார்த்தைகளைத் தனக்குள்ளே பூட்டிக் கொண்டவளாய்க் கண்ணீர் மல்க தன் சிந்தனையை எங்கோ பறக்க விட்டு வேதனைக்குள் துவண்டு கிடந்தாள்.

அசோக் புறப்படும் நாளும் வந்தது. நந்தினி வீட்டுக்கு வந்த அசோக், நந்தினியின் தாய் கொடுத்த காப்பியைக் குடித்து விட்டுப் புறப்பட ஆயத்தமானான். அப்போது அருகில் நின்ற நந்தினியிடம் பயணம் சொல்ல அவன் மனம் என்னமோ பாடுபட்டது. அதே போல்தான் நந்தினிக்கு.

''சரி நந்தினி.... நான் போயிட்டு வாறன்''

யோசிக்கக் கூடாது...O.K....

''நந்தினி இந்த மூன்று மாதப் பிரிவு உண்மையில் பிரிவு அல்ல. இன்னும் அன்பை அதிகரிக்க இயற்கை தரும் இடைவேளைதான். அதைப் பற்றிக் கவலைப்படக்கூடாது'' என்று கூறிப் போய்விட்டான். இந்த வார்த்தை நந்தினியின் மனதில் அன்பு விதைகளாக பூத்தன; அசோக்கினது அன்பின் ஆழத்தில் நந்தினி நனைந்துவிட்டாள்.

முரளிக்கு நல்ல சந்தோஷமாக இருந்தது. எப்படியும் தான் நந்தினியைத் தன் வசப்படுத்தலாம் என எண்ணி மகிழ்ந்தான். நந்தினி வேலைக்குப் போகும் போது வழிமறிப்பான். அவன் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் போய்விடுவாள். இவனின் இந்தச் செயலைப் பார்க்கும் போது நந்தினியின் உள்ளத்தில் இன்னும் வேதனை அதிகரித்துக் கொண்டே போனது.

அன்றும் ஒரு நாள் முரளி நந்தினியிடம் போய் தன்னைக் காதலிக்கும்படி கேட்டான். தான் ஒருவனைக் காதலிப்பது தெரிந்தும் தன்னை இப்படிக் கேட்க எப்படி மனம் வந்தது. அவளால் என்ன செய்ய முடியும்?

''முரளி..... ப்ளீஸ்...''

கோபுரத்திற்கும் குடிசைக்கும் இணைப்புப் போடாதீர்கள். அசோக்கிற்கு இப்ப அல்ல எப்பவும் நான் துரோகம் செய்யமாட்டேன். என்னைப் புரிஞ்சுக்கோ என்றவாறு போனாள். பகை உணர்ச்சியால் பகையைத் தணிக்க முடியாது, அன்பினால்த்தான் தணிக்க முடியும் என்பதை ஏற்கனவே நந்தினி அறிந்திருந்தாள். எப்படிச் சொல்லியும் முரளி கேட்பதாக இல்லை.

முரளி அசோக்கிற்கு நந்தினியைப் பற்றி தொலைபேசி எடுத்து அவளுக்கு யாரோடை தொடர்பு என்றும் சொன்னான். முரளி சொல்வதை நம்புவதற்கு அப்படியான முட்டாள் அல்ல அசோக். இவன் சொன்னதால் அசோக்கிற்கு எந்தச் சஞ்சலமும் இல்லை.

இவனைப் பற்றி ஏற்கனவே கணக்குப் போட்டுத்தான் வைத்திருக்கின்றான். உண்மையான நண்பன் உயிரையும் கொடுப்பான். போலியான நண்பன் உயிரையும் எடுப்பான் என்பதைச் சும்மாவா சொன்னார்கள். நாட்கள் உருண்டோடின. அசோக் ஊருக்கு வாறசெய்தி தெரியவரவே முரளி மிகவும் ஆத்திரப்பட்டான்.

நந்தினி வேலை செய்யும் இடத்திற்குப் போய் அவளை மிரட்டினான்.

''நந்தினி நீ என்னைக் காதலிக்கவில்லை என்றால் உன் அசோக்கை உயிருடன் இருக்க விடமாட்டேன்'' என்று சொன்னான். நந்தினிக்கு கோபம் வந்துவிட்டது.

''இந்த மனசு, என் உடம்பு, ஏன் என் உயிர் கூட அசோக்கிற்குத் தான் சொந்தம்''

''உனக்கு மனச்சாட்சியே இல்லையா அடுத்தவனுக்குச் சொந்தமானவள் என்று தெரிந்தும் இப்படித் தொந்தரவு கொடுக்க உனக்கு வெட்கமாய் இல்லையா..... முரளி தன் முடிவிலிருந்து மாறவில்லை.

''நந்தினி.... அவசரப்படாதே..... பொறுத்திருந்து பார் என்று கூறிவிட்டுப் போனான். நந்தினி வீட்டுக்குப் போய் நிம்மதியற்று இருந்தாள். இதைப்பற்றி அசோக்கிடம் சொல்ல தொலைபேசி எடுத்தாள் வேலை செய்யவில்லை. ஒருமாதிரி அன்று இரவு போய்விட்டது. காலை எழும்பி அவசரமாக வேலைக்குப் போனாள்.

அதற்கிடையில் முரளி நந்தினியைக் கொல்லத் திட்டம் போட்டான். யாரிடமோ பணத்தைக் கொடுத்து நந்தினி வேலைக்குப் போகும் போது அவளைக் கொல்லச் சொல்லி விட்டுத் தானும் சென்றான்.

அப்போது நந்தினி போகும் போது முரளியும் நந்தினியை முந்திக் கொண்டு போனான். முரளிக்கு எதிரே வந்த லொறி மோதி அந்த இடத்திலேயே முரளி உடல் சிதறிப் பலியானான்.

இதை அறிந்த அசோக் நந்தினி எல்லோருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. இன்னார்க்கு இப்படித்தான் நடக்கும் என்று விதி இருக்கும்போது யாராலும் ஒன்றும் செய்ய முடியாது.

நந்தினி அசோக் இருவரின் வாழ்க்கையிலும் முரளி விளையாட நினைத்தான். விதி மாறாக முரளியின் வாழ்க்கையில் விளையாடிவிட்டது. ***(யாவும் கற்பனை)***

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அனுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்!

**இன்னாதவற்றையெல்லாம்** தவிர்த்து, இனியவைகளையே செய்தல் எல்லா உயிர்க்கும் நன்மைதரும் என்பது பொது நூலாரின் கொள்கை ஆயினும், மற்றவருக்குத் தீமை பயிக்கும் செயல்கள் தமக்கு நன்மையாயிருத்தலும் உண்டு. ஆனால் நன்மை, தீமை என்பது இருபாலாருக்கும் நன்மை தரக்கூடியதொன்றே நன்மை என்னும் ஸ்தானத்தில் இருக்க முடியும், இருக்க வேண்டும் என்னும் கருத்தைக் கூறவந்த வள்ளுவப் பெருந்தகை.

**"தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொல்லோ**
**மன்னுயிர்க்கு இன்னா செயல்"**

தன்னுயிர்க்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், மற்ற உயிர்களுக்கு அத்துன்பத்தைச் செய்தல் எதனாலோ? என்பதாம்.

## சிந்தியா பதில்கள்

**சிந்தியா! யுத்த வெற்றி பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும் என்பதை ஏற்றுக் கொள்கின்றீரா?**

*எஸ்.சுப்பிரமணியம், வவுனியா.*

அழிவு தரும் யுத்தத்திற்கான செலவீனங்கள் குறையும்போது நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் என்பது சரிதான். யுத்தத்தின் வெற்றிக் கம்பம் எத்தனை அப்பாவிகளின் சமாதிகள் மேல் குத்தப்படப் போகிறதோ என்பது தான் மக்களின் கவலையாக இருக்கிறது.

**சிந்தியாவின் பார்வையில் செல்வி ஜெயலலிதாவின் உண்ணாவிரதப் போராட்டம் எதைக் காட்டுகிறது.**

*என்.கதிரமலை, நீர்கொழும்பு.*

"இந்த உண்ணாவிரதப் போராட்டத்தால் ஈழத்தில் பட்டினியாகக் கிடக்கும் தமிழர்களின் வயிறுகள் நிரம்பிவிடாது. மாறாக அவர்களுக்காக நாங்கள் துயரப்படுகிறோம், கவனத்தை ஈர்க்கப் போராடுகிறோம் என்பதை மத்திய அரசுக்கும், சர்வதேச அரசுகளுக்கும் உணர்த்தத்தான்" என்று செல்வி ஜெயலலிதாவே தெளிவாகச் சொல்லி இருக்கின்றார். பாராளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கையில் ஜெயலலிதா நடத்திய உண்ணாவிரதப் போராட்டம்தான் ஒரு அரசியல் விளையாட்டுப் போல் தெரிந்ததாக அங்குள்ள ஊடகங்கள் கூறியுள்ளன.

**வன்னியிலுள்ள மக்களை மீட்க அமெரிக்கப் படைகள் வரவுள்ளதாகச் செய்திகள் அடிபடுகின்றதே. உண்மையா?**

*மா.கணேஸ், வவுனியா.*

அமெரிக்கப் படைகள் வருவதற்குச் சாத்தியமில்லை. மனிதாபிமான உதவிப் பணிகளுக்காக யாரும் வரலாம். சாலையின் தெற்குப் பக்கமாக இராணுவத்தினர் முன்னேறி இருப்பதால் இன்னொரு முன்னேற்றத்திற்குப் பிறகு மக்களைப் படையினர் நேரடியாக மீட்கும் வாய்ப்புக் கிடைக்கலாம். மனிதாபிமானம் என்ற பெயரில் அமெரிக்காவோ, வேறு எவருமோ வரக்கூடாது என்பது இந்தியாவின் நிலைப்பாடு. தனது பங்கைக் காட்டத்தான் மருத்துவக் குழுவை அனுப்பி வைத்துள்ளது.

**அண்மைக்காலமாக நாட்டில் வீதி விபத்துக்களால் பலியாகுவோர் தொகை அதிகரித்து வருவதை அவதானித்தீரா?**

*சி.ருபன், சிலாபம்.*

தலைநகரில் முக்கிய சந்திகளில் கெமரா பொருத்தி அவதானிக்கத் திட்டம் இடப்பட்டிருப்பது போல் ஒவ்வொரு மாகாணத்திலும் விஷேடமான கண்காணிப்பு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். வாகன ஓட்டுநர்கள் மனித உயிர்களைப் பாதுகாக்கும் கடமைப் பொறுப்பை உணர்ந்தாலன்றி வேறு வழி இல்லை.

**சிந்தியா! இலங்கைத் தமிழர்கள் தமது அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தமிழ் நாட்டின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள முடியும் என்பதை ஏற்றுக்கொள்கிறீரா?**

*பி.வெங்கடேஸ், மன்னார்.*

நிச்சயமாக... கனடா அரசியல் அமைப்பு, அயர்லாந்து அமைதி வழிமுறை, ஆச்சே மாநில அமைதி வழிமுறை என்பது நமக்கு முன்னால் பல முன்மாதிரிகள் உள்ளன. நாம் தான் எதையும் தலையில் எடுத்துக் கொள்ளவில்லையே. சரி பரவாயில்லை விடுங்கள். தூரதேசத்தைப் பார்ப்பதை விட இந்தியா விடமே நமக்குத் தேவையான அனைத்தும் உண்டு. 1949 ஆம் ஆண்டு தொடக்கம் 1962 ஆம் ஆண்டு வரை திராவிடர் முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டைத் தனிநாடாக அங்கீகரிக்கும்படிதான் கேட்டும் போராடியும் வந்தது.

பின்னர் சமஷ்டி அரசியல் அமைப்பின் தேவையையும் ஒன்றுபட்ட இந்திய தேசத்தின் சவால்களையும் புரிந்து கொண்டு மாநில அரசுகள் என்ற வழிமுறையை இறுக்கமாகப் பின் பற்றியது. இப்போது ஏனைய மாநிலங்களை விடவும் அரசியல் பலம் கொண்ட மாநிலமாக நிமிர்ந்து நிற்கிறது. மத்திய அரசைத் தீர்மானிக்கும் வல்லமையுடன் திகழ்கிறது. எல்லா வழிகளிலும் அபரிமிதமான வளர்ச்சி கண்டு வருகிறது. மத்திய அரசின் அதிகமான சலுகைகளைப் பெற்றுக் கொள்ளும் மாநிலமாகவும் தமிழ் நாடே திகழ்கிறது. இந்தச் சாமர்த்தியத்தை நாம் ஒரு முன்மாதிரியாகக் கொள்ளலாம். மாகாணசபை மூலமாக இதைச் செய்ய முடியும். தமிழ்த் தலைவர்களும், தமிழ் மக்களும் தமது உறுதியைக் கைவிடாமல் இருக்க வேண்டும்.

**யுத்த வெற்றியை நிரந்தரமாக்குவதற்கு அதிகாரப் பகிர்வு அவசியமென்று எஸ்.பீ.திசாநாயக்க கூறியுள்ளாரே.**

*எஸ்.சிவநேசன், மட்டக்களப்பு.*

யுத்த வெற்றியை என்பதை விடவும் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கும் நாட்டு மக்களின் அச்சமற்ற வாழ்வை உறுதிப்படுத்துவதற்கும் மீண்டும் வன்முறைக் கலாசாரம் தலையெடுக்காமல் தடுப்பதற்கும் அதிகாரப் பகிர்வு மிக மிக அவசியமாகும்.




**சிவாமனசில சக்தி. சிந்தியா உங்க மனசில யார்?**

*ஶ்ரீகரன், கண்டி.*

"படம் பார்த்தீர்களா. எப்படி இருக்கிறது" என்று கேட்பதை விட்டு விட்டு என்மனதில் யார் என்பதெல்லாம் கூடுதல் ஆர்வம். காதலை எப்படிச் சொன்னாலும் சுவாரஷ்யம் தான் என்பதை புதிய இயக்குநரான ராஜேஸ் சரியாகப் புரிந்து கொண்டு களத்தில் குதித்திருக்கின்றார். ஜீவா, அனுயா, சந்தானம், ஊர்வசி, உட்பட்டோர் போடும் நகைச்சுவை ஆட்டத்திற்கு யுவன் இசையமைக்க, சக்தி சரவணம் படமாக்கி இருக்கிறார். நா.முத்துக்குமாரின் வரிகளில், அந்த ஒருபாடல் இனிமை, "ஒரு கல் ஒரு கண்ணாடி உடையாமல் மோதிக்கொண்டால் காதல்" என்ற பாடலை இசையமைத்துப்பாடி யுவன் இனிமை சேர்த்து விட்டிருக்கிறார். முதலுக்கு மோசம் வராத கதைக்காக விகடன் பா. சீனிவாசன் செலவு செய்துள்ளார். எஸ். எம். எஸ். புதுமையில்லை புன்னகை.

**நமது நாட்டில் மழை பெய்யாமல் வரட்சி நிலவியதைத் தொடர்ந்து கண்டி தலதா மாளிகையிலிருக்கும் புத்தரின் புனிதத் தந்தத்தைத் தரிசனத்துக்கு வெளியே எடுத்ததும், காலநிலையே மாறி மழை பெய்கிறதே இது அதிசயமல்லவா?**

*வி.மதி, நுவரெலியா.*

சில விடயங்களை நம்பத்தான் வேண்டியிருக்கிறது. மழைவேண்டி இந்தியாவின் சில கிராமங்களில் தவளைக்குத் திருமணம், கழுதைக்குத் திருமணம், செய்துவைப்பதும் நிர்வாணமாகப் பெண்களை ஓடவிடுவதும் என்று பல நிகழ்வுகள் நடைபெறுவதாகச் செய்திகள் வரத்தான் செய்கின்றன.

நமது நாட்டில் புத்தரின் புனித தந்தத்தைக் காட்டினதும் மழை பெய்கிறது. இதே போல் சீனாவில் கடும் வரட்சி நிலவிய போது அவர்கள் பொறுமை இழந்து காரியத்தில் இறங்கினர். 426 சில்வர் அயோடைட் குண்டுகளை 28 சிறிய ரொக்கட்டுகள் மூலம் ஏவி வானில் வெடிக்கச் செய்தார்கள். வானில் அயோடைட் துகள்கள் தூவப்பட்டதைத் தொடர்ந்து மழைபெய்யத் தொடங்கியதாம். இப்போது வரட்சிபோய் பனி பொழிவுகளை அள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறார்களாம் என்று படித்த ஞாபகம்.

**சிந்தியா இசை உலகின் சிகரங்களான எம்.எஸ். விஸ்வநாதன், இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான் ஆகியோர் தீவிரமான ஆன்மீகவாதிகளாகவே இருக்கின்றனரே கவனித்தீர்களா?**

*ஆ.ஐஸ்வர்யா, கொழும்பு -12.*

இசையின் கடவுள் கலைமகள் என நம்புகின்றவர்கள். இவர்கள் மட்டுமல்ல இசையோடு தொடர்புபட்ட அத்தனை பேரும் முதலில் நல்ல ஆன்மீகவாதிகள் தான்.

சிலர் இறைவனைத் தேடுகிறார்கள். இறைவன்-தனது ஆறுதலுக்காகச் சிலரைத் தேடுகிறான். வேறு தொழில் செய்பவர்களை விடவும் இசையோடு தொடர்புபட்டவர்களுக்கு அமைதி, மென்மை, தனிமை, என்பன ஆன்மீகப் பயணத்துக்கு உதவுகின்றன எனலாம்.

**பாகிஸ்தான் கிரிக்கெட்டின் எதிர்காலம் எப்படி இருக்கும்?**

*வ.கிரிதரன், கொச்சிக்கடை.*

இலங்கை அணி மீதான தாக்குதலுக்குப் பிறகு சிறிய சரிவை பாகிஸ்தான் சந்தித்துள்ளது. 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கோப்பையை நடத்தும் கூட்டு நாடுகளில் பாகிஸ்தானும் இருப்பதனால் அதற்கு முன்னர் பாகிஸ்தான் செய்ய வேண்டிய பணிகள் அதிகமாக இருக்கின்றன. பயங்கரவாதம், தீவிரவாத சக்திகளுக்கு முடிவு கட்டும் முயற்சியில் பாகிஸ்தான் வெற்றிபெற வேண்டும். அந்த இலக்கை அடைய பாகிஸ்தான் இவ்வருடத்துக்குள் முயற்சிக்க வேண்டும்.

அதேவேளை, இலங்கை அணியினரைக் காப்பாற்றிய செயல் வீரன் முஹம்மட் கலீல் இலங்கை வருகின்ற போது அவருக்குச் சிறந்த கௌரவம் வழங்கப்பட வேண்டும். அதுதான் அவருக்கும் நாம் செய்யும் கைமாறு.

# வற்றி விட்ட கண்ணீர்!

**உலர்ந்துவிட்ட** கண்களும் மெலிந்துவிட்ட கைகளும், அவனைப் பிரிந்துவிட்ட வேதனையால் அவள் கொண்ட மாற்றங்கள்.

தாமரைக்கண்ணியின் முகத்தை நோக்கும் போதெல்லாம் அவள் உயிர்த்தோழி அல்லிக்கு அவள் மேலிருந்த பாசம் வெறுப்பாக மாறியது. இருந்தும் அவள் படுகின்ற வேதனையைப் பெரிதாக்க வேண்டாம் என்ற எண்ணத்தால் ஏதோ அவள் பாடு என்று இருந்துவிட்டாள். தாமரையாள் இத்தனை பொறுமை காத்து வந்த போதிலும் கதிரவனின் மனதில் சிறிதேனும் அவள்பால் இரக்கமில்லாது போகக் காரணமென்ன? என்ற எண்ணம் மேலோங்கி நின்றது. எத்தனை புத்திமதி சொன்ன போதிலும் அவனைப் பற்றிய கவலையை அவள் விட்டதாக இல்லையே! ஒரு வேளை அவளிடமே கேட்டுவிட்டால் காரணம் தெரிந்துவிடுமே என்ற அங்கலாய்ப்பில் அவளை நாடினாள்.

தாமரைக்கண்ணியின் முகத்தில் குடிகொண்டிருந்த சோகம் அவள் மனதில் நிறைந்திருந்த வேதனையை வெளிக்காட்டிய போதிலும் அவனைப் பற்றிய நினைவு வரும் பொழுது எப்படி மாறிவிடுகிறது! அது அவன் மேல் கொண்ட பாசமா? தேவையா? என்பது அவளுக்குத்தான் தெரியும்.

ஏனோ அவன் அன்று தாமதித்து வருகிறான். தாமரையாளின் முகத்தில் ஓர் சந்தேகக் குறி தோன்றி மறைகிறது. அவனை உற்று நோக்கினாள். அவன் முகத்தில் ஏதோ ஒரு மாறுதல் தென்படுகிறது. ஏன்? என்ற கேள்விக்கு விடைகாண முடியவில்லை. 'தாமரைக்கண்ணியின் முகத்தில் ஏதோ சஞ்சலம் தோன்றுவது போல் அவனுக்குத் தோன்றியது! "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய் உடம்புக்கு ஏதாவது?..... என்று அவன் கேட்டதும் அவள் பதிலேதும் கூறாது நெடுமூச்செறிந்தாள். 'ஒரு வேளை தான் கொண்டிருக்கும் கள்ள உறவுகள் அவளுக்குத் தெரிந்துவிட்டதோ?" என்று அவன் மனதில் பட்டது. "நான் சிறிது நேரம் தாமதித்து வந்தால் கூட உன்முகம் இப்படி வாடி விடுகிறதே!" சமாளிக்க முயன்றான். தாமரைக்கண்ணி அவன் மேல் வைத்திருந்த அன்பைப் பயன்படுத்த அவனுக்கொரு சந்தர்ப்பம் கிடைத்தது. "நான் ஒருத்தி உங்களுக்காகவே காத்திருக்கிறேன் என்பது உங்களுக்கு எங்கே புரியப் போகிறது?" அவள் பிணங்கினாள். நிலைமையைப் புரிந்து கொண்டு அவளைத் தேற்ற வேண்டியிருந்தது அவனுக்கு. "தாமரை! உன் முகமலர்ச்சியில்தானே நான் மகிழ்ச்சி அடைய வேண்டும். அது உனக்குப் புரியவில்லையா?" என்றவாறு அவள் கைகளைப் பற்றினான். பெண்ணுள்ளம் நெகிழ்ந்தது. காதலில்லுள்ள பற்றுக் குற்றங்களைப் பொருட்டாக நினைக்கவில்லை. கண்களில் ஒருவித மயக்கம் காளையின் உடல் வனப்பில் கட்டுண்டு கிடந்த காதல் உணர்வுகள் கரைபுரண்டன. காந்தத்தில்பட்ட இரும்பு போல் ஒட்டிக் கொண்டுவிட்டாளவள். இதழ்கள் தேன்துளிகளைச் சிந்தின. மனக்கண்களில் தோன்றிய கற்பனைகள் நிஜமாகிக் கொண்டிருந்தன. இளந்தென்றல் காற்று இதமாக இருந்தது. சங்கமித்த உணர்வுகளும் உடல்களும் ஒன்றிவிட்ட நிலையில் உலகையே மறந்திருந்த சிட்டுக்களின் மனதில் ஊரார் வசை மொழியா ஞாபகத்திற்கு வரப்போகிறது? மாலை வேளையல்லவா.

மதுவுண்ட வண்டாக மயங்கிக் கிடந்தானவன். கதிரவன் மார்பில் சாய்ந்திருந்தவள் விழித்துக் கொண்டதும் மார்பை விட்டு விலகிய முந்தானையைத் தேடுவதில் கைகளுக்கு எத்தனை அவசரம். வெட்கம் வேறு அவளைப் பிடுங்கித் தின்றது. தாமரையின் இதழ்களில் லேசான கீறல்கள் குளக்கரையை அடைந்தபோது தெளிந்த நீரில் முகம் பார்த்தாள் கன்னங்கள் சிவந்திருந்தன. லேசாக வலித்தது மனமோ இனித்தது. ஆனாலும் தொடர்வதற்குத் தடைவந்துவிடுமோ? கலைந்துவிட்ட கூந்தலைச் சரி செய்து கொண்டாள். நெற்றியில் இட்டிருந்த குங்குமம் அவன் மார்போடு போய்விட்டது என்பதில் ஐயம் ஏதும் இருக்கவில்லை. கதிரவன் இன்னும் உறக்கத்திலிருந்தான். கைகளில் நீரை மெண்டு அவன் முகத்தில் தெளித்தாள் விழித்தெழுந்தான் கதிரவன்.

தாமரையாள் சிரித்தாள்.

"தாமரை! எனக்கு நேரமாகிறது" அவன் வாயிலிருந்து வந்த வார்த்தையைக் கேட்டுத் துணுக்குற்றாள் தாமரை. பிரிந்து செல்லப் போகிறானே! இதயம் படபடத்தது. தாமரை அவனை நெருங்கினாள் "அதுக்குள் அவசரமா?" அவள் கேள்வியில் ஏக்கம் குடிகொண்டிருந்தது அவனுக்குப் புரிந்தது.

"என்ன இப்படிக் கேட்டுவிட்டாய்? பார்க்க வேண்டிய வேலை தலை கொள்ளவில்லை



இரண்டு நாளில் திரும்பிவிடுவேன்" என்றவன் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டான். அவன் பேச்சை நம்பினாள் அவள். கதிரவன் இருளில் மறையத் தொடங்கினான். அவன் சென்ற பக்கமே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் தாமரைக்கண்ணி. அன்று சென்றவன் இன்றுவரை திரும்பியதாக இல்லை. தோழியின் கை பட்டுத் திரும்பினாள் தாமரையாள். மெதுவாக அவள் முகத்தில் தெரிந்த அன்புணர்வு ஆறுதல் சொல்வது போலிருந்தது.

**"இருஞ்சாய் அன்ன செருந்தியொடு வேழம்**
**கரும்பின் அலமரும் கழனியூரான்**
**பொருந்தும் மலர் அன்ன, என் கண் அழப்**
**பிரிந்தனன் அல்லனோ, 'பிரியலன்' என்றே"** -ஐங்குறு நூறு- 18

## தருவது
## கற்பகன்

# யுத்த நிறுத்தத்துக்கு அழுத்தம் கொடுக்கவே லாகூர் தாக்குதல்!

## -புலிகளின் நோக்கம் குறித்து இரகசியப் பொலிஸார் சந்தேகம்

''இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக்கொண்டு, யுத்த நிறுத்தப் பேச்சுவார்த்தைக்குக் கொழும்பு அரசாங்கத்தை வரச்செய்யும் நோக்கில் லாகூர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம். இந்த அடிப்படையிலேயே விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன'' என்று கொழும்பில் இரகசியப் பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக பாகிஸ்தானிய அதிகாரிகளிடமிருந்து முக்கிய தகவல்கள் விரைவில் கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் அவர் சொன்னார்.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவிடம் கேட்ட போது '' சில விடயங்களை இப்போதைக்குக் கூறுவது விசாரணைகளுக்கு இடைஞ்சலாக அமையலாம். பாகிஸ்தான் அரசின் இடைக்கால அறிக்கையை எதிர்பார்த்துள்ளோம்'' என்று கூறினார்.

''இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்களை இலக்கு வைத்து லாகூரில் நடாத்தப்பட்ட தாக்குதலில் புலிகள் இயக்கம் சம்பந்தப்பட்டிருக்கும் சாத்தியத்தை நிராகரிக்க முடியாது. இதுவரை நடைபெற்ற விசாரணைகளில் சில முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன. அவற்றின் முக்கியத்துவம் குறித்தும், பாகிஸ்தானிய அரசாங்கத்தின் இடைக்கால அறிக்கை கிடைக்கும் வரைக்கும் சில தகவல்களை இப்போதைக்கு வெளியிட முடியாது'' என்றும் அமைச்சர் போகொல்லாகம தெரிவித்தார். பத்தாம் திகதி அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.



லாகூரில் தாக்குதலுக்கு இலக்கான பஸ்

தாக்குதல் சம்பவம் நடைபெற்று ஒருவாரம் கழிந்த நிலையில் சுமார் நூறு பேர் வரை விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். முஹமத் அகில் என்ற தீவிரவாதியொருவரே இத்தாக்குதலின் சூத்திரதாரியெனப் பாகிஸ்தானியப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் நடத்திய ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. தாக்குதல் நடைபெற்ற லிபேர்ட்டி சுற்றுவட்டப் பகுதிக்கு அண்மையிலுள்ள மாடிக் குடியிருப்பொன்றில் முஹமத் அகிலும் அவரது சகாவான தலாத் என்பவரும் வசித்து வந்தனரென்றும் பாகிஸ்தானிய விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். தலாத் கைது செய்யப்பட்டுள்ளாரென்று பாகிஸ்தானிய ஜியோ செய்திச் சேவை அறிவித்துள்ளது.

இவர்கள் தீவிரவாத அமைப்பொன்றினைச் சேர்ந்தவர்களெனத் தெரிவித்த பாகிஸ்தானியப் புலனாய்வாளர்கள், விசாரணைகளைத் தடையின்றி மேற்கொள்வதற்காகவும், சம்பந்தப்பட்டவர்களைக் கூண்டோடு கைது செய்ய வேண்டிய தேவை இருப்பதாலும் விபரங்களை உடனடியாக வெளியிட மறுப்புத் தெரிவித்தனர்.

பாகிஸ்தானிய மற்றும் இந்திய இரகசியப் புலனாய்வுத் துறையினருடன் தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரிவித்த இலங்கையின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர், இரு வாரங்களுக்குள் உண்மைகள் வெளியாகுமெனக் குறிப்பிட்டார். '' புலிகள் இயக்கம் இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டதா?'' என்று கேட்ட போது,

பாகிஸ்தானியத் தீவிரவாத அமைப்புகளுடன் இலங்கையர்கள் சிலர் தொடர்பு கொண்டுள்ளமை குறித்துச் சில தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார். முழுமையான விசாரணைகள் பூர்த்தியடைந்து சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படும் வரை இப்போதைக்கு விபரங்களை வெளியிட முடியாது என்றும் சொன்னார்.

'' புலிகள் இயக்கத்துக்கும் பாகிஸ்தானியப் பயங்கரவாத அமைப்புகளுடன் இருக்கும் தொடர்புகள் குறித்துச் சில முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன. இலங்கையிலிருந்து அண்மைக் காலங்களில் பாகிஸ்தானுக்குச் சென்றவர்கள் பற்றிய முழுத் தகவல்களையும் எம்மால் சேகரிக்க முடியவில்லை. எல்லை கடந்த பயங்கரவாத அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்துச் சம்பந்தப்பட்ட நாடுகளிலிருந்து சரியான தகவல்களைப் பெறமுடியும். இது தொடர்பாக பாகிஸ்தானின் பஞ்சாப்பில் இயங்கிவரும் பயங்கரவாதப் பிரிவினருடன் தொடர்பு கொண்டுள்ளோம்'' என்றும் சொன்னார்.

## வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் விரைவில் சொந்த இடங்களில் குடியேற்றப்படுவர்

புலித் தலைமையின் பிரச்சினை வேறு, தமிழ் மக்களின் பிரச்சினை வேறு என்பதை நான் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளேன். ஏற்கனவே எமது நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த அரசியல் தலைமைகள் இவ்விரு பிரச்சினைகளையும் வெவ்வேறாக்கிப் பார்ப்பதற்குத் தவறிவிட்டன. தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, புலிகளின் பிரச்சினையை வேறாகவும் தமிழ் மக்களது பிரச்சினையை வேறாகவும் பார்த்து வருவதால் தமிழ் மக்கள் தொடர்பில் அவர் மிகவும் தெளிவாக உள்ளார். எனவே எமது மக்களது எதிர்காலம் குறித்து எவ்வித தயக்கமும் இருக்கத் தேவையில்லை என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்துக்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வன்னியில் புலித் தலைமையின் பலாத்காரப் பிடிக்குள் இருந்து தப்பிவந்து, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்களை அங்கு சென்று சந்தித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மக்கள் தங்க வைக்கப்பட்டிருப்பது தற்காலிக ஏற்பாடாகும். இம்மக்களின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி 4000 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். கூடிய விரைவில் இம்மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## சிக்கியுள்ள மக்களை மீட்க அமெரிக்கா வரப்போவதில்லை

முல்லைத்தீவின் 45 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புக்குள் சிக்கியிருக்கும் மக்களை மீட்பதற்கு அமெரிக்கா தயாராகி வருவதாக வெளிவந்த செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாதென இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது சம்பந்தமாக அமெரிக்க அதிகாரிகள் இந்திய பாதுகாப்புத் துறைச் செயலர் சிவ்சங்கர் மேனனுடன் பேசவிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன. இலங்கை அரசாங்கத்தின் அங்கீகாரம் இல்லாமல் அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழையப் போவதில்லை. அத்துடன் புதுமாத்தளன் பகுதியை அண்டிய பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இறக்கப்படும் அமெரிக்கப் படையினரையே மக்களை மீட்கப் பயன்படுத்தப்பட வேண்டியிருக்கும். இவற்றுக்கெல்லாம் இலங்கை அரசின் அங்கீகாரமின்றி அமெரிக்க, இந்திய அரசுகள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கப் போவதில்லையென்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## தேசிய மீலாதுன்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து புலிகளால் விரட்டப்பட்டனர். இவர்கள் இன்னமும் தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளிலுள்ள அகதிமுகாம்களில் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இது தற்கொலைக் குண்டுதாரி நடத்திய தாக்குதல் என்பதால், இது புலிகளின் வேலையே என்று பாதுகாப்புப் பேச்சாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல கூறினார். மீலாதுன் நபி விழா உலக முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஒரு முக்கிய தினமாகும். தேசிய விழாவாக இம்முறை அக்குரஸ்ஸை, கொடப்பிட்டியில் இந்த விழாவை நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

''ஆறு அமைச்சர்கள் இந்த விழாவில் பங்குபற்றினர். பயங்கரவாதிகள் எம்மை இலக்கு வைக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியுள்ளனர். ஒரேயொரு அமைச்சர், மஹிந்த விஜேசேகரா மட்டுமே காயமடைந்தார். தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் ஏழு சடலங்கள் காணப்பட்டன'' என்று எண்ணெய் வள அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தெரிவித்தார். ''அமைச்சர் மஹிந்த விஜேசேகரவின் நிலை ஆபத்தானதல்ல'' என்று ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா கூறினார்.

இச்சம்பவத்தில் கடுமையான காயங்களுக்கு இலக்கானவர்கள் விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர். புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடவடிக்கை காரணமாக அமெரிக்கா, கனடா, பிரிட்டன், இந்தியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட மொத்தம் 31 நாடுகள் அதனைத் தடை செய்துள்ளன. தற்போது வன்னியிலுள்ள முல்லைத்தீவுக் காட்டுப் பகுதிக்குள் சுமார் 45 சதுர கிலோமீற்றர்கள் நிலப்பரப்புக்குள் புலிகள் முடக்கப்பட்டுள்ளனர். சுமார் எழுபதாயிரத்துக்கு மேற்பட்ட மக்களை யுத்த வலயப் பகுதிக்குள் புலிகள் மனிதக் கேடயங்களாகத் தடுத்து வைத்திருப்பதால், மக்களின் பாதுகாப்புக் கருதி மெதுமெதுவாக முன்னேற வேண்டியிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. விரைவிலேயே மரபு ரீதியிலான புலிகளின் தாக்குதல் சக்தியை முறியடித்து விடுவோமென அரசாங்கம் கூறுகிறது. இருந்தாலும் யுத்த வலயத்துக்கு அப்பாலும் கெரில்லாத் தாக்குதல்களை நடத்தக் கூடிய சக்தி புலிகளுக்கு இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## சாலை, பழமாத்தளன் மோதலில் 200 இற்கு மேற்பட்ட புலிகள் பலி;

## 268 ரீ - 56 ரக ரைபிள்கள் உட்பட பெருந்தொகை ஆயுதங்கள் சிக்கின

முல்லைத்தீவு யுத்த முனையில் கடந்த ஐந்தாம் திகதி முதல் ஒன்பதாம் திகதி வரையிலான நான்கு நாட்களுக்குள் நடந்த மோதலில் ஆகக் குறைந்தது இருநூறு புலிகளாவது கொல்லப்பட்டனர் என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்களில் 150 புலி உறுப்பினர்களின் சடலங்கள் கைப்பற்றப்பட்டன என்றும், அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. சாலைக்குத் தெற்காகவும் பழமாத்தளன் பகுதியிலும் இடம்பெற்ற மோதலிலேயே இவ்வளவு தொகையானவர்களைப் புலிகள் இழந்துள்ளனர். புலிகளிடமிருந்து பெருந்தொகை ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.



சாலைக்குத் தெற்குப் புறமாக கடந்த எட்டாம் திகதி இராணுவ முன்னரங்கப் பகுதியை ஊடறுத்து முன்னேறப் புலிகள் பல முயற்சிகளை மேற்கொண்டதாவும், இந்த மோதல்களின் போது நூற்றுக்கு மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் படை வட்டாரங்கள் தெரிவித்தன. சாலைக்குத்தென்புறமாக இருந்து புதுமாத்தளன் கரையோரப் பகுதியினூடாக முன்னேறிய படையினரை ஊடறுத்துத் தாக்கப் புலிகள் எடுத்த பல முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. இங்கு ஏற்பட்ட பாரிய மோதலையடுத்து கடந்த ஒன்பதாம் திகதி மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது நூற்றுக்கு மேற்பட்ட புலி உறுப்பினர்களின் சடலங்களுடன் பெருந்தொகை ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என்றும் படையினர் தெரிவித்தனர்.

களமுனையிலிருந்து கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் மற்றும் விமான வேவுத் தகவல்கள் முன் கூட்டியே கிடைத்ததாலேயே வெற்றிகரமாகத் தாக்குதல்களை நடத்த முடிந்ததென்றும் படை வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகளின் சிரேஷ்ட தலைவர்களான சொர்ணம், லோரன்ஸ், கோபி, ஜெரி ஆகியோர் ஊடறுத்துத் தாக்குதல் நடத்தும் முயற்சியில் ஈடுபட்டனர் என்றும் படை வட்டாரங்கள் தெரிவித்தன. எட்டு ஆர். பி.ஜி ஏவுகணைகள், 268 ரீ-56 தாக்குதல் ரைபிள்கள், ஆறு 60 மி.மீ மோட்டார் ரகத் துப்பாக்கிகள் உட்படப் பெருந்தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பயங்கரவாதிகள் விளையாடிய... (4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் புலிகளுக்கெதிரான தாக்குதல் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கும் நிலையில், இலங்கை கிரிக்கெட் அணி இலக்கு வைக்கப்படலாமென்ற எதிர்பார்ப்பு இரு நாட்டுப் பாதுகாப்புத் தரப்பினருக்கும் இருந்திருக்க வேண்டும்.

பாகிஸ்தானின் உயர்மட்டப் பாதுகாப்புத்துறைத் தூதுக் கோஷ்டியொன்று தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்காவில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த வேளையிலேயே லாகூர் தாக்குதல் இடம்பெற்றிருக்கிறது.

அத்துடன் ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கத் துருப்புகளுக்கு எதிராகப் போராடுவதற்குப் பாகிஸ்தானிலுள்ள மூன்று தலிபான் குழுக்கள் பொது முன்னணி ஒன்றினை அமைத்துள்ளன. இதே வேளை ஏற்கனவே இந்தியாவிலுள்ள சில பயங்கரவாதக் குழுக்களுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கும் புலிகள் இயக்கம், இந்திய - பாகிஸ்தானிய தீவிரவாதக் குழுக்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் சாத்தியங்களும் நிறையவே இருக்கின்றன.

கிளிநொச்சியை அரச படைகள் கைப்பற்றுவதற்கு முன்னதாகவே புலி இயக்கத்தின் இரண்டாம், மூன்றாம் மட்டத் தலைவர்கள் சிலர் பாகிஸ்தான், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்குத் தப்பிச் சென்றிருக்கின்றனர். புலிகளின் ஆயுதக் கொள்வனவாளர் குமரன் பத்மநாதன், அந்த இயக்கத்தின் சாவதேசத் தொடர்பாளராக இரண்டு மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டிருந்தார். இவருக்கு ஏற்கனவே பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இயங்கும் பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்புகள் இருந்திருக்கின்றன. எனவே லஷ்கர்-இ-ராய்பா குழுவினதோ அல்லது வேறெந்த முஜாஹிதீன் அல்லது தலிபான் குழுவினதோ உதவியைப் பெற்று லாகூர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமே பரவலாக நிலவுகின்றது. சில வேளைகளில் புலிகள் பின்னணியிலிருந்து செயற்பட்டிருக்கலாம்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(12.03.2009 தொடக்கம் 18.03.2009 வரை)

ஞானயோகி. டாக்டர். ப.இசக்கி

**மேஷம்:-** மேஷராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். தாயின் உடல் நிலையில் ஏற்பட்டிருந்த பாதிப்புகள் குறைந்து காணப்படும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் மனக் குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம். தந்தை-மகன் உறவுகளில் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி சுமுகமான சூழ்நிலை உருவாகும். சகோதரர்களால் எதிர்பார்த்த ஆதாயங்களை அடைய இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம்.

**இராசியான எண்:-** 9
**இராசியான நிறம்:-** சிவப்பு
**இராசியான திசை:-** தெற்கு
**பரிகாரம்:-** செவ்வாய்க்கிழமைகளில் முருகன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**ரிஷபம்:-** ரிஷபராசி அன்பர்களே, சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். நாட்பட்ட சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் எதிர் பார்த்த சாதகமான முடிவுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. செய்தொழில் விசயங்களில் பங்காளிகளால் எதிர் பார்த்த ஆதாயம் கிடைக்கும். வெகு காலமாகத் திருமணம் ஆகாதவர்களுக்கு மணம் ஆகின்ற காலமாகும். மாணவர்கள் கல்வியில் நன் மதிப்பைப் பெறுவார்கள்.

**இராசியான எண்:-** 6
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** தென் கிழக்கு
**பரிகாரம்:-** வெள்ளிக்கிழமைகளில் மஹாலட்சுமி ஆலய வழிபாடு செய்து வரவும்.

**மிதுனம்:-** மிதுனராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். நீண்ட காலக் கனவான புதிய வீடு நிலம் வாங்கப் போட்டிருந்த திட்டங்களில் வங்கிகளின் உதவிகள் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளால் எதிர்பாராத சலுகைகளும் பணவரவும் உண்டாகலாம். மன மகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்கள் செல்லுவோர்கள் மிகுந்த கவனமுடன் சென்று வருதல் நல்லது. தீராத நாட்பட்ட நோய்கள் தீர வேண்டிப் புதிய மருத்துவர்களின் உதவியை நாடுவதால் நோய் குறைய வாய்ப்பு உள்ளது.

**இராசியான எண்:-** 5
**இராசியான நிறம்:-** பச்சை
**இராசியான திசை:-** வடக்கு
**பரிகாரம்:-** புதன்கிழமைகளில் மஹாவிஷ்ணு ஆலய வழிபாடு செய்து வரவும்.

**கடகம்:-** கடகராசி அன்பர்களே, சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். பிள்ளைகளால் இருந்து வந்த தொல்லைகள் தீர்ந்து மன நிம்மதி அடைவீர்கள். வேலை இல்லாதவர்களின் புதிய வேலை வாய்ப்பிற்கான முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்து சேரும். பூர்வீகச் சொத்து சம்பந்தமாகிய விசயங்களில் பெரியவர்களின் உதவிகளால் நல்ல முடிவுகள் கிடைக்கும். தாயின் உடல் நிலையில் சிற்சில பாதிப்புகள் ஏற்பட்டு அதன் மூலம் பொருட் செலவுகள் உண்டாகலாம்.

**இராசியான எண்:-** 2
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** மேற்கு
**பரிகாரம்:-** திங்கட்கிழமைகளில் அம்மன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**சிம்மம்:-** சிம்மராசி அன்பர்களே, சூரியன் நன்மை தரும் கிரகமாகும். செய்தொழிலில் பங்காளிகளுடன் வீண் மனச் சஞ்சலங்களும், பொருள் இழப்பும் வந்து சேரலாம். கணவன்-மனைவி உறவுகளில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் இன்னும் சற்று நீடிக்கவே செய்யும். வீட்டைத் திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தந்தை மகன் உறவுகளில் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை உண்டாகும்.

**இராசியான எண்:-** 1
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** கிழக்கு
**பரிகாரம்:-** ஞாயிற்றுக்கிழமைகளில் சிவ ஆலய வழிபாடு செய்து வரவும்.

**கன்னி:-** கன்னிராசி அன்பர்களே, கேது நன்மை தரும் கிரகமாகும். தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்குப் புதிய முறை மருத்துவம் மூலம் விடை காண்பீர்கள். விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். வெளிநாடு சென்று வருதல் போன்ற விசயத்தில் பணம் மற்றும் பொருட்களை நம்பிக் கொடுத்து ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். வீண் மனச்சஞ்சலங்களால் காலந் தாழ்ந்த உணவும் தூக்கமும் ஏற்படலாம். விட்டுப் போன பழைய உறவுகள் மீண்டும் தொடரும்.

**இராசியான எண்:-** 7
**இராசியான நிறம்:-** கருஞ்சிவப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** திங்கட்கிழமைகளில் கணபதி வழிபாடு செய்து வரவும்.

**துலாம்:-** துலாராசி அன்பர்களே, ராகு நன்மை தரும் கிரகமாகும். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். தந்தை வழிச் சொத்துக்களில் இது நாள் வரையில் இருந்து வந்துள்ள பிரச்சினைகள் தீர்ந்து சொத்துக்கள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும். மனைவியால் எதிர்பாராத தன வரவு உண்டாகலாம். தீராத நாட்பட்ட நோய்கள் தீர வேண்டிப் புதிய கடன் வாங்குவீர்கள். செய்தொழில் சம்பந்தமான பொறுப்புகளை மற்றவர்களை நம்பிக் கொடுத்துப் பிரச்சினைக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது.

**இராசியான எண்:-** 4
**இராசியான நிறம்:-** கறுப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** ஞாயிற்றுக்கிழமைகளில் பிதுர் மற்றும் அம்மன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**விருச்சிகம்:-** விருச்சிகராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப் போட்டிருந்த திட்டங்களில் சற்றுப் பின்னடைவுகள் ஏற்படலாம். கணவன்-மனைவி உறவுகளில் காரணமற்ற சில மனக் கசப்புகள் வந்து நீங்கும். காரமில்லாத முன் கோபத்தைத் தவிர்த்தல் நல்லது. மற்றவர்களை நம்பிப் பணம் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். வெளிநாடு சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் இன்னும் சற்றுக் கால தாமதம் ஏற்படும்.

**இராசியான எண்:-** 9
**இராசியான நிறம்:-** சிவப்பு
**இராசியான திசை:-** தெற்கு
**பரிகாரம்:-** செவ்வாய்க்கிழமைகளில் முருகன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**தனுசு:-** தனுசுராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். தெய்வத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்ய எண்ணுவீர்கள். நண்பர்களின் உதவியால் வர வேண்டிய பணம் திரும்பக் கைக்கு வந்து சேரும் காலமாகும். கணவன்-மனைவி உறவுகளில் இருந்த மனக் கசப்புகள் தீர்ந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். உத்தியோகத் துறையினர்களுக்குப் பதவி உயர்வுகள் மற்றும் பாராட்டுக்கள் கிடைக்கும்.

**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** வியாழக்கிழமைகளில் தட்சணாமூர்த்தி ஆலய வழிபாடு செய்து வரவும்.

**மகரம்:-** மகரராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு சனி நன்மை தரும் கிரகமாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு இது நாள் வரை ஏற்பட்டு இருந்த தடைகள் நீங்கித் திருமணம் நடைபெற வாய்ப்பு உள்ளது. பொருளாதாரத்தில் இருந்த நெருக்கடியான சூழ்நிலைகள் இன்னும் சற்று நீடிக்கும். நாட்பட்ட தீராத அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களுக்குப் புதிய வழக்குரைஞர்களை நாடுவது நல்லது. வீட்டைத் திருத்திக் கட்டப் போட்ட திட்டங்கள் நிறைவேற இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகும்.

**இராசியான எண்:-** 8
**இராசியான நிறம்:-** நீலம்
**இராசியான திசை:-** தென்மேற்கு
**பரிகாரம்:-** சனிக்கிழமைகளில் சனீஸ்வர ஆலய வழிபாடு செய்து வரவும்.

**கும்பம்:-** கும்பராசி அன்பர்களே, சூரியன் நன்மை தரும் கிரகமாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் திடீர் வரவால் சிற்சில மன நிம்மதி இன்மை ஏற்பட்டாலும் அவர்களால் பொருள் வரவுகள் உண்டாகலாம். மற்றவர்களை நம்பிப் பணம் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையாதீர்கள். செய்தொழிலில் வேலையாட்களால் மன நிம்மதிக் குறைவும், பொருள் இழப்பும் ஏற்படலாம்.

**இராசியான எண்:-** 1
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** கிழக்கு
**பரிகாரம்:-** ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய நமஸ்காரம் வழிபாடு செய்து வரவும்.

**மீனம்:-** மீனராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். கணவன் மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வழக்கு விசயங்களில் சாதகமான நல்ல முடிவுகள் கிடைக்கக் கூடிய காலமாகும். வேற்று மதத்தினரால் ஆதாயம் இல்லை. வெளிநாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்து சேரும் காலமாகும்.

**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** வியாழக்கிழமைகளில் சிவ ஆலய வழிபாடு செய்து வரவும்.




உ
ஓம் சக்தி சிவமயம்
ஓம் அகத்தீஸ்வராய நமஹ
ஓம் ஆதி அகஸ்திய மஹாரிஷியின் திருவருளாலும் அநுக்கிரகத் தாலும் எமது 30 ஆண்டு கால அநுபவத்தின் மூலம் ஆன்மீகம், தியானம், மணிமந்திரம், சித்தமருத்துவம், ஜோதிடத்தின் வழியில் அனைத்து விதமான பிரச்சினைகள் நீங்கி ஆயுள் ஆரோக்கிய ஐஸ்வர்யத்துடன் வாழ அணுகவும்.

**Contact:**
Jothisha Athithya, Jothisha Baruthi, Jothisha Sudar, Muligai Nambi, Mani Manthira, Vaithiya, Jothisa Galagnani
Gnanayohi Dr.p.Esakki, IBAM,RMP, D.I.S.M 18(25B\1), Pulavar Street, Krishnapuram,Kadayanallur-627759
Thirunelveli District Tamil Nadu India. Phone For ISD:0091-4633-243029, Tele Fax:04633243029
Cell:98425-29691,98425-10578, Fax:04633-240390 Email:Paramasivan_esakki@yahoo.com
Website;- www.gnanayohi.com Consultation by appointment only.


## காதில பூ கந்தசாமி



நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
-காதில பூ கந்தசாமி-

**வணக்கமுங்கோ.**

வடக்குக் கிழக்கு மாகாணங்களில கொலைகள் தான் பேர்போன விஷயமெண்டு அதுக்கு பழகிப் போயிட்டம் எண்டது வேற விஷயமுங்கோ. வவுனியாவில புதுசாய்த் தலை தூக்கி இருக்கிற கப்பம் கொள்ளைச் சம்பவங்கள் தான் லேட்டஸ்ட் பிரச்சினையுங்கோ. முன்னம் அதிகமாக நடந்த சம்பவங்கள் பிறகு கொஞ்சம் கட்டுப்பாட்டுக்குள்ள வந்த மாதிரி இருந்திச்சிது. இப்ப கொஞ்ச நாளாய் அதிகரித்துக் கொண்டு வருகுதுங்கோ. யுத்தமொரு தொங்கலை நோக்கிப் போய்க்கொண்டிருக்குதெல்லோ. உது தான் பிரச்சினை. யுத்தத்தைக் காட்டி வயிறு வளர்த்துக் கொண்டு திரிஞ்சவைக்கு இப்ப தான் கஷ்டம் தெரியுதுங்கோ. உழைச்சுச் சாப்பிட்டதை கௌரவக் குறைச்சலாக நினைச்சுக் கொண்டு உப்பிடி கப்பம் வாங்கியும் கொள்ளையடித்தும் பணம் பார்க்கினம் எண்டு பாதிக்கப்பட்ட சனம் சொல்லுதுங்கோ. நடந்த யுத்தம் பல பேருக்கு வாழ்க்கையை இழக்கச் செய்திருக்குதுங்கோ, பல அழிவுகளையும் செய்திருக்குதுங்கோ. மிகச் சில பேருக்கு சோறும் போட்டு சொகுசும் கொடுத்துக் கொண்டது இப்ப தான் தெரியுதுங்கோ. அப்பிடியானவைக்குத் தானுங்கோ யுத்தம் முடிவுக்கு வாறது விரும்பம் இல்லையாமுங்கோ.

தமிழ் மக்கள் அமைதியான அல்லது இயல்பு வாழ்வுக்குள்ள வரக்கூடாது எண்டது தானுங்கோ இப்படியானவையின்ர விருப்பமுங்கோ. எங்கட சனத்துக்கு ஏற்பட்ட இழப்புக்கள், அழிவுகளில புலிகளுக்கும் உந்த மாதிரி சமூக விரோதக் கும்பல்களுக்கும் பெரும் பங்கு உண்டு எண்டும் சனம் சொல்லினமுங்கோ. கிழக்கு மாகாணத்தில ரி.எம்.வி.பி.காரர் தங்கட ஆயுதங்களைக் கையளிச்சிட்டினம் எண்ட செய்தி நல்ல செய்திதானுங்கோ. அவையின்ர துணிச்சலைப் பாராட்ட வேணுமுங்கோ. அது போல வவுனியாவிலையும் உந்தக் கொலை, கொள்ளை, கப்பம் எண்டு திரியிறவை யார் எண்டதை அறிஞ்சு நடவடிக்கை எடுத்தால் அதுக்கும் ஒரு பாராட்டுச் சொல்லலாமுங்கோ.

2002 ஆம் ஆண்டு புலிகள் ஒப்பந்தம் செய்த பிறகு மாற்று அரசியல் கட்சிகளை ஒன்றில் வடக்கு - கிழக்கை விட்டு வெளியேற்ற வேண்டும். இல்லையெண்டால் அவையின்ர ஆயுதங்களைக் களைய வேண்டும் எண்டு புலிகள் சொல்லவும், அப்போதைய பிரதமர் ரணிலும் பின் விளைவுகளைச் சிந்திக்காமல் அதைச் செய்தார். அந்த நேரத்தில எனக்கு நல்லா ஞாபகம் இருக்குது வீணைக் கட்சிக்காரர் தாங்கள் தங்களது மக்களையும் மண்ணையும் விட்டுப்போக ஏலாதெண்டும் புலிகளிடமிருந்து தங்களைப் பாதுகாக்க அரசு தந்த ஆயுதங்களை மீண்டும் அரசிடமே ஒப்படைக்கத் தயார் ஆனால், தங்கட பாதுகாப்பை அரசு பொறுப்பேற்க வேண்டும் எண்டும் சொல்லிச்சினம். அது மட்டும் இல்லையுங்கோ, உந்த ஒப்பந்தம் சரியான வழியில் முன்னெடுக்கப்பட்டு சமாதானம் ஏற்படுத்தப்படுவதற்கு இந்த ஆயுதங்கள் ஒரு பிரச்சினையாக இருந்து விடக்கூடாது என்பதுதான் தமது விருப்பமும் எண்டு சொல்லிக் கையளிச்சினம். பிறகு ஊருக்குள்ள வந்த புலிக்கு நிராயுதபாணியாக நிண்ட மக்களையும், மாற்றுக் கட்சியினரையும் போட்டுத் தள்ளுறதில பிரச்சினை இருக்கயில்லை. கோயிலுக்குப் போனவன், சந்தைக்குப் போனவன், பிள்ளையோட விளையாடிக் கொண்டிருந்தவன், வீட்டிலை தூங்கிக் கொண்டிருந்தவன் எண்டு போட்டுத் தள்ளிச்சினம். பாதுகாப்பு உத்தரவாதம் கொடுத்த சர்வதேச சமூகமும் அரசாங்கமும் கண்ணையும் காதையும் மூடிக்கொண்டு இருந்திச்சினம்.

ஏன் உதைச் சொல்லுறன் எண்டால் பாருங்கோ, கிழக்கு மாகாணத்தில இதுக்கு மேலையும் ஒரு கொலை விழுந்தாலோ ரி.எம்.வி.பி. உறுப்பினர்கள் உட்பட ஏனைய தமிழ் கட்சி உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டாலோ முன்னம் நடந்த அதே பிழை மீண்டும் நடந்ததாகத் தான் அர்த்தமாகுமுங்கோ.

பயங்கரவாதத்துக்கு 'முடிவு கட்ட எடுக்கப்படுகிற தீர்மானமானதும், கடுமையானதுமான நடவடிக்கைகள் போல கொலை, கப்பம், கொள்ளை, மிரட்டல் போன்ற செயல்களில் ஈடுபடும்' சமூக விரோதிகள், இனந்தெரியாத நபர்கள் விஷயத்திலையும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேணுமுங்கோ. அப்படி இல்லையெண்டால் நடக்குற எல்லா விஷயங்களும் சனத்துக்குப் பம்மாத்துக் காட்ட கண்கட்டி விளையாட்டாகத் தானுங்கோ முடியும். ஏதோ நான் சொல்லுறதைச் சொல்லிப் போட்டன் உதின்ர சீரியஸை விளங்கிக் கொள்ளாமல் கந்தசாமிக்கு மண்டை கழண்டுட்டுது எண்டு நினைச்சால் அது உங்கட வீக்னஸ் தானுங்கோ.

### யாவும் கலப்படமற்ற கற்பனை

## அட்மிரல் நெல்சன்

### உலகை வியக்க வைத்தவர்கள்

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தலைவிதியை நிர்ணயித்த கடல் போர். உலகில் ஆதிக்கம் செலுத்துவது பிரான்ஸும், ஸ்பெயினுமா, அல்லது இங்கிலாந்தா என்ற போட்டியிலே இங்கிலாந்துக்கு வெற்றி தேடித்தந்தது, டிரஃ.பால்கர் என்ற இடத்திலே நடந்த கடற்போர். அந்தப் போரில் ஆங்கிலக் கப்பல்களுக்குக் காப்டனாக இருந்து போரை நடத்தியவர், எச்.எம்.எஸ்.விக்டர் என்ற தம் கப்பலின் அறையில் மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தார். எதிரிப்படை வீரன், மறைந்திருந்து சுட்ட ஒரு துப்பாக்கிக் குண்டு, அவரது முதுகைச் சேதப்படுத்தி விட்டது. ஆங்கிலேயர்களுக்குப் பல வெற்றிகளைத் தேடித் தந்த இக்கப்பல் படையின் சேனாதிபதி, பிரெஞ்சுக்காரர்களோடு நடத்திய போர்களில், இதற்கு முன்பே, ஒரு கையையும், ஒரு கண்ணையும் இழந்தவர்தான். அந்த இழப்புக்களினால் அவர் இடிந்து போய் விடவில்லை. கடற்போர் கலையில் புதிய ஆவேசத்தோடு ஈடுபடலானார். அப்படிப்பட்ட மாவீரன் மரணப் படுக்கையிலே, தன் நாட்டை வெற்றிப் பாதையிலே கொண்டு சென்ற பிறகே இந்தக் கொடுமை நிகழ்ந்தது. கடலிலே இன்னும் போர் நடந்துகொண்டிருந்தது. பீரங்கிகள் குமுறிக் கொண்டிருந்தன. கப்பல்கள் கடல் நீரிலே திகுதிகுத்தபடி எரிந்துகொண்டிருந்தன. வெற்றிக்கு வழி வகுத்துத் தந்த காப்டனின் சகாக்களுடைய சடலங்கள் கப்பல்களில் சிதறிக் கிடந்தன. ட்ரஃ.பால்கர் போர் தலைவனின் ஆவியும் பிரிந்து கொண்டிருந்தது.

இந்தவேளையில், அந்த 47 வயது மாவீரனின் நினைவில், எது தோன்றி இருக்கும்? தன் காதலி எம்மாவைப் பற்றியா? இல்லை. அவர் நினைவெல்லாம் தன் தாய்நாட்டின் பாதுகாப்புக்கு என்ன செய்ய வேண்டும் என்பதாகவே இருந்தது. உயிர் பிரியுமுன் அவர் இட்ட கட்டளை என்ன தெரியுமா? "இங்கிலாந்தின் ஒவ்வொரு குடிமகனும் தன் கடமையைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறது!" அப்போது தந்தி கண்டுபிடிக்கப்படவில்லை. செய்திகளை பல்வேறு குறிகளிட்ட கொடிகளைக் கொண்டு அறிவிக்கும் முறை தான் கையாளப்பட்டது. அதன்படி மாவீரன் நெல்சனின் கட்டளையை பல்வேறு கொடிகளை அசைத்துக் குழுமியுள்ள தம் போர்க் கப்பல்களின் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆங்கிலேயனும் நெல்சனின் ஆணையை நிறைவேற்றி, ட்ரஃ.பால்கர் போரின் வெற்றியை பிரிட்டிஷ் அன்னையின் பாதங்களில் சமர்ப்பித்தார்கள்.



பிரான்ஸின் சர்வாதிகாரியான நெப்போலியனின் கனவுகளைக் குலைத்து, ஸ்பானிஷ்காரர்களைத் தலைகவிழச் செய்த இந்த ஆங்கிலேய மாவீரர் ஒப்புயர்வற்ற கடற்படைத் தளபதி ஹொரேஷியோ நெல்சன். 1758 ஆம் ஆண்டு செப்டெம்பர் 29 ஆம் திகதி மைக்கேல்மஸ் தினத்தில், இங்கிலாந்திலுள்ள நார்ஃ.போல்க்கில் ஒரு குழந்தை பிறந்தது. பெற்றோர்களுக்கு அது ஆறாவது குழந்தை. அதற்கு அடுத்து இன்னும் ஐந்து குழந்தைகள் அவர்களுக்குப் பிறக்க இருந்தன! மத போதகரான (பார்ஸன்) தந்தையினால் இத்தனை பெரிய குடும்பத்தை நிர்வகிப்பது ரொம்பக் கஷ்டம். அதுவும், குஞ்சுங் குளுவானுமாகப் பதினொரு குழந்தைகளைத் தவிக்க விட்டு விட்டுத் தாயார் திடீரென்று இறந்து போனாள்.

வியப்புக்கள் தொடரும்

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# அதிகூடிய பாதுகாப்பும்

## ஸ்திரமும் கொண்டது

47 வருட காலமாக மக்களின் பேரபிமானத்தையும் நம்பிக்கையையும் வென்ற மக்கள் வங்கியானது, அதன் ஸ்திரத் தன்மையையும், பாதுகாப்பையும் சேமிப்புக் கணக்குகளில் தொடர்ந்து வழங்கி வருகிறது. அத்துடன் சேமிப்புக் கணக்குகள் தவிர 15% வட்டியினை வழங்கும் சேமிப்புச் சான்றிதழான "கப்துர" மற்றும் 24% வட்டியினை வழங்கும் நிலையான வைப்புகள் போன்றவற்றை மக்கள் வங்கியின் சகல வாடிக்கையாளர்களும் பெற்றுக் கொள்ளலாம்.

**உங்கள் கடின உழைப்புக்கு அதிகூடிய கவர்ச்சியான வட்டியையும், உத்தரவாதமிக்க அரச வங்கியின் பாதுகாப்பையும் பெறுவதானால் இன்று முதல் மக்கள் வங்கியில் சேமிப்பதே சிறந்த வழியாகும்.**

Banking & Financial Services Brand of the Year
PEOPLES AWARDS
2006
2007
2008

Service Brand of the Year
PEOPLES AWARDS
2008

www.peoplesbank.lk

A-(lka) Fitch rating

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி